உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில்
பெரியார்

நா. நந்திவர்மன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில்

பெரியார்

நா. நந்திவர்மன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. முனைவர் ந. வேலுசாமி)

வரிசை எண் : 3

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Ulakap pakuttar̲ivu nīrōṭṭattil Periyār
Author	:	N. Nandivarman 53-B First Floor Kalavai Subburayar Street Puduchery-605 001
General Editor	:	Dr. M. Valarmathi Senior Research Fellow International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	632
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xii+108
No. of Copies	:	1200
Price	:	Rs. 35/- (Rupees Thirty Five Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Periyar E.V.R. among the world rationalism

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் எனும் இந்த நூலை எழுதியுள்ள நந்திவர்மன் அவர்கள் கல்விசார் பணியாளர் அல்லர். எனினும் கல்விசார் பணியாளர்கள் பலருக்கும் அரிய தகவல்கள் மற்றும் சிந்தனைகளை விவாதித்துக் கருத்துக்களை வழங்குவதில் நண்பராக விளங்குபவர். பகுத்தறிவுச் சிந்தனையாளராக விளங்கும் தோழர் புதுச்சேரி மக்களின் நல்வாழ்வின் நடவடிக்கைகளுள் தன்னை எப்போதும் முன்நிறுத்திக் கொண்டு செயற்படுபவர்.

இந்நூலின் நுழைவாயிலில் இவர் எழுதியுள்ள கவிதையின் கருத்தாழம், வெளிப்பாட்டுத் தன்மை, கவித்துவத்தன்மை, பெரியார்பால் தான் கொண்டுள்ள ஈடுபாடு போன்றவை வெளிப்படுகின்றன. பகுத்தறிவுச் சிந்தனைபாற்பட்டவை இவரது எழுத்துருக்கள். பரந்த அறிவுத்தேடல் கொண்டவையாக அமைந்து விளங்குபவையாகும்.

> Aberystwyth University மனித உதவியின்றித் தானே சுயமாகச் சிந்திக்கக் கூடிய ரோபட்டை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளது. (ப.10)
>
> மனித மரபணு கொண்டு மனிதகுலத் தோற்றமும் பரவலும்பற்றி ஆய்வு செய்தவர் இசுபென்சர் வெல்சு! அவரெழுதியது நூலாகவும் வந்தது. குறும்படமாகவும் வெளியாயிற்று. (ப.23)
>
> 20.1.1935இல் 53 எழுத்துக்களில் தமிழ் என்று சிந்தித்த பெரியார் ஒரே ஆண்டில் 1936இல் 38 எழுத்துக்களைத் தமிழைச் சுருக்கிப் பயன்பாட்டுக்கு எளிதாக்குவது பற்றிக் கருத்துரைத்தார். அவரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் ஓய்ந்திடவில்லை. இன்னும் மேலே சென்று உயிர் 10, மெய் 15, ஆய்தம் 1, மெய்க் குறிப்பு 1 என 27 எழுத்துக்களில் தமிழ்மொழி வரிவடிவத்தைச் சுருக்குவது பற்றிப் பெரியார்

சிந்தித்து இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கும் தீர்வாக அமைந்துள்ளதை ஒப்பு நோக்கிப் பாருங்கள். (ப.37-38)

1772இல் முதன் முதலாக The System of Nature *(இயற்கை அமைப்பு) என்ற நூலைப் பால் என்ரி ஒல்பாச் எழுதினார். நாத்திகம் பற்றிய முதன் நூலாக இந்நூல் போற்றப்படுகிறது. (ப.43)*

The impossibility of God *என்ற நூல் கடவுள் இருப்பதற்கான வாய்ப்பே இல்லை என நிறுவுகிறது. மைக்கேல் மார்ட்டினும் ரிக்கி மோனியரும் கூட்டாக எழுதிய நூல் இதுவாகும்*

என இந்நூலின் பக்கங்கள் தோறும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளவாறு பல அரிய சான்றாதாரங்களை எடுத்துக்காட்டி நூலாசிரியர் விளக்கிச் செல்கிறார்.

பகுத்தறிவின் பயணம் முடிவற்றது எனத் தொடங்கும் முதல் இயல் எழுச்சி பொங்கும் நம்பிக்கையை விதைப்பதாக அமைகிறது.

அறிவியல் அகிலம் உருவாகிட நம்முன் உள்ள பொறுப்பாக நூலாசிரியர் சமூகப் பொறுப்புடன் முன்வைத்துள்ளமையினை நினைவுகூரலாம்.

பெரியார் விரும்பிய புத்துலகு பூவுலகில் எல்லா மனிதரும் அறிவால் உயர்ந்திடும் சமத்துவ உலகு! அவ்வுலகமயப் பகுத்தறிவுப் பயணம் முடிவற்றுத் தொடர்வது! இதில் நம் பங்கு என்ன என எண்ணுவோம்! எழுச்சி கொள்வோம்!

இந்தப் பொழிவு பொழிவு நாளன்றே நூலாக அச்சிட்டுவெளியிடப் பெறுவது சாலச் சிறந்ததாகும்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவன முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் மு. வளர்மதிக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

நுழைவாயில்......

அறிவூட்டிய வழிகாட்டி; மாந்த நேயமே பெரிதென என்னுள் நிலைநாட்டிச் சிந்தனைக் கூர் தீட்டிய அறிஞர் அண்ணா தான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியாரே என அடையாளம் காட்டினார். பள்ளிச் சிறுவனாக 1955இல் ஒரு திருமண விழாவில் பெரியார் பேச்சைக் கேட்டேன். எழுபதுகளில் புதுவை நகர மன்ற உறுப்பினர் விடுதியில் தங்கியிருந்த பெரியாரைச் சந்தித்தபோது வயது வேற்றுமை பாராட்டாது அவர் காட்டிய மரியாதை என்னை நெகிழச் செய்தது. பெரியார் மறைந்த பிறகு நான் எழுதிய கவிதை விடுதலை நாளேட்டில் 23-12-1976இல் வெளியானது.

காரிருளில் கடும்புயலில் கலஞ்செலுத்தும் மாலுமிபோல்
கடும்போரில் கணைகளேற்றும் கலங்காத வீரன்போல்
பேரிடரை எதிர்ப்பவராய்ப் பெரியாரே இருந்திட்டபார்
பெருந்துணிவு இருந்ததனால் பெருந்தொண்டு புரிந்திட்டார்
நேரியவோர் பாதையிலல்ல நெருப்பாற்றில் நடந்திட்டார்
நெருக்கடிகள் தமக்கிடையே நிறையுழைப்பு நல்கிட்டார்
பாரிதனில் இவர்க்கிணையாய்ப் பகுத்தறிவாளர் எவருண்டு?
பயன்கருதாப் பேருழைப்பே பெரியாரின் பெருந்தொண்டு!

கல்லடிகள் தமையேற்றும் கருத்துரைகள் வழங்கிட்டார்
காழ்ப்புரைகள் தமக்கிடையே கடும்பயணம் செய்திட்டார்
சொல்லடிகள் தந்தவர்க்கும் சுயவுணர்வு அளித்திட்டார்
சோர்வின்றிப் பகையெதிர்த்துச் சுழன்றடிக்கும் புயலானார்
வல்லடிமைத் தனத்தையே வாழ்வெல்லாம் எதிர்த்திட்டார்
வழக்கிலுள்ள சாதீய வேரினையே அறுத்திட்டார்
கல்லுருவைக் கைதொழுகிற கயமையை அழித்திட்டார்
கருத்தில்லா மதங்களையே களையெடுத்து ஒழித்திட்டார்

ஈடில்லா இவருழைப்பு இல்லாவிடில் நாமில்லை
இவர் தொண்டை மறந்தால் இருந்துமுயிர் பயனில்லை
கேடில்லாச் சமுதாயம் கீழ்த்திசையில் தோன்றிடவே

கீழ்த்தட்டு மனிதனவன் கீர்த்திபெற்று ஓங்கிடவே
வீடெல்லாம் பகுத்தறிவு விளங்கியிருள் ஓடிடவே
விஞ்ஞானச் சிந்தனைகள் வேரூன்றி வலுப்பெறவே
பாடெல்லாம் பட்டவரைப் பகுத்தறிவுப் பகலவனைப்
பாராட்ட வார்த்தையில்லை; பாராட்டா மனிதரில்லை!

எனப் பெரியாருக்கு என் வணக்கம் சொன்னேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் தந்தை பெரியார் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்த அழைத்த போது அகமிக மகிழ்ந்தேன். பெரியாரைப் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதி உலகெங்கும் அவர் தொண்டு கொண்டு செல்லப்படவேண்டும். அதே போன்று பகுத்தறிவு நீரோட்டத்தில் பயணித்த அறிஞர் பலரைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்தல் வேண்டும். இவ்விரு வேணவாக்கள் என்னுள் உள்ளன. இந்நூல் வழி இரண்டாம் விழைவு நிறைவுறுகிறது.

உலகின் முதன் மாந்தன் கருநிறத்தவனே என விஞ்ஞானியர் கண்டறிந்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி எப்படி நான் அறிந்து கொண்டேன்? மனிதனின் பயணம் என்ற தலைப்பில் 2002-ஆம் ஆண்டில் தேசிய நிலவியல் தொலைக் காட்சியில் காட்டினார்கள். நாள்தோறும் தொலைக்காட்சி முன் அமர்ந்து பயனற்ற பல அலைவரிசைகளைப் பார்த்து நாளின் பெரும்பகுதியை வீணடிக்கும் தமிழர்கள் இதைப் பார்த்தே இருக்க மாட்டார்கள். அறிவியல் வீட்டுக்குள் நுழைந்து அறிவு பெருக என வற்புறுத்தினாலும் தம்மை மூளைச்சலவை செய்யும் திரைப்படங்களையும் நாடகங்களையும் பார்க்கும் தமிழர்களைப் பற்றிய டிவிநோய் எய்ட்சு நோயைக் காட்டிலும் கொடியது. ஓரினத்தை முற்றிலும் சிதைத்தழித்து வருவது. நான் பார்த்த அந்த மனிதனின் பயணத்தில் இசுபென்சர் வெல்சு என்னும் அறிஞர் தலைமையில் மரபியல் ஆய்வாளர்கள் உலகின் பல்வேறு இனக்குழுக்களின் குருதித்துளிகளைத் திரட்டி ஒப்பீடு செய்து ஆய்வில் ஈடுபட்டுக் கண்டறிந்த முடிவுகள் வெளிப்பட்டன.

உலகெங்கும் உள்ள மனிதர்களுக்குப் பெரிதும் பொருந்தக் கூடிய பொதுவான மரபணுவை அந்த ஆய்வில் கண்டறிந்தார்கள். கண்டறிந்த குழுத்தலைவர் பெயரின் சில எழுத்துக்களை முன்னொட்டாகக் கொண்டு சேன்மீன் (சேன்மரபணு) என்று பெயரிட்டனர். எல்லா இனத்துள்ளும் எல்லா மாந்தருள்ளும் சேன்மீன் என்ற இந்த மரபணு உள்ளதால் இனத்தினில் தாழ்ந்தவர் யார்? எவருமில்லை. அனைவரும் ஒன்றே. ஆ இனம் என்பதற்கு மரபியல்படி எந்தப் பொருளும் இல்லை. இனம் என்ற பாகுபாடு செயற்கையானது. பண்பாடும் நாகரிகங்களும் தான் இனம் பற்றிய கருதுகோளை

உருவாக்கின. காகேசிய இனம், நீக்கிராய்டு இனம், மங்கோலிய இனம் என்பவை செயற்கைப் பாகுபாடுகளே! இனம் என்பது மாயை. கானல் நீர். இனம் என்று பாகுபடுத்தும் கூறுகள் எதுவும் இல்லை. இந்தக் கண்டுபிடிப்பு வருணாச்சார தருமத்தை வேரும் வேரடி மண்ணுமாக வெட்டி வீழ்த்த வல்ல விஞ்ஞானக் கண்டுபிடிப்பு. அறிவியல் ஆயுதங்கொண்டு அகத்தில் அறிவொளி ஏற்றி மாந்தநேயம் மலர்விப்போம்.

இந்தச் சொற்பொழிவு நூலாக வெளிவரத் துணைநின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றி. இந்நூலை மெய்ப்புத் திருத்திய கவிஞர் வந்தியத்தேவன், முனைவர் செங்கமலத்தாயார் ஆகியோருக்கு நன்றி. தடையில்லாமல் தட்டச்சு செய்து தரும் தங்கை நிகர் திருநிறைச்செல்விக்கு நன்றி. முகப்பு அட்டை வடிவமைத்திட்ட திரு. திருநிறைச்செல்வனுக்கு நன்றி. இந்நூலில் இடம் பெற்ற மனித குலப் பயண விவரமும் விளக்கப்படமும் பிராட் ஷா பவுண்டேசன் பதிப்புரிமை பெற்றவை. அவற்றை இந்நூலில் வெளியிட அனுமதி அளித்த அந்நிறுவனத்தார்க்கு நன்றி! என்னைப் பகுத்தறிவு வாதியாக வைத்திருக்க வினாக்கள் தொடுத்து ஊக்கி வரும் தங்கை பத்மாவதியின் மகள்கள் கனிமொழிக்கும், கயல்விழிக்கும் நன்றி.

நா. நந்திவர்மன்

உள்ளே

பக்கம்

அணிந்துரை

நுழைவாயில்.....

1. பகுத்தறிவின் பயணம் முடிவற்றது 1

2. உலகப் பொதுமறை உயர்வு போற்றும் பெரியார் 12

3. இனமும் பெரியார் மனமும் 20

4. எழுத்துச் சீர்திருத்தமும் இன்றைய ஒருங்குக் குறியும் 34

5. நாத்திகமும் நம் பெரியாரும் 43

6. புதிய வெளிச்சத்தில் விலகும் பழமை இருள்! 52

7. புரட்சிகரப் புதுயுகத்தின் விடிவெள்ளி 58

8. மதங்கடந்து மலரும் புத்துலகம் 65

9. பெரியார் எண்ணமும் : எதிரொலியும் 71

10. பன்நூல் பகுத்தறிவுப் பலகணி 85

10. பெரியாருக்கு முன்னும் பின்னும் 98

11. அறிவு ஆசான் பெரியாரை அகிலமறியச் செய்க! 104

இந்நூல் காணிக்கை...

அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவாக

விழிநீராலே நோயினையே விரட்டிடுதல் முடியுமென்றால்
வேண்டுமட்டும் சொரிந்திருப்பேன். வியன் தமிழில் கவிதைகளைப்
பொழிவதனால் பிணிக்கொடுமை போமென்றால் கோடிகோடிப்
பாடல்களைக் குவித்திருப்பேன். பாசமிகு அண்ணனையே
அழிவினின்று காத்திடவே அளித்திடுக உயிரென்றால்
அகமகிழ்ந்து அளித்திருப்பேன். அவன் நோயை எனக்களிக்கும்
வழியிருந்தால் பெற்றவனை வாழ்ந்திருக்கச் செய்திருப்பேன்
வழியில்லை அழிந்துவிட்டான். வார்த்தையின்றித் தவிக்கின்றேன்.

என்னுயிரைத் தந்தவனை எழுப்பிடவே முடியுமென்றால்
என்தலைவன் கல்லறையில் என்னுயிரை வைத்திருப்பேன்
என்னுடலினைச் சிதைத்தவனின் எழிலுருவம் பெறவியன்றால்
என்னுடலைத் தந்திடுவேன் என்போன்ற இளைஞரெல்லாம்
தன்னுயிரைத் தன்னுடலைத் தந்திடவே வேண்டுமெனில்
தமிழ்நாடே திரண்டிருக்கும் தலைவனவன் உயிர்மீட்க!
தென்னாட்டின் தனித்தலைவன் திரும்பிவர மாட்டானெனத்
தெரிந்திருந்தும் புலம்புகின்றேன். திசையறியா துழல் கின்றேன்

புற்றுநோயை வெற்றிகொண்டு புனிதனவன் வாழ்ந்திருக்கப்
புவியிலில்லை மருந்தென்று புகன்றிட்ட மருந்துவரெலாம்
கற்றும்பய னென்னென்று கடும் மொழிகள் கழறிட்டேன்
கலங்கிட்டேன். தவித்திட்டேன். கண்ணீரை உகுத்திட்டேன்
பற்றுபாசம் கொண்டிருந்த பற்றுக்கோடு இழந்திட்டேன்
பாரினிலே வாணாளெல்லாம் பாழ்நாளே என்றிட்டேன்
முற்றறிந்த அண்ணாவெனும் மூத்தவனை இழந்திட்டதில்
முகம்புதைந்து கலைஞர்தாள் முழுதுமழுது நனைக்கின்றேன்

(அறிஞர் அண்ணா மறைந்த நாளன்று எழுதி நெருக்கடி நிலையில் ஆட்சி கலைக்கப்பட்டு அனைவரும் சிறையில் அடைக்கப்பட்ட இரண்டே நாளில் 2-2-1976இல் முரசொலி நாளிதழில் வெளிவந்த கவிதை)

பகுத்தறிவின் பயணம் முடிவற்றது

> சிந்தனை, பகுத்தறிவு, ஆராய்ச்சி இவைதாம் பெரிதும் மனிதனை இதர மிருகங்கள், பிராணிகளிடமிருந்து பிரித்துக் காட்டுவன ஆகும். சிந்தனா சக்தியைக் கொண்டுதான் மனிதன். மாற்றமோ முன்னேற்றமோ அடைந்து வருகிறான்

என்று மனிதனின் வளர்ச்சிப் பாதையில் பகுத்தறிவு பெற்றுள்ள முதலிடத்தை வலியுறுத்திச் சொன்னவர் தந்தை பெரியார்.

பகுத்தறிவாளர்கள் மேலை நாகரிகத்தில் மட்டுமே முளைத்தவர்கள் அல்ல. கீழை நாகரிகங்களிலும் கிளைத்தவர்கள். எல்லா மதங்களுக்குள் இருந்தும் முகிழ்த்தவர்கள்.

இசுலாத்திலும் சுதந்திரச் சிந்தனையாளர்கள் இருந்துள்ளனர். அச்சிந்தனை "இசதிகாத்" (ztihad) என்று சொல்லப்பட்டது. பழமைக்கும் புதுமைக்குமான போராட்டம் எல்லாக் காலங்களிலும் எல்லா மதங்களிலும் நிகழ்ந்தே வந்துள்ளது. 10 ஆம் நூற்றாண்டளவில் இசுலாத்தில் பகுத்தறிவாளர்கள் இருந்து வந்தனர். அவர்கள் "முத்தாழிலைட்டுகள்" என்று அழைக்கப்பட்டனர். இசுலாமியப் பேரரசுகள் இபின் சினா, இபின் ரஷீத், அல்பராகி, அல்கிந்தி போன்ற அறிஞர்களும் தத்துவ வித்தகர்களும் அறிவியலாளரும் உருவாகத் துணை நின்றுள்ளன. மேலைநாடுகளில் இபின் சென்னா நவீன மருத்துவத்துக்கு அடித்தளமிட்டவர். இபின் ரஷீத் பிளாட்டோவையும் அரிசுடாடிலையும் மறுவாசிப்புக்கு உட்படுத்தியவர். அல் கிந்தியும் அல்பராகியும் முறையே பொறியியலிலும் மேலை நாடுகள் இன்று

போற்றும் சிம்ஃபொனி இசை உருவாக்கத்திலும் புதுமை செய்தவர்கள். இந்த நான்கு நல்லறிஞர்களும் அராபிய மறுமலர்ச்சிக் காலத்திற்கு வித்திட்டவர்கள். அராபிய மறுமலர்ச்சியே மேலைநாடுகளின் மறுமலர்ச்சிக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தது. மேலை மறுமலர்ச்சியின் தந்தையான தாந்தே இதனை ஏற்றுக் கொள்பவர்.

உலகை மையமாகக் கொண்ட பேரண்டத்தையே மேலை நாட்டுக் கிறித்துவம் கூறி வந்தது. அறிஞர் கலிலியோ அக்கருத்தைக் கேள்விக்குறியதாக ஆக்கியிராவிடில் சூரியன் பூமியைச் சுற்றி வருவதாகவே மேலை நாட்டினர் இன்னமும் கூறி வந்திருப்பார்கள். ஆனால் கலிலியோவுக்கு முன்பே இசுலாமிய அறிஞர்கள் இக்கருத்தைக் கூறி வந்துள்ளனர். அச்சைச் சுற்றி வரும் உலகம் (27.88), சூரியனைச் சுற்றி வருகிறது (7:54), தட்டையல்ல உலகம் பந்து போன்ற வடிவுடையது, (39:5) அல்லது முட்டை போன்ற வடிவுடையது (79:30). திருக்குரானில் இடம் பெற்ற இச்சொற்றொடர்கள் கலிலியோவுக்கு 800 ஆண்டுகள் முன்பு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாகும்.

சொர்க்கங்கள் விரிவடைகின்றன (Heavens are expanding) (51:47) என்று பேரண்டம் விரிவடைவதைக் குரான் கூறியது. 1929 - இல் மவுண்ட் வில்சன் சோதனைக்கூடத்தின் தொலை நோக்காடிகள் படம் பிடித்த உண்மையை 14 நூற்றாண்டுகள் முன்பே குரான் கூறியுள்ளது. அண்டம் விரிவடைவது கண்டு பிடிக்கப்பட்டது பெரும் மோதல் கோட்பாட்டுக்கு வழி கோலியது.

இது இசுலாத்தினுள்ளும் பகுத்தறிந்து கூறிய அறிவாளர்கள் இருந்துள்ளார்கள். மேலை நாகரிகத்துக்கும் முன்பே அறிவியல் உண்மைகளை அறிந்தும் வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

> விஞ்ஞான அறிவில்லாதவன் எவ்வளவு பெரிய படிப்பாளியாய் அறிவாளியாய் இருந்தாலும் உலகத்திற்குப் பயன்படாதவனே ஆவான். மனிதன் பூரண மனிதன் ஆக வேண்டுமானால் தானாகவே சட்டம் தெரிந்து கொள்ளவும் தானாகவே வைத்தியம் தெரிந்து கொள்ளவும் தானாகவே பொறியியல் தெரிந்து கொள்ளவும் தகுதி உடையவனாகவும் இவைகளைக் கையாளக் கூடியவனாகவும் ஆக

> வேண்டும். இப்படிப் பட்டவன்தான் மனிதன் என்று சொல்லத்தக்கவனாக ஆவான் என்பதோடு இப்படிப்பட்டவன்தான் மனித சுதந்திரம் பெற்றவன் ஆவான்

என்று பெரியார் மனிதனுக்கு இலக்கணம் கூறுவார்.

ஒரு கடலோடிக்கு விஞ்ஞானம் தெரிந்திருக்க வேண்டும். கடலாளி கடலைக் கடக்கும் கலை தெரிந்தவனாக இருந்தால் மட்டும் போதாது. எனச் சார்லசு டார்வினின் முழுமையான படைப்புகள் Complete works of Charles Darwin online இணையத்தில் உள்ளன. அதில் சி.ஆர். டார்வின் 1851 இல் எழுதிய A Manual of Scientific Enquiry: Prepared for the use of her Majesty's navy and adapted for travellers in general என்ற நூல் இடம்பெற்றுள்ளது. நிலவியல் பற்றிய அறிவு கடலோடிக்கு வேண்டும் என்பார் டார்வின். பல்துறை அறிவும் தேவைப்படும் காலத்தில் வாழ்கிறோம். அர்னால்டு டாயின்பீ ஏப்ரல் 14-1889இல் பிறந்து அக்டோபர் 22-1975இல் மறைந்த வரலாற்றுப் பேரறிஞராவார். நாகரிகங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றி அந்தப் பிரித்தானியப் பேரறிஞர் Study of History என்ற தலைப்பில் 12 தொகுதிகளாக எழுதினார். அதில் அவர் தொடாத துறையே இல்லை. ஒரு வரலாற்றாசிரியனுக்கு எல்லாத் துறைகள் பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்திருக்க வேண்டும். சிலதுறைகள் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும் என்று புது இலக்கணம் சொன்னார். இந்தக் கருத்தைத் தழுவிப் பேரறிஞர் அண்ணா சொன்னார்: "A politician should know something about everything and every thing about something" முழுமாந்தனாக அறிவியல் தெரிந்திருத்தல் காலத்தின் கட்டாயமாகிறது. இதைப் பெரியார் மனிதனுக்குரிய இலக்கணமாகவே பதிவு செய்துள்ளார்.

> மனிதனுடைய அறிவுக்கு உள்ள சக்தியின் எல்லையை எவராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அவனுடைய அறிவு நாளுக்கு நாள் புதுமையை நோக்கிப் போய்க் கொண்டே இருக்கின்றது. நம் அறிவுக்குப் புரியாததும் நினைக்கவே முடியாததும் ஆன அதிசய அற்புதங்கள் எல்லாம் தினம் தினம் வந்த வண்ணமே உள்ளன

என்றார் பெரியார். சிந்திப்பதை மனிதன் நிறுத்தி இருந்தால் புதுமைகள்

மலர்ந்திருக்குமா? பகுத்தறிவை மனிதன் பயன்படுத்தியிராவிடில் கணக்கற்ற கண்டுபிடிப்புகள் வெளி வந்திருக்குமா? உலகப் பகுத்தறிவு நீரோட்டம் தங்கு தடையற்று நதியாகத் தமிழகத்தில் பாய்ந்து வளமாக்கிய பெரிய ஆறு பெரியார்.

1932 பி.பி.சி. ஒலிபரப்பில் எச்.ஜி. வெல்சு (Departments and Professors of foresight) தொலைநோக்குப் பார்வை கொண்ட பேராசிரியர்கள் அடங்கிய எதிர்காலவியல் துறை உருவாக்கப்படல் வேண்டும் என்றார். பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் பல்துறைப் பேராசிரியர்கள் அடங்கிய எதிர்காலவியல் துறையாகவே செயல்பட்டு, தமிழகத்தை ஏற்றமுறச் செய்தது. கைவல்ய சுவாமிகளும் சந்திரசேகரப் பாவலர்களும் பகுத்தறிவுக் கண்கொண்டு அலசி ஆய்ந்தனர். பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் தமிழர் வரலாற்றை மீட்டுருவாக்கினார். அறிஞர் அண்ணா பொதுக் கூட்டங்களையே மாலைநேரக் கல்லூரிகளாக்கி ஒட்டு மொத்த தமிழகமும் கற்றோர் அவையாக மாறிடும் வண்ணம் பகுத்தறிவுப் புரட்சியைச் செயலாக்கிக் காட்டினார்.

தமிழகத்தில் பெரியார் இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்த பொழுதுதான் 1940இல் செருமானியப் பேராசிரியர் Ossip K. Flechtheimin எதிர்கால இயல் (Futurology) என்ற சொல்லை உருவாக்கினார். பொருளியல், சமூகவியல், நிலவியல், வரலாறு, பொறியியல், கணிதவியல், மனவியல், இயற்பியல், வானியல் எனப் பல்துறைகளில் எதிர்கால நோக்கும் போக்கும் புதிய சிந்தனைகள் உருப்பெறுவதை எதிர்கால இயலுக்குள் அடக்கும் நிலை 1940 முதல் உருவாகியது.

இவைகளை அறிய நூலகங்களை நாடலாமா? நூலகங்களின் பயன்பாடு அறிவை விசாலமாக்கப் பயன்பட்ட காலம் கடந்த நூற்றாண்டு. இந்த நூற்றாண்டில் தேவைப்படும் நூல்கள் அனைத்தும் நூலகங்களில் கிடைக்கா. வாங்கி அடுக்கவும் இடமிருக்காது. அரங்குகள் தேடிச் சென்று திரைப்படம் பார்த்த காலம் போய் அறைக்குள் அமர்ந்தபடி படம் பார்க்கும் காலம் இது. அறைக்குள் நூலகம் நம் கணினி வழியே வந்துவிட்ட காலம் இது. ஊருருக்குப் படிப்பகம் - மன்றம் அமைத்துப் பகுத்தறிவைப் பெரியாரும் அண்ணாவும் அவர்தம் அறிவியக்கமும் ஊட்டிய காலம் அந்தக் காலம். கணினியில் கற்றுக் காசினியில் உயரலாம் என்பது இந்தக் காலம். இணையத்தில் www.questia.com என்ற இணையத்தளத்தில்

67,000 நூல்களும் 1.5 மில்லியன் கட்டுரைகளும் உள்ளன. lib-web-cats இணையம் 5000 நூலகங்களுக்கான இணைப்பை நல்குகிறது. Lib Dex இணையத்தளம் 16000 நூலகங்களோடு நம்மை இணைக்கும் சங்கிலித் தொடரை அறிமுகம் செய்விக்கிறது. Libweb இணையத்தளம் 100 நாடுகளில் உள்ள நூலகங்களை நமக்கு அறிமுகம் செய்கிறது. எவர்துணையும் இன்றி ஒவ்வொரு மனிதனும் அறிவைப் பெருக்கிடப் பெரியார் விரும்பினார். அதற்காக ஆயிரம் வாயில்கள் இன்று திறக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி ரோமன் ரோலண்டு நூலகத்தில் 3,38,304 புத்தகங்கள் இருந்தன. 1,20,000 தமிழ் நூல்களும் ஆங்கில இலக்கியம் 1,75,000 நூல்களும் அதில் அடக்கம். அக்டோபர் 9,2004 சனிக்கிழமை நியு இந்தியன் எக்சுபிரசில் நானெழுதிய கட்டுரையில் இந்தப் புள்ளிவிவரங்கள் தரப்பட்டுள்ளன.

டெக்சாசுப் பல்கலைக்கழகம் Digital Book Index வெளியிட்டது. 79,000 நூல்கள் இலவசமாகக் கணினி வழிப் பெறக் கூடியதாக உள்ளன. ஒலிவடிவில் 1300 நூல்களைக் கேள்வி ஞானம் பெற்றுயர டெக்சாசுப் பல்கலைக்கழகம் இணைய வழி இலவயமாகத் தருகிறது.

வரலாறு தொடர்பாக அடிக்கடி மேற்கோள் காட்டப் பயன்படும் தகவல்களைப் பல்வேறு பல்கலைக்கழகங்கள் வெளியிட்ட வரலாற்று நூல்களில் இருந்து பிழிந்து சாறு போல 500 குறிப்புகளை History E - project வெளியிட்டுள்ளது. தமிழர் வரலாற்றுத் தொன்மை பற்றிய பல்துறை அறிஞர் மேற்கோள்கள் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர் இரா. மதிவாணன் முதன் முயற்சியாக ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். முழுமையான மேற்கோள் - தகவல் திரட்டை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடல் வேண்டும்.

தகவல்களை உரிய முறையில் அறியாததாலும் தகவல்களை உலகின் கவனத்துக்குக் கொண்டு செல்லத் தவறியதாலும் தமிழர் வரலாறு உலகின் முன் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. யுனெசுகோ நிறுவனம் 1999 நவம்பர் 17 முதல் ஒவ்வோராண்டும் பிப்ரவரித்திங்கள் 21 அன்று உலகத் தாய்மொழிகள் நாளைக் கொண்டாடுகிறது. மொழிப்போர் நடத்தி எண்ணற்ற உயிர்களைத் தியாகம் செய்தது தமிழகம் என்ற வரலாறு யுனெசுகோவிற்கு கொண்டு செல்லப்படவில்லை. ஆனால் 1950-52இல் பாக்கித்தானின் ஒருபகுதியாக அன்றிருந்த வங்கதேசத்தில் பாக்கித்தான் முழுமைக்கும்

உருதுமொழி மட்டுமே ஆட்சிமொழி என்ற அறிவிப்புக்கு எதிராக (Basha Andolan Dibosh) மொழிப் புரட்சி மூண்டது. டாக்கா பல்கலைக்கழக மாணவர்களும் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் 21 பிப்ரவரி 1952இல் கண்டனப் பேரணி நடத்தினர். உருது மொழிக்கு இணையான தகுதியை வங்கமொழிக்குக் கோரிப் போராடினார். கண்டனப் பேரணியை நசுக்கக் காவல்துறை கட்டவிழ்த்து விட்ட துப்பாக்கிச் சூட்டில் அப்துல்சலாம், ராஃபிக்கின் உதின் அகமது, சொபியூர் ரகுமான், அப்துல் பர்கத், அப்துல் சப்பார் ஆகிய நால்வர் உயிரிழந்தனர். நால்வர் உயிரிழந்த தியாகத்தை, உலகம் கொண்டாடுகிறது உலகத் தாய்மொழிகள் நாளாக! தீக்குளித்தோம் எனினும் உலகுக்கு எடுத்தியம்பத் தவறினோம்! எண்ணருந்தியாகமும் செய்தும் சுணங்கினோம் எடுத்துச் சொல்ல! அதுவும் தகவல் புரட்சியுகத்தில் தடுமாறினோம்! உலக மதிப்பை ஈட்டத் தவறினோம்!

> மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய
> வேண்டுமாயின் தன்னம்பிக்கை உடையன வாகவும்
> தனது சக்தி என்ன என்பதை உணர்ந்த வனாகவும்
> இருக்க வேண்டும்

என்பார் பெரியார். தமிழன் தன்னம்பிக்கை அற்றவனாக உள்ளதால் தன் வரலாற்றை யுனெசுகோவுக்கு எடுத்துச் சொல்லும் தகுதி அற்றவனாகத் தன் மதிப்பைத் தரணியில் பதிய வைக்கத் தவறினான்.

எழுத்தைக் கருவியாக்கி எண்ணப்புரட்சி ஏற்படுத்திய இயக்கம் பெரியாரின் அறிவியக்கம். ஆயின் பழமையைப் பகுத்தாய்ந்து அலசிய அளவு புதிய படைப்புகள் எதிர்கால நோக்கில் படைக்கத் தவறினார்கள்.

மேலைநாடுகளிலோ கதைகளும் திரைப்படங்களும் தொலை நோக்குச் சிந்தனையைத் தூண்டின.

மார்க்ரெட் அட்டாவுட்டு எழுதிய நாவலில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மர்மமாகக் கொலை செய்யப்பட்டு அடிப்படை வாதிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதாகக் கருவை வைத்துப் புனைகதை எழுதினார். பெண்கள் சொத்துரிமை பறிக்கப்படுகிறது. பெண்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகின்றன. பைபிளை மட்டுமே பரப்ப வானொலி இயங்குகிறது! பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தடை என்றெல்லாம் செய்திகளை ஒரு பெண் தன் நாட்குறிப்பில் எழுதுவது போல் மார்க்கிரட்டு அட்டாவுட்டு எழுதினார்.

பெண்ணியம் பேசிப் போராடியவர் பெரியார். பெண்களும் போராட நாவல்கள் வழியாகவும் ஊக்கப்படுத்தினர் மேலையர்.

1979 இல் ஆர்தர் சி.கிளார்க் "The Foundations of Paradise என்ற நாவல் எழுதினார். வீட்டுக்குள் பயன்படுத்தும் ஏணிப்படிகளை அறிவீர்கள்! அடுக்கு மாடிக் கட்டடத்தில் தானியங்கி ஏணியையும் அறிவீர்கள்! வான்வெளிக்கு ஏணி வடிவமைப்பது இயலுமா? நாவலாசிரியர் எழுத்தில் கனவைப் பதிவு செய்தார். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான "நாசா" விஞ்ஞானிகளோ கார்பனும் நானோடியூபும் கலந்த கலவையால் விண்வெளிக்கு ஒரு ரிப்பன் போன்ற சங்கிலியை உருவாக்கியுள்ளனர். இன்னமும் 10 ஆண்டுகளில் வானவீதியில் 240 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள அனைத்துலக விண்வெளி ஆய்வு மையத்துக்குச் சென்று சேரும் ஏணியை (Lift) உருவாக்க உழைக்கின்றனர். மூன்று மணி நேரத்தில் பூமியில் இருந்து விண்வெளி ஆய்வு மையத்துக்கு செல்லக் கூடிய தானியங்கி ஏணி உருவாகிறது. நாசா பொறியியல் அறிஞர் பிராட் எட்வர்டு ஒரு காரை வடிவமைப்பதைவிட இந்த ஏணியை உருவாக்குதல் எளிது என்கின்றார்.

இந்த நூற்றாண்டில் மனிதன் அடையப் போகும் சாதனைகளைக் கற்பனை செய்து நாவலாக்கி அறிவியலுக்கே உரமிடும் அறிஞர்கள் அங்கே! அறிவியல் கருவிகளான தொலைக்காட்சிகளையும் பழமையைப் பாதுகாக்க மூளைச் சலவை செய்யும் கூட்டம் இங்கே! ஆர்தர் கிளார்க் 21 ஆம் நூற்றாண்டில் நடைபெறப் போவதைக் கற்பனை செய்கிறார்.

2010இல் விண்வெளியில் இருந்து உலகிற்குத் தேவையான எரிசக்தியின் புதிய வடிவம் கண்டுபிடிக்கப்படும் என்பது அவரின் கனவு இலக்கு ஆகும். மலிவு விலையில் கிடைக்கக் கூடிய இந்தப் புதிய எரிசக்தி கண்டுபிடிக்கப்பட்டால் எண்ணெய் எரிவாயு நிறுவனங்கள் மூடப்படும் என்கிறார் அவர்.

2010 க்குள் என்னதான் பெரிய அண்ணன் போல அமெரிக்கா நடந்து கொள்வதாக மற்றவர்கள் குறை கூறினாலும் குற்ற நடவடிக்கைகள் கண்காணிப்பில் அமெரிக்கா வெகுதூரம் முன்னேறி இருக்கும். இதன் பயனாய் உலகில் குற்றங்கள் குறைந்திருக்கும் என்பதும் நாவலாசிரியரின் எதிர்பார்ப்பு ஆகும்.

2011இல் விண்வெளிப் பயணங்களை மனிதன் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கனவு காண்கிறார். 2015இல் "பொருள்" பற்றிய

முழுமையான அறிவை பெற்று “அணு” அளவில் உள்ள பொருளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை மனிதகுலம் பெற்றிருக்கும் என்பார் இவர். 2016இல் எல்லா நாட்டு நாணயங்களும் ஒழிக்கப்பட்டு உலக முழுமைக்குமான பொது நாணயமுறை வழக்குக்கு வந்திருக்கும் என்பதும் ஆர்தர் கிளார்க்கின் எதிர்காலவியல் ஆசைகளுள் ஒன்றாகும். 2095இல் அருகில் உள்ள நட்சத்திர மண்டிலங்களில் மனிதன் காலடி வைப்பான். மனிதனுக்கு முன்பாகவே ரோபட்டுகள் சென்று திரும்பி இருக்கும். இப்படி நாவலாசிரியர்கள் கற்பனை செய்யும் காலத்தில் நாம் எப்படி இருக்கிறோம்?

சாதாரணப் பொதுமக்களும் அறிவியலைத் தாமாகவே படித்தறியப் பெரியார் சொன்னார் எனில் அமெரிக்க நாட்டு உளவு நிறுவனமான பென்டகன் அறிவியல் அறிஞர்களுக்குச் சினிமாக் கதை எழுதுவது இயக்குவது எப்படி என்று கற்பிக்கச் செலவு செய்தது. அமெரிக்கத் திரையுலக நிறுவனத்தில் மருத்துவ ஆய்வறிஞர்களை, பொறியியல் வல்லுநர்களை, வேதியல் / இயற்பியல் வித்தகர்களை எனப் பல்துறை அறிஞர்களையும் அறிவியலை மக்களுக்குப் புகட்ட திரைக்கலையை ஒரு கருவியாகக் கற்றுக் கொள்ள இராணுவ அமைப்பான பென்டகன் திட்டம் தீட்டுகிறது. இளைஞர்களை அறிவியல் பால் ஈர்க்க அமெரிக்க இராணுவம் இப்படி சிந்திக்கும் போது ஆயுதங்களுக்குப் பூசையிட்டுப் புதுவது கண்டுபிடிக்கும் முனைப்பற்று மூளை மழுங்கிக் கிடக்கிறோம். தெற்குக் கலிபோர்னியா பல்கலைக்கழக மின்னியல் பொறியியல் பேராசிரியர் மார்டின் கண்டர்சனின் மூளையில் முகிழ்த்த திட்டம் அறிவியல் மக்களுக்குச் சென்று சேர “சினிமாவை”ப் பயன்படுத்துவதை நோக்கமெனக் கொண்டது.

ஒவ்வொரு ஆண்டும் உங்கள் பிறந்த நாளை ஒரே வாரத்தின் அதே நாளில் மீண்டும் கொண்டாட உங்களால் முடியும். ஜான் ஆப்கின்சு பல்கலைக்கழக இயற்பியல் பேராசிரியர் டிக்ஹென்ரி வடிவமைத்துள்ள நாட்காட்டி எல்லா ஆண்டும் எல்லா நாளும் அதே நாளில் வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒருலகச் சந்தை என்கிறோம்! ஒருலகம் கிராமம் ஆகிவிட்டது என்கிறோம். ஒரே நாணயமுறை நோக்கி நகர்கிறோம்! உலகெங்கும் ஒரே நாணயமுறை வந்தால் தான் சூதாட்டப் பொருளாதாரம் ஒழியும் என்று திராவிடப் பேரவை தன் கொள்கைப் பிரகடனத்தில் 26.10.1996இல் இந்தியத் தேர்தல் ஆணையப் பதிவிலேயே பதிந்துள்ளது. ஒரே நாட்காட்டி

உருவாகிறது. ஒரே காலங்காட்ட அணுக்கடிகாரங்கள் துல்லியமாக உருவாகின்றன.

மனித மூளையின் செயல்பாட்டைச் சீரமைக்க Functional Magnetic Resonance Imaging என்ற தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மூளைக்குள் செல்லும் உதிர ஓட்டத்தைக் கணக்கெடுக்க, கண்காணிக்க இந்தப் படப்பிடிப்பு உதவுகிறது. வயதுக்கு ஏற்ப வளர்ச்சி பெறாத மூளைகளைக் கண்டறிய இந்தக் கண்காணி உதவுகிறது. மூளை வளர்ச்சி குன்றியோர்க்கு மட்டுமே இத்தொழில்நுட்பம் பயன்படும் என்று எண்ணத் தேவை இல்லை. மேலும் ஆய்வு செய்தால் மனிதனின் அறிவுக் கூர்மையை இன்னும் சீராக்க முடியும். மூளையில் சிலவற்றைப் பொருத்தி (Neural implants) மூளை சுறுசுறுப்போடும் அறிவுக் கூர்மையோடும் செயல்பட வைக்கக் கூடும். அத்தகு காலம் நோக்கி அறிவியல் போய்க் கொண்டுள்ளது.

இருட்டறையில் தமிழர்கள் இருந்தோம்! உலகம் போகும் போக்கை அறியாது இருந்தோம்! கண்ணிருந்தும் குருடராய், அடிமைத்தனத்தை விரும்பி ஏற்று அடங்கிக் கிடந்தோம்.

> இரண்டாயிரமாண்டு இடைக்காலத்தில் மக்கள் தங்கள் சொந்தப் புத்தியை உபயோகிக்கும் உரிமையை முற்றிலும் இழந்திருந்தார்கள். ஏன்? எதற்கு? எப்படி என்ற கேள்விகளைக் கேட்கவே உரிமை இல்லாதவர்களாய் எழுதியதைப் படிப்பவர், சொல்லியபடி கேட்பவர், நடத்துகிறபடி நடப்பவர் என்கிற நிலையில் இருந்து இருக்கிறார்கள். சிந்தித்தால், தர்கித்தால் சந்தேகித்தால் பாவம் என்று அழுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். எனவே தான் அறிவு வளரவில்லை. சமுதாயம் மேலோங்கவில்லை. சுதந்திரமாய் அரிய அற்புதம் ஏதும் கண்டுபிடிக்க முடியவில்லை

என்று பெரியார் நம் மக்களின் அறியாமை பற்றிக் கவலையுற்றார்! அறிவுக்குக் கூர்தீட்ட அறிவியல் தொழில்நுட்பங்களைக் கண்டறிந்துவிட்ட காலத்திலும் மூளையை அடகு வைத்துத் தமிழர்கள் மூலையில் முடங்கிக் கிடக்கலாமா?

மூளையை மட்டுமல்ல, மனதைக் கட்டுப்படுத்தவும் அறிவியல் கண்டுபிடிப்புகள் வந்து விட்ட காலத்தில் வாழ்கிறோம்! சொனாத்தன்

வோல்பா (Jonathan Wolpaw) என்ற அறிஞரும் அவர்தம் ஆய்வுத் துணைவர்களும் மூளைக்குக் கூடுதல் இயங்குதிறனை அளிக்கவல்ல தொழில் நுட்பத்தைக் கண்டறிந்தனர். ஒரு மனிதனின் தலைக்குக் கவசம் போல மின்கம்பித் (Electrode cap) தொப்பி ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். இதைத் தலையில் மண்டை ஓட்டின் மேல் அணிந்து கொண்டாலும் உள்ளிருக்கும் மூளையின் (Electro encephalo graphic activity) செயல்பாட்டைப் படம் பிடிக்கும் தன்மை பெற்றது. முதுகுத் தண்டுவடச் சிக்கல்களுக்குத் தீர்வளிக்கும் ஊக்கிகள் தந்திட இந்த ஆய்வு உதவி செய்யும்.

பிரிட்டனின் பைனான்சியல் டைம்சு ஏடு ஏப்ரல் 2-2009 அன்று வெளியிட்ட செய்தி மனிதகுல வரலாறு காணப்போகும் மாபெரும் புரட்சிக்கான முன்னோட்டமாகும்.

Aberystwyth University மனித உதவியின்றித் தானே சுயமாகச் சிந்திக்கக் கூடிய ரோபட்டை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளது. அறிவியல் ஏட்டில் இச்சாதனை பதியப்பெற்றுள்ளது. அந்த ரோபட்டுக்குப் பெயரிடுவதில் மட்டும் பழமை மோகம் போகவில்லை. இந்தப் புரட்சிகர ரோபட்டை "ஆதம்" என்று பெயரிட்டுள்ளார் இதை உருவாக்கிய பேராசிரியர் ராசு கிங் (Ross King).

அபரிஒய்சுடிவித் பல்கலைக்கழகமும் கேம்ப்ரிட்சு பல்கலைக்கழகமும் ஐந்தாண்டுகள் கூட்டாக ஆய்வு மேற்கொண்டு இந்த ரோபட்டை வடிவமைத்தன. வருங்கால ஆராய்ச்சிகளில் மனிதர்களுடன் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற ரோபட்டுகளும் கூட்டாக ஆய்வு நடத்தும் என்கிறார்கள். மனிதனைச் செயற்கையாகவே மனிதன் இயந்திர வடிவில் படைத்துவிட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம்.

ஆசுதிரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் அருகில் பாலித் தீவிலிருந்து 370 கி.மீ. தூரத்தில் உள்ள ஃப்ளோரசு தீவில் குகை ஒன்றின் கண்டுபிடிப்புகளில் இருந்து முந்து மாந்தருள் குறுவடிவ உயிரி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. திராட்சைப் பழம் அளவு மூளை படைத்த ஃப்ளோரோசியன்சுகள் கண்டுபிடிக்கப்பட்டது புதிய புதிர்களை உருவாக்கி உள்ளது.

ஆகப் புதிர்களை விடுவிப்பதும் புதியன கண்டெடுப்பதும் மனிதகுல வரலாற்றில் இடையறாமல் நடக்கும் இயற்கை நிகழ்வுகளாகும்.

ஆயுளை நீட்டிப்பதும் நோய்நொடியற்று மனிதனை வாழச் செய்யும் குறிக்கோளுக்காக எத்தனையோ அறிவாளர்கள் அரும்பாடுபட்டு வந்துள்ளனர். ஒளியுடம்பு பெற்று உடம்போடு மேலே போவோம் என நம்பியோரும் யோக ஆற்றலால் சாகா நிலை எய்தலாம் என்று பிறிதோர் சாராரும் இருந்து வந்துள்ளனர். நாளும் மனித உடலில் அழியும் செல்கள் ஒவ்வொன்றின் உள்ளும் மனம் ஒன்று உண்டு. அந்த மனத்தைக் கட்டுப்படுத்தி மாறா இளமையுடன் மாறாமல் நீண்ட நெடுங்காலம் வாழலாம் என்பாரும் இருந்தனர். இவர்கள் அறிவியல் அடிப்படையில் எதனையும் மெய்ப்பிக்கவில்லை. ஏட்டுச்சுரக்காய் எண்ணற்றவை இப்படி உண்டு.

ஆயின் அறிவியல் அடிப்படையில் The Fantastic Voyage: Live long enough to live forever நூலெழுதிய ராய் குர்சுவெல் புதிய பரிமாணங்களை எட்டிப் பிடித்துள்ளார். ஒவ்வொரு மனித உடலிலும் தேய்ந்திடும் எலும்புகளை, முறுக்கிழக்கும் தசைகளை, ஓட்டம் தடைப்படும் இரத்தக் குழாய்களை மூளைச் செல்களை உடலுக்குள்ளேயே அறுவை சிகிச்சையின்றிச் சரிசெய்து சீரமைக்க இரத்த அணு அளவிலான குறும் "நானா போட்டுகள்" எனப்படும் மிக மிகத்துல்லிய கருவிகளை உட்செலுத்தி நமது மரபணுக் குறியீட்டில் திருத்தம் செய்து நோயை முற்றழிக்க முடியும் என நிறுவினார். வருமுன் நோயழித்து நெடியநாள் வாழத்தகு மனிதனை உருவாக்குவதில் எல்லாச் சாதனைகளையும் மிஞ்சியது ராய் குர்சுவால் சாதனையாகும். ஆயுளை நீட்டிப்பதில் வெகு விரைவில் வெற்றிகளைக் குவிக்கப் போகும் இவ்வருஞ்சாதனை அறிவியல் அகிலத்துக்குப் பெற்ற ஈித்த வெற்றிப் பட்டயமாகும். அத்தகு அறிவியலில் ஒவ்வொரு மாந்தனும் அறிவு பெறத் தன் முனைப்புக் காட்ட ஆணை இட்டவர் தந்தை பெரியார்.

பெரியார் விரும்பிய புத்துலகு பூவுலகில் எல்லா மனிதரும் அறிவால் உயர்ந்திடும் சமத்துவ உலகு! அவ்வுலகமையப் பகுத்தறிவுப் பயணம் முடிவற்றுத் தொடர்வது! இதில் நம் பங்கென்ன என எண்ணுவோம்! எழுச்சி கொள்வோம்!

உலகப் பொதுமறை உயர்வு போற்றும் பெரியார்



> அறிவால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக் கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது

என்று திருக்குறளைப் போற்றிடும் பெரியார் பல்வேறு தருணங்களில் குறள் பற்றிக் கூறிய கருத்துக்களை ஒருங்கே திரட்டிப் பதிவு செய்தவர் பேராசிரியர் மா. நன்னன். அந்தப் பிழிவில் இருந்து சில மேற்கோள்கள்:

> குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகல ஞானமும் அதில் அடங்கியுள்ளது. மனித சமுதாயத்திற்கே நல்வழிகாட்டி நன்னெறியூட்டி நற்பண்பு களையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் எங்கள் குறள், எங்கள் குறள், எங்கள் மதக்கருத்தை ஒப்புக் கொள்ளும் குறள் என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

> நீங்கள் என்ன சமயத்தார் என்று கேட்டால் வள்ளுவர் சமயம் என்று சொல்லுங்கள். உங்கள் நெறி என்ன

வென்றால் குறள் நெறி என்று சொல் லுங்கள். அப்படிச் சொன்னால் எந்தப் பிற்போக்கு வாதியும் எப்படிப்பட்ட சூழ்ச் சிக்காரரும் எதிர் நிற்க மாட்டான். யாரும் குறளை மறுக்க முடியாததே இதற்குக்; காரணம்.

குறளாசிரியர் கடவுளையும் மோட்சத்தையும் நரகத்தையும் ஒத்துக் கொள்ளவில்லை. குறளில் நீங்கள் அறம் பொருள் இன்பம் என்ற அளவில்தான் பார்க்க முடியுமே தவிர வீடு மோட்சம் பற்றி அவர் கூறி இருப்பதாக இல்லை. கடவுள் வாழ்த்து என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் உருவ வணக்கக் கொள்கைகள் இடம் பெறவில்லை. திராவிட மக்களுக்கு எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த என்பதான கடவுளைக் குறித்துக் கடவுள் என்ற ஒரு சொல்லைத் தவிர வேறு சொல் கிடையவே கிடையாது. அந்தச் சொல்லையே வள்ளுவர் தமது நூலில் கையாளவில்லை. வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடி இருப்பதெல்லாம் ஒவ்வொரு நற்குணங்களை வைத்து, அந்தப் படியாக நடக்க வேண்டும் என்பதற்காகவே பத்துப் பாட்டிலும் பத்து விதமான குணங்களைக் கூறினார். மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத்தான், வாழ்வின் வகையை, நிலையை உணர்த்துவதற்காகத் தான் எட்டு, ஒன்பது கருத்துக்களை வைத்துக் கடவுள் வாழ்த்துக் கூறி இருக்கிறார்.

குறள் பக்தி நூல் அல்ல, கடவுளைக் காட்டும் எந்தவிதமான மதநூல் அல்ல, மதப்பிரச்சாரம் செய்யும் மதக் கோட்பாட்டு நூல் அல்ல, உண்மையான ஒழுக்கத்தைப் போதிப்பதாக இருக்கின்றது குறள்.

அறிவு பெற்றவன் அறிவையே முதன்மையாகக் கொண்டவன் ஆலோசித்துப் பார்க்கும் ஆராய்ச்சித் தன்மை கொண்டவன் எவனும் குறளை மதித்தே தீருவான். சிறிதாவது பின்பற்றிக் குறளை வழி காட்டியாகக் கொண்டே தீருவான்.

இப்படி பல இடங்களில் திருக்குறளைப் பெரியார் போற்றுகிறார்.

எல்லா இடங்களிலும் மனிதனை மனிதனாகப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறி எந்தவித வேறுபாடும் அற்று ஒரே படிநிலையில் உள்ளவனாக - அறிவை முதன்மைப்படுத்திச் சிந்தித்து நற்குணங்கள் வளர்ப்பவனாக - திருக்குறள் அடையாளம் காட்டுவதாலேயே பெரியார் குறளைப் போற்றுகிறார்.

தீனா! மூனா! கானா! இது திருக்குறள் முன்னணிக் கழகமெனக் கலைவாணர் என்.எசு. கிருட்டிணன் ஒரு திரைப்பாடல் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய நூலாகத் திருக்குறளை உயர்த்திப்பாடுவார். பெரியார் இயக்கமும் அதிலிருந்து பிரிந்த அறிஞர் அண்ணாவின் அறிவியக்கமும் திருக்குறளை உலகப் பொதுமறை என்று உயர்த்திப் பேசி வந்துள்ளன.

உலகப்பொதுமறை திருக்குறள் என்று உலகம் ஒப்புக் கொள்ள வேண்டுமானால் தமிழர்களும் தமிழ்நாட்டரசும் இந்திய அரசும் என்ன செய்ய வேண்டும் என்றும் இத்தருணத்தில் சிந்தித்துப் பார்ப்போமாக!

இந்தியாவை ஆண்ட மேலை நாட்டவருள் ஆங்கிலேயரையும் பிரெஞ்சுக்காரரையும் நாம் குறிப்பிட்டுக் கூறி வருகிறோம்! ஆங்கில மொழியாக்க நூலுள் ஜி.யூ. போப் மொழி பெயர்த்த திருக்குறள் குறள் வடிவில் குறுகிய வரி அழகுடன் மிளிர்வதாகும். ஆங்கிலம் வழங்கும் நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் உலகெங்கிலும் உள்ள நூலகங்களுக்கும் ஜி.யூ. போப் எழுதிய திருக்குறளைப் பதிப்பித்து இலவயமாக அனுப்பி வைக்கும் பணியைச் செம்மொழிகள் ஆய்வு நிறுவனம் சிறப்பாகச் செய்யலாமே! தமிழ் செம்மொழி என உலகம் ஒப்புக்கொள்ளத் திருக்குறளைக் காட்டிலும் விழுமிய சான்று ஒன்றை உலக அரங்கில் தமிழர்கள் தர இயலுமா? அரசுகள் சிந்திக்க இந்த அறக்கட்டளைப் பொழிவு வழி வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஆங்கிலத் திருக்குறள் மொழியாக்கம் அறிந்த தமிழர்களுக்குக் கூடப் பிரெஞ்சுமொழியிலும் அதற்கு இணையாக அழகும் பொருளும் பொருத்தமும் வடிவமும் கொண்ட விழுமிய திருக்குறள் மொழியாக்கம் ஒன்றுள்ளது என்பது தெரியாச் செய்தியாகும்.

ஆகத்து 15-1877இல் புதுச்சேரியில் பிறந்த அறிஞர் ஞானுதியாகு பிரெஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்த திருக்குறளையும் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டு உலக அளவில் பிரெஞ்சு மொழி பரவியுள்ள நாடுகளுக்கும் அவற்றின் பல்கலைக்கழங்களுக்கும் உலகெங்கிலுமுள்ள நூலகங்களுக்கும் கொண்டு செல்லும்

பணியையும் இந்திய அரசோ, தமிழ்நாட்டினரோ, புதுச்சேரி அரசோ - அரசு சார் செம்மொழி ஆய்வு நிறுவனமோ உலகத் தமிழராய்ச்சி நிறுவனமோ புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனமோ இலவயமாக அளிக்கும் திட்டம் தீட்டியாகல் வேண்டும்.

"அனைத்துலகப் பண்பாட்டுக் கூட்டுறவுக்கு இன்றியமையாத நூலாக ஞானுதியாகு பிரெஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்த திருக்குறள் உள்ளதாக" சர்.சி.பி. இராமசாமி ஆங்கிலத்தில் அந்நூலுக்கு எழுதிய அணிந்துரையில் கூறி உள்ளார். (14-8-2004 நியு இந்தியன் எக்சுபிரசில் விரிவான என் கட்டுரை காண்க)

நானறிந்த வரையில் - எனக்குக் கிடைத்த தகவல்கள் அடிப்படையில் திருக்குறள் பர்மிய மொழியில் மயோ தாண்ட் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சீன மொழியில் 1967 ஆம் ஆண்டு திருக்குறளைச் சி.இங் இசி மொழிபெயர்த்துள்ளார். 1952 - 54க்கு மிடையே செக் மொழியில் திருக்குறளைக் கமில் சுலபிள் மொழிபெயர்த்துள்ளார். டச்சு மொழியில் 1964இல் நெதர்லாந்து நாட்டில் டிகாட் என்பவர் மொழி பெயர்த்துள்ளார். 1972இல் பின்னிசு மொழியில் ஆல்டோ பெண்டிட் மொழி பெயர்த்துள்ளார். 1977இல் அல்பிரக்ட் ஃபென்சும் கே. லலிதாம்பாளும் கூட்டாகச் செருமன் மொழியில் பெயர்த்துள்ளனர். 1803இல் ஏற்கனவே ஜெர்மன் மொழியில் ஏ.எஃப். கம்மெரா மொழியாக்கம் செய்த நூல் வெளிவந்துள்ளது 1854இல் இலண்டனில் கார்ல் கிரால் மொழியாக்கம் செய்த குறள் வெளிவந்துள்ளது. 1865-இல் கார்ல் கிராலின் நூல் மறுபதிப்பு வந்துள்ளது. 1847இல் திருக்குறளின் சில பகுதிகளைச் செருமன் மொழியில் பெர்லின் நகரைச் சார்ந்த ஃபிரடெரிக்கு ரிக்கர்ட்டு மொழியாக்கம் செய்துள்ளார். 1866இல் இலண்டனில் இரண்டாம் பதிப்பாக வில்லியம் அவர்களும் நார்கேட் அவர்களும் இணைந்து செருமன் மொழியில் ஆக்கம் செய்துள்ளனர்.

1848இல் பிரெஞ்சு மொழியில் ஏரியல் என்பாரும் 1889இல் பாரிசு நகரில் பாரிக்கு டிஃபொன்டேனு அவர்களும் பிரெஞ்சு மொழியில் பெயர்த்துள்ளார். 1942இல் தானியூவும் பிரெஞ்சு மொழியில் ஆக்கம் செய்துள்ளார். சில பகுதிகளை 1767இல் லூயிசு ஜெக்கோலியட் மொழி பெயர்த்துள்ளார்.

1866இல் நம் தமிழகத்தில் தரங்கம்பாடியில் இருந்து இலத்தீன் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குறளை சார்லசு கிரால் வெளியிட்டுள்ளார். 1930இல் வீரமாமுனிவரால் இலத்தீன் மொழியில் ஆக்கம் பெற்ற இரண்டு தொகுதிகள் இலண்டனில் வெளி வந்துள்ளன.

1967இல் மலாய் மொழியில் இசுமாயில் உசேன் கோலாலம்பூரில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிட்டார். 1964இல் ராமிலி பின் தக்கீர் என்பாரும் மலாய்மொழியில் குறளை வெளியிட்டு உள்ளார்.

1958இல் வாண்டி டைநோசுகியூ அவர்களும் உமா தேவியும் இணைந்து போலிசு மொழி திருக்குறளைச் சென்னையில் வெளியிட்டுள்ளனர்.

உருசியன் மொழியில் 1963இல் மாசுகோவில் ஜேஜே கிளாசோ அவர்களும் கிருட்டிணமூர்த்தி அவர்களும் கூட்டாக வெளியிட்டுள் ளனர். 1974இல் கிளாசோ மாசுகோவில் இருந்து மீண்டும் புதிய விளக்கங்களுடன் உருசிய மொழி திருக்குறளை வெளியிட்டார். சுவீடிசு மொழியில் 1971இல் பிரைக்கோம் இங்கியா திருக்குறளை வெளியிட்டார்.

பட்டியல் முழுமையானதல்ல. உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்ட பட்டியலும் மொழிபெயர்த்தோர் விவரமும் தமிழ்நாட்டரசு பாடநூல்களில் இடம்பெற வேண்டும். அனைத்து மொழியாக்க நூல்களையும் ஒருங்கு திரட்டித் தமிழகத் தலைநகரில் உள்ள நூலகங்களிலாவது இடம்பெறச் செய்தல் வேண்டும்.

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டாக அந்தந்த நாட்டு மொழியில் உள்ள திருக்குறள் பதிப்புகளுள் செம்பதிப்புக் கொண்டு வரவும் செம்பதிப்பை அந்தந்த நாட்டு மக்களிடையே பரப்பவும் திட்டம் தீட்டல் வேண்டும். பெரியார் போற்றிய குறளை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நேரத்திலாவது உலகப் பொதுமறையென உலகம் ஏற்க உழைக்க உறுதி பூணுவோம்! திருக்குறள் முன்னணிக் கழகம் தமிழ்நாடாளும் காலத்திலேயே இதைச் செய்து முடிக்கச் சூளுரை ஏற்போம்!

பெரியார் குறளைப் போற்றியதோடு நிற்கவில்லை. குறளுக்குத் தெளிவுரையும் சொன்னவர் தந்தை பெரியார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற குறளுக்குப் பெரியாரின் விளக்கவுரை காண்போம். "எப்படி எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் அகரம் முதன்மையாக உள்ளதோ அதுபோல இந்த உலகத்திற்குக் கடவுள் முதன்மையாக உள்ளது என்று

உரைகாரர்கள் கற்பித்து உள்ளார்கள். விஞ்ஞானப் படி பார்த்தால் உலக உற்பத்திக்குக் கடவுள் ஒன்று அவசியமே இல்லை. அது இயற்கையாகவே நிகழக்கூடியது என்கிறார்கள். மற்றும் இந்த உலகமானது சூரியனில் இருந்து சிதறி விழுந்த ஒரு தீப்பிழம்பானது குளிர்ச்சியடைந்து பூமியாயிற்று என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆகவே சூரியனே இந்தப் பூமி உண்டாவதற்கு ஆதாரமானவர். ஆதிகாலந் தொட்டு இருந்து வருபவன் என்பதோடல்லாமல் மேல் நாட்டினரும் முன் காலத்தில் சூரியனைத் தான் வணங்கி வந்திருக்கிறார்கள். ஆதலால் பகவான் என்பது சூரியனைத்தான் குறிக்கும்.

பெரியாரின் இந்த விளக்கம் உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பல்வேறு மக்கள் கூட்டங்களும் பின்பற்றிய வழிபாடு பற்றி நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

கடவுள்களும் கடவுள் கதைகளும் நம்பிக்கைகளும் ஒவ்வோர் நாட்டிலும் எப்படி உருவாயின என்பதை ஒப்பு நோக்குமாறு பெரியார் நம்மைத் தூண்டி விடுகிறார்.

ஒப்புநோக்குவோமாயின் எல்லா மதங்களும் ஒன்றே! எல்லாத் தொன்மங்களும் ஒன்றே! நாடு விட்டு நாடு நம்பிக்கைகள் யாவும் ஒரே அடிப்படையில் உருவாகிய தன்மை வெள்ளிடை மலையென விளங்கும்.

ஆப்ரிக்கத் தொன்மங்களில் நிலமும் வானமும் நெடுங்காலம் முன்பிருந்தே நிலவி வந்துள்ளன என நம்புகிறார்கள். நிலம் மிருதுவாகவும் நீரற்றும் வறண்டு கிடந்ததாம்! யாரோ ஒரு கிழவி நீரைத்திருடிப் பதுக்கி வைத்துவிட்டதாக ஒரு கதை உள்ளது. வேறொரு கதை விலங்கு ஒன்று நீரைத் திருடி மறைத்து வைத்ததாக உள்ளது. இரண்டு கதைகளிலும் மக்கள் தலைவன் அல்லது தொன்மத்தலைவன் நீரை மீட்டு மக்கள் பயன்பாட்டுக்கு அளித்ததாகக் கதை நகர்கிறது. அகத்தியர் கமண்டலத்தில் அடைபட்ட காவிரியைக் காகம் ஒன்று விடுவித்த கதையுடன் இந்த ஆப்ரிக்கத் தொன்மக் கதைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்!

வட ஆசியாவின் சைபீரியாவை எடுத்துக் கொள்ளுங்கள்! கிறித்துவமும் இசுலாமும் புத்த மதமும் அங்குப் புகுமுன்னர்ப் பதினாறுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்குமிடையே சைபீரிய மக்களின் மதமாக SHAMANISM இருந்தது. SHAMAN என்ற

சொல்லுக்குத் துங்குசிக் மொழியில் தீவிர உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஆடும் ஒருவனைக் குறிப்பதாகும். உருசிய மொழியிலிருந்து இச்சொல் பின் அய்ரோப்பா முழுவதும் பரவிற்று. மேற்கு அய்ரோப்பாவெங்கும் பரவிய இச்சொல் இன்று வெறியாட்டுக்கு உலகளாவிய அறிவியல் சொல்லாக மாறிவிட்டது. ஆவிகள் பிடித்துக் கொண்ட மனிதன் வெறியாட்டாடி மக்களை மருளச் செய்தான்! நம் நாட்டில் சாமி வந்து ஆடுதலுக்குச் சற்றொப்ப சொல்லக் கூடியதே சைபீரிய மத வெறியாட்டு ஆகும். சாமி ஆடுபவன் சைபீரியாவில் மட்டுமல்ல இங்கும் இருக்கிறான்! ஆனால் போதையில் ஆடுபவனையும் சாமியாக்கி நாம் கும்பிட்டுக் கொண்டுள்ளோம்.

தீ வழிபாடும் சைபீரிய மக்களிடையே நிலவியது. சைபீரியர்கள் அடுப்பைக் கடவுளாக வழிபட்டனர். தீயை முதிய பெண் வடிவிலும் வழிபட்டார்கள்! "தீகிலக்கி" என்பது வழிபடும் தெய்வமாயிற்று. நெருப்பின் தாய் நானானியன்சு என்று அழைக்கப்பட்டார்! தீயின் பாட்டி எவென்கி எனப்பட்டார்! எரியும் தீயில் உணவுப் பொருட்களைத் தூக்கி எறிந்து தீயே! இதை நீ உண்டு எமக்கு நல்ல விலங்குகள் வேட்டையில் சிக்கி உணவாகக் கிடைக்க உதவுவாயாக என்று சைபீரியர்கள் வேண்டிக் கொண்டனர்.

தீ வழிபாடு தமிழரிடையேயும் உண்டு என்பதற்குத் தெய்வம் என்ற சொல்லே சாட்சியாகும். தீயை மூட்டக்கூடிய மரத்தாலான ஞெலிபுகோல் தமிழரிடை இருந்த தொன்முது கருவிகளில் ஒன்று! அதன் திரிபே கல்லால் வடிக்கப் பெற்ற சிவலிங்கமாகும். தீயின் நிறம் பற்றியே சிவந்த வடிவினன் சிவன் எனப்பட்டார். சிவன் படைக்கப்பட்ட போதே தமிழனுக்குச் சிகப்புத்தோல் மீதிருந்த மயக்கம் உலகறிய வெளிப்பட்டது. சைபீரிய இனக்குழுக்களான சூக்சி, கொரயாக் ஆகிய இனக்குழுவினரும் நமது ஞெலிபுகோல் போல மரத்தாலான தீ கடைகோலை வைத்து வழிபட்டனர்.

உருசிய கௌகாசசு பகுதிகளிலும் வீட்டில் உள்ள அடுப்பு கடவுளாக வழிபடப்பட்டது. மலைவாழ்மக்களான இங்குசசு, ஒசசட்டுசு, சியார்சியன்கள் நெருப்பையும் சாம்பலையும் வழிபட்டனர். தீப ஆராதனை காட்டுவதும் சாம்பலைத் திருநீராகப் பூசுவதும் நம்மவர் வழக்கம் என்பதனையும் நினைவில் நிறுத்துங்கள்! இங்குள்ள அதே பழக்க வழக்கம் உருசிய, கௌகாசசு பகுதிகளிலும் இருந்துள்ளதை நோக்குங்கால் மனித மனம் உலகெங்கும் ஒரே மாதிரி சிந்தித்து அறிவு வளர்ச்சி பெற்று வந்துள்ளது விளங்கிடும்.

வேளாண் தொடர்புடைய வழிபாடுகள், முன்னோர் தொடர்புடைய வழிபாடுகள் என்ற திசையில்தான் உலக மக்கள் அனைவருமே ஒரு காலக் கட்டத்தில் சிந்தித்து வந்துள்ளனர். வோல்கா நதி தீரத்திலும் மேற்கு ஊரல் பகுதிகளிலும் வசந்தகால விடுமுறைகள் நிலத்தில் உழுவது தொடங்குவதையும் விதைதூவிடும் நாளையும் ஒட்டியே அமைந்தன. சிறப்பான உணவு சமைக்கப்பெற்று மண்ணுக்குப் படையலிட்டு உருசிய மக்கள் வழிபட்டுள்ளனர். தமிழர் கொண்டாடும் பொங்கல் திருநாளும் உழவர் திருநாளே! உருசியாவின் வோல்கா பகுதி மக்கள் கொண்டாடியதும் உழவர் திருநாளே! உலகெங்கும் உழவர் திருநாள் கொண்டாடப்பட்டுள்ளது!

ஸ்லாவ் மக்களும் வேளாண்மைப் பணிகள் துவங்கும் தறுவாயிலும் முடிவுறும் நிலையிலும் விழாக் கொண்டாடி வந்துள்ளனர். கதிரவனை வழிபட்டுள்ளனர். பெரியார் சொல்வது போலச் சூரியன் வழிபாடு உலகெங்கும் இருந்துள்ளது. Svarog, Dazhbog, Khors ஆகிய மூன்று கடவுள்களும் சூரியக் கடவுளரே! பெருண் என்ற "இடித்" தெய்வமும் ஆடுமாடுகளைப் பாதுகாக்கும் Vels (Velos) கடவுளும் இருந்தனர். வேலசு வேலவன் ஆகியதா? வேலவன் வேலசு ஆகிற்றா?

ஆக இத்துணை ஒப்பீடுகளையும் மிக எளிதில் மக்களுக்கு உணர்த்திடப் பகவன் என்பது பகலவனைக் குறிக்கும் எனப் பெரியார் திருக்குறளுக்குச் சொன்ன விளக்கம் பயன்பட்டது. உலகப் பேரறிஞருள் ஒருவர் பெரியார்! உலகப் பார்வை கொண்டவர் பெரியார்! உலகச் சமுதாயங்களை உற்று நோக்கியவர் பெரியார்! கையில் கிடைத்த ஏடுகளைக் கற்றுத் தெளிந்தவர் பெரியார்! கேள்வி ஞானத்திலும் சிறந்தோங்கி நின்றவர். உலக நடப்புகளைப் பகுத்தறிவுக் கண் கொண்டு பார்த்தவர்! உலக ஒருமைப்பாட்டை உணர்ந்தவர்!

அவர் சிறப்பை அவனி அறியச் செய்ய முற்படும் அறக்கட்டளைகள் வாழ்க! அவர் தொண்டு தொடர்க!

இனமும் பெரியார் மனமும்



மாந்தகுல மேதையருள் பெரியார் முதலிடம் பெறத் தக்கவர். உலக ஒருமைப்பாட்டை விழைந்தவர்.

> நாம் உண்மையிலேயே ஒரு நாட்டவர். ஒரு இனத்தவர். ஒரு குறிப்பிட்ட எல்லையில் ஒரே பழக்க வழக்கங்களோடு இருக்கிறவர்கள். ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆண்டவர்கள். வெகுநாளாக இருந்து வருபவர்கள். இன்னும் வெகுநாளைக்கு இங்கேயே இருக்க வேண்டியவர்கள். நாம் யாவரும் ஒன்று. நாம் யாவரும் சரிநிகர் சமமானவர்கள் என்று சொல்வதற்குத் தகுதி இல்லாத நிலையில் சின்னா பின்னப்பட்டுக் கிடக்கிறோம். (பெரியார் கணினி பக்கம் : 518).

முதலில் திராவிட மொழிகளை ஒரே மொழி என்று மொழி ஒருமைப்பாட்டை வலியுறுத்தியவர். நாம் ஒரே நாட்டவர் என்ற உணர்வை ஊட்டுகிறார். அடுத்து ஓரினத்தவர் என்று முன்னெடுத்துச் செல்கிறார்.

இனம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் Race உருவாக்கப்பட்டது. ஆங்கிலத்துக்கு முன்பாகவே பழம் பிரெஞ்சு மொழியில் 1512இல் Rasse என்ற சொல் உருவாகி இருந்தது. அச்சொல் இத்தாலி மொழியில் புழங்கிய Razza என்ற சொல்லில் இருந்து

பிரெஞ்சு மொழிக்கு மாறி இருக்கக்கூடும். ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் மூலத்தைச் சுட்டும் சொல்லாக அரபி மொழியில் இடம் பெற்றிருந்தது.

இதற்கான விளக்கம் Online Etymological Dictionary எனப்படும் இணையச் சொற்பிறப்பியல் அகராதியில் உள்ளது.

> பொதுவான மூலத்தில் இருந்து தோன்றிய மக்கள் என்ற பொருள்படும் பிரெஞ்சு சொல் Razza இனத்தை, மரபைக் குறிக்க 1500 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் இனம் என்பதன் பொருள் திரிந்தது. புதுப்புது விளக்கங்கள் உருவாயின. எடுத்துக்காட்டாக, பிரிட்டானிகா கலைக்களஞ்சியத்தின் 11 வது பதிப்பு 1910-11இல் The Encyclopedia Brittanica - A Dictionary of Arts,Science, Literature and General Information என்ற நெடிய தலைப்புடன் வெளிவந்த கலைக் களஞ்சியத்தைக் கூறலாம். கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் 1910இல் வெளிவந்த கலைக்களஞ்சியம் 100 ஆண்டு கடந்து காப்புரிமை இன்றித் தாராளமாகக் கிடைப்பதால் பெரியார் போல் பகுத்தறிவாளர் ஆற்றிடும் பணிக்கு முடிவு இல்லை என்று மெய்ப்பிக்கச் சான்றாகியுள்ளது.

1911இல் வெளிவந்த நேரத்திலேயே அமெரிக்கத் திறனாய்வாளர் வில்லியர்டு அண்டிங்டன் ரைட்டு நாட்டுக்குத் தவறான தகவல்களை இந்தக் கலைக்களஞ்சியம் அளிப்பதாக 200 பக்க விமரிசன நூல் வெளியிட்டார். 29 தொகுதிகளாக 28150 பக்கங்களுடன் 44,000,000 சொற்களுக்குப் பொருள் சொல்லிய இக்கலைக்களஞ்சியம் துவங்கும் போதே இனம் பற்றிய விளக்கத்தில் வழுக்கியது.

> தவறான செய்திகள், மன்னிக்க இயலா விடுபட்டவைகள், அப்பட்டமான நாடு சார்ந்த விருப்பு வெறுப்புகள், தனிப்பட்ட கோபத்தின் வெளிப்பாடுகள், அறிவுசார் அறியாமையால் பிழைகள், ஆங்கிலப் பண்பாடு தவிர்த்தவை மீதான புறக்கணிப்புகள், தன்னுயர்வு மதிப்பீடுகள், அமெரிக்க முன்னேற்றம் மீது மறைக்க முடியாப் பொறாமைப் புழுக்கங்கள் என்று

இந்தக் கலைக் களஞ்சியம் பற்றி அந்த திறனாய்வாளர் கருத்தளித்தார்.

ஆனால் Encyclopaedias : Their History throughout Ages (1966) என்ற தலைப்பில் காலங்காலமாகக் கலைக்களஞ்சியங்கள் வரலாறு எழுத முனைந்த த இராபர்ட்டு கொல்சன் இதுவரை வெளிவந்த கலைக் களஞ்சியங்களிலேயே, சிறந்தது என்று 11 வது பதிப்புக்கு முத்திரை குத்தினார்.

ஆக மதிப்பீடுகள் நாடு சார்ந்து இனம் சார்ந்து மாறுபடுகின்றன என்பது மட்டும் வெள்ளிடைமலையென விளங்குகிறது.

இருபத்தோராம் நூற்றாண்டில் எளிதாகக் கிடைப்பதால் அக்கலைக் களஞ்சியத்தை நம் பகுத்தறிவுக் கண் கொண்டும் நோக்க முடியும்.

பாரக் ஒபாமா நிறவெறி கோலோச்சிய நாட்டுக்கே அதிபராகி விட்டார். ஆனால் கலைக்களஞ்சியம் சொல்கிறது

> நீக்ரோக்கள் அறிவு அடிப்படையில் வெள்ளையர்களுக்கு மட்டமானவர்களாகவே உள்ளனர். அவர்கள் மூளை வளர்ச்சி சிறைப்படுவதற்கும் தடைப்படுவதற்கும் காரணம் பெண்கள் பருவ வயதடைந்ததும் பூப்பெய்தியதும் அவர்களுடன் பாலியல் தொடர்பே நீக்ரோக்களின் வாழ்க்கையில் முதலிடம் பெறுகிறது. அவர்கள் சிந்தனை அதிலேயே சிக்கி மழுங்கிப் போகிறது.

இப்படி எழுதுகிறது கலைக்களஞ்சியம்.

அமெரிக்கச் சுதந்திரப்போர் பற்றிய கட்டுரை அவ்விடுதலையின் வெற்றிக்குத் தூய பிரிட்டிசு இரத்தமும் உணர்வு அடிப்படைகளுமே காரணங்களாக இருந்தன என மார்தட்டுகிறது அதே கலைக்களஞ்சியம்.

1936இல் செருமானிய நகரான பெர்லினில் ஒலிம்பிக்சு விளையாட்டுப் போட்டிகளைச் சர்வாதிகாரி இட்லர் நடத்தினார். அதில் ஆரியரே மேலோர் என்று பறைசாற்றிய இட்லருக்கு ஏமாற்றம் பரிசாகக் கிடைத்தது! செசி ஓவன்சு (Jesse Owens) என்ற அமெரிக்க நாட்டவரான கறுப்பரினத்தவர் அதற்கு முந்தைய உலகச் சாதனைகளை முறியடித்து 4 தங்கப் பதக்கங்களை வென்றார். வெகுண்ட இட்லர் அந்த விளையாட்டு வீரருடன் கை குலுக்கவே இல்லை. ஒட்டுமொத்த யூத இனத்தையும் கொன்று குவிக்கவும் தரக்குறைவான அறிவு

படைத்தோர் (Low IQ) அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஆணவ ஆட்டமிட்ட இட்லர் கடந்த நூற்றாண்டு இனவெறியின் அடையாளச் சின்னமாகும். இந்த நூற்றாண்டில் இனவெறிக்கான கோப்பையை வேறோர் சர்வாதிகாரி தட்டிச் சென்றுள்ளார்.

இடையே பெரியார் போராடினார். ஒவ்வொரு நாட்டிலும் பகுத்தறிவாளர்கள் போராடினார்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என 2000 ஆண்டுக்கு முன்பாக வள்ளுவரே சொல்லியும் திருந்தாத தமிழர்கள், பெரியார் சொல்லியும் திருந்தினார் இல்லை. ஓரினம் மாந்தகுலம் என உணர்ந்தாரிலர். இந்தியாவிலோ இனத்தையும் தாண்டித் தமிழ்மொழிச் சொற்பிறப்பியல் படி உருவாகாத சாதி என்ற தமிழல்லாச் சொல்லை வேறு வளர்த்தெடுத்து மனிதர்களைப் பிரித்தார்கள்! சாதிக்குக் கட்சிகளும் முளைத்தன. சமத்துவப் பயிரைக் கருக்கி அழித்தன. களையென விளங்கின.

மனிதகுலம் ஒன்று என்று பெரியார் பிளிறிய போது ஏற்காத மண்டைக்குள்ளும் அறிவுச் சுரப்பை இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தி வருகின்றன.

அகழ்வாராய்ச்சியின் துணைகொண்டு ஓரிலக்கம் ஆண்டு முன்பு மனித குலப்பரவல் நடந்தது என்று கூறி வந்தனர். புதையுண்ட நகரங்கள் கற்கள், மனித குல எலும்புக் கூடுகள் துணையோடு மனித குலப் பரவல் பற்றி ஆய்ந்து வந்தனர். அந்த அணுகு முறையில் இருந்து மாறிப் புதுப்பாதை கண்டவர் இசுபென்சர் வெல்சு!

மனித மரபணு கொண்டு மனிதகுலத் தோற்றமும் பரவலும் பற்றி ஆய்வு செய்தவர் இசுபென்சர் வெல்சு! அவரெழுதியது நூலாகவும் வந்தது; குறும்படமாகவும் வெளியாயிற்று.

பிராட்சா பவுண்டேசன் நிறுவனம் 1,60,000 ஆண்டு முன் நிகழ்ந்த மனித குலத் தோற்றம் பற்றிய வரைபடத்தை அழகுற இணையத்தில் வெளியிட்டுள்ளது.

பதிப்புரிமை பெற்ற இந்தப் படங்கள் பிராட்சா பவுண்டேசன் அனுமதியோடு இந்நூலில் வெளியிடப்படுகின்றன.

1,60,000 ஆண்டு முன்பு மாந்த குல மூதாதையரான Homo - Sapiens கிழக்கு ஆப்ரிக்காவில் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிட்டின. Mt DNA மற்றும் Y குரோமோசோம்கள் மூலம் இந்தச் சான்று கிட்டியது. ஆக வெள்ளை இனமே மேன்மை எனக் கலைக்களஞ்சியம் தீட்டுவார் வெட்கித் தலைகுனிய மாந்தகுல மூதாதை கறுப்பினத்தவன்

என்று வெளியாகியது உண்மை. ஆரியரே சிறந்தோர் என்று ஆணவக் கூச்சலிட்ட இட்லரும் தலை கவிழக் கறுப்பரினம் முதன்மை இனமென வெளியாயிற்று மனிதகுலத் தோற்றம்.



நன்றி: www.bradshawfourdatiar.com.

1,60,000 - 1,35,000 ஆண்டுகளுக்குகிடையே ஆப்பிரிக்கக் கண்டத்துக்குள்ளேயே மனிதகுலப் பரவல் நிகழ்ந்தது. நன்னம்பிக்கை முனைக்குத் தெற்கேயும் காங்கோ நதிப் படுகைக்குத் தென்மேற்கேயும் அய்வரி கோசுட்டுக்குக் கிழக்கேயும் பரவினர். இவர்கள் mt. DNA என்ற மரபணு கொண்ட மக்களாவர். L1 என்ற குறியீட்டுச் சொல்லால் இந்த மரபணு அழைக்கப்படும். வேட்டையாடுபவர்களாக இவர்கள்



1,35,000 - 1,15,000 ஆண்டுகட்கிடையே, குறிப்பாக 1,25,000 ஆண்டளவில் பசுமையாக அன்று காடாக இருந்த சகாராவைத் தாண்டி நைல் நதி வரை மாந்த இனம் பரவியது.



1,15,000 - 90,000 வரை முன்னேறிச் சென்ற மனிதகுல மூதாதையர் பின்நோக்கித் திரும்பலாயினர். உலகைத் தாக்கிய வறட்சி காரணமாக 90,000 ஆண்டளவில் நைல் நதியைத் தொட்ட மனித குலம் முற்றிலும் அழிந்தது. சகாரா பாலைவனமாக மாறிற்று. மீண்டும் துளிர்விட்ட ஆப்பிரிக்காவுக்குள்ளே மனித குலம் முடங்கிப் போனது.



90,000-85,000 ஆண்டு முன்பு செங்கடல் தாண்டி அரேபிய தீபகற்பத்தின் தென்பகுதியில் கடற்கரை ஓரமாகக் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. இந்தியா நோக்கி நகரத் தலைப்பட்டனர். ஆப்ரிக்கரல்லாத மக்கள் அனைவரும் இந்தக் குழுவில் இருந்து தோன்றியவர்களேயாகும். யாருடைய முகத்தில் இருந்தோ காலில் இருந்தோ உலகில் எங்குமே தோன்றியதாக அறிவியற் சான்றுகள் இல்லை.



85,000 - 75,000 ஆண்டு முன்பு தமிழகத்தில் இருந்து தோன்றி அரபிக்கடல் ஓரமாகப் பாக்கித்தான் -பாரசீகம் என ஒரு திசையிலும் கிழக்குக் கடற்கரை ஒட்டி வங்கம் - பர்மா - இந்தோனேசியா வழியாகத் தென்சீனத்துக்கும் மக்கட் பரவல் நிகழ்ந்தது. இது தொடர்பான மனித மரபணுப் பரவல் அடிப்படையில் இந்தியாவில் ஒரேயொரு முறை தவிர வேறு ஆய்வு நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

74,000 ஆண்டளவில் சுமத்திரா தீவில் மவுண்ட் டோபா என்றஎரிமலை வெடித்துச் சிதறியது. அடுத்த 6 ஆண்டுகளுக்கு அணுமழைக்காலம் ஏற்பட்டது. 1000 ஆண்டு நீடிக்கும் பனிஊழி துவங்கியது. எல்லா மக்கட் திரளும் அழிந்தன. மக்கட் பரவல் துண்டிக்கப் பெற்றது. ஆப்பிரிக்கா - பாரசீகத்துடன் இந்தியத் துணைக் கண்ட மக்கள் சங்கிலித் துண்டிப்பு நிகழ்ந்தது! முற்றிலும் மக்கள் பேரழிவால் இச்சங்கலித் துண்டிப்பு நிகழ்ந்தது. அந்தக் காலத்தில் ஆசுதிரேலியாவில் மக்கள் வாழவே இல்லை. ஆஸ்திரேலியாவுக்கு மேலே உள்ள இந்தோனேசியா தீவுக் கூட்டங்கள் தொடங்கித் தென் சீனம் வரை மட்டுமே மக்கள் வாழ்ந்தனர். மவுண்ட் டோபா எரிமலைச் சாம்பல் பெரும் புழுதியாக இந்தியாவையும் பாக்கித்தானையும் மூழ்கடித்தது. 5 மீட்டர் உயரம் நம் துணைக் கண்டம் எரிமலைப் புழுதியாலும் சாம்பராலும் மூடப்பட்டது.



74,000 - 65,000 : முற்றிலும் அழிந்தொழிந்த இந்தியா மீண்டும் துளிர்த்தது. கிழக்குத் திமோரில் இருந்து ஆசுதிரேலியாவுக்கு மக்கள் படகுகளில் சென்று குடியேறினார்கள். போர்னியோவில் இருந்து நியு கினியாவுக்குச் சென்று குடியேறினார்கள். அப்போது வடஅமெரிக்கா அய்ரோப்பா, சிந்து வெளி உள்ளிட்ட பகுதிகளில் கடும்பனியால் மூடப்பட்ட கடுங்குளிர் நாடுகளாக இருந்தன.



65,000-52,000 : உலகம் வெப்பமயமாயிற்று. பனிமூடிய உலகின் வடபாகம் மக்கள் வாழ்வுக்கு ஏற்ற இடமாக மாறத் தொடங்கிற்று. பர்மாவில் இருந்து வங்கக் கடல் ஓரமாகவும் அரபிக் கடலோரமாகவும் பாரசீகம் வழியாகவும் மத்திய ஆசியாவுக்கு மனித குலப் பரவல் நடந்தது. பின்னர் அங்கிருந்து அடுத்த கட்டமாக அய்ரோப்பாவுக்கு மனிதர்கள் குடியேறினர். ஆசுதிரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் உடைபட்ட சங்கிலி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. தென் சீனம் வரை மக்களினம் பரவியது.



52.000 - 45,000 : குறும் பனி ஊழி ; Mini Ice Age இந்தக் காலக் கட்டத்தில் துருக்கியில் இருந்து பல்கேரியா, அய்ரோப்பா என

மக்கட் பரவல் நிகழ்ந்தது. அமெரிக்காவிலோ, உருசியாவிலோ, சீனத்திலோ மக்கள் குடியேற்றமில்லை. டானுய்பு நதி வழியாக அங்கேரியில் இருந்து ஆசுதிரியாவுக்கு மனிதப் பரவல் நடந்தது. இதை உறதி செய்ய மற்றொரு சான்றாகக் கற்கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.



45,000 - 40,000 வரை : தென் ஆசிய கடற்கரை ஓரமாக மக்கள் பரவல் மேற்கு நோக்கி நிகழ்ந்தது. பாக்கித்தானில் இருந்து மத்திய ஆசியாவுக்குக் குடிபெயர்வு - குடியமர்வு நிகழ்ந்தன. இந்தோ சீனாவில் இருந்து திபெத் வழியாகக் குயிங் - ஆய் Qing - Hai சம வெளிக்கு மக்கள் பரவல் ஏற்பட்டது.



40,000 - முதல் 25,000 வரை: மத்திய ஆசிய மக்கள் கிழக்கு அய்ரோப்பா நோக்கி நகர்ந்தனர். வடக்கிலிருந்து ஆர்டிக் கடல் வழியாகக் கிழக்காசியர்களோடு இணைந்து வட கிழக்கு ஈரோசியாவுக்குப் பரவினர். இந்தக் காலக் கட்டம் கலை பிறந்த காலமாகக் கருதப்படுகிறது. பிரான்சு நாட்டில் Chauvet குகை ஓவியங்கள் - பாறை ஓவியங்கள் கொண்டு கலை பிறந்த காலமாக இக்காலம் வருணிக்கப்படுகிறது.



25.000-22.000 வரை: சுமத்திரா தீவு கிழக்கிலும் இசுபெயின் நாடு மேற்கிலும் அழிவுகளை எதிர்கொண்ட பதிவுகள் இந்தக் காலக் கட்டத்துக்கு உரியவை. அமெரிக்கப் பூர்வ குடிகளின் மூதாதையர் சைபீரியாவையும் அலாசுகாவையும் இணைக்கும் நிலவழிச் சென்று குடியமர்வு செய்தனர் .



22,000 - 19,000 : கடைசிப் பனிப் ஊழிக் காலம்: வட அய்ரோப்பியா, ஆசியா, வட அமெரிக்கா மக்கள் இல்லாமல் போயினர். ஆங்காங்கே திட்டுத் திட்டுகளாகச் சில இடங்களில் மனித குலம் மிச்சம் வைக்கப்பட்டது. வட அமெரிக்காவைப் பனி மூடியது. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்குமான கடல்வழிப் பாதை உறைபனியால் மூடியது. அப்போது அய்ரோப்பாவில் இருந்து நடைபயணமாகவே வட அமெரிக்கா போகலாம். அய்ரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் யாரும் பாலம் கட்டவில்லை. இயற்கையே இரு கண்டங்களையும் இணைத்தது.



19,000 - 15,000 : 18,000 ஆண்டு முன்பு வட அமெரிக்காவில் மொழி முகிழ்த்தது. தென்னமெரிக்காவுக்கு நகர்ந்தனர். அவர்கள் மரபணுக்கள் முன்னேற்றம் காட்டின. அதே சமயம் உலகின் இன்னொரு மூலையில் ஆசுதிரேலியாவில் பாறை ஓவியங்கள் மனிதனின் கலைப் பசியை - பண்பாட்டு மலர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.



15,000 - 12,500 வரை: காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டதால் உலகப் பருவ நிலை மாற்றம் கண்டது. தென்னமெரிக்காவில் மக்கள் பரவல் நிகழ்ந்தது. அதே வேளை வட அமெரிக்காவை பனி மூடியது. என்று கார்பன் அளவு கோல் படி கால நிர்ணயம் செய்தவர்கள் மவுண்ட் வெர்தியில் 11,790 ஆண்டுக்கும் 13,565 ஆண்டுக்கு முன்பு மக்கள் குடியேறியதாகக் கணக்கிடப்படுகின்றன.



12,500 - 10,000 ஆண்டு முன்பு வட அமெரிக்காவில் மீண்டும் குடியேற்றம் நிகழ்ந்தது.ஆர்டிக் அருகில் 11,500 ஆண்டு முன்பு எசுகிமோகளாக, அலுயட்சுகளாக, நாதேன் மொழி பேசுவோராக விளங்கினர்.



10,000 - 8,000 : பனி ஊழி முடிவுக்கு வந்தது. வேளாண்மை பிறந்தது. சகாராப் பாலைவனம் பசும்புல் படர்ந்த நிலப்பரப்பாகத் திகழ்ந்தது. பிரிட்டனிலும் இசுகாண்டிநேவியாவிலும் மீண்டும் மக்கள் குடியேறினர். தமிழகத்துக்கு மிகப் பெரும் பேரழிவு இந்தக் காலத்தில் ஏற்பட்டது.



உலக மாந்தன் ஓரினமே! ஓரிடத்திலிருந்து உலகெங்கும் பரவியவனே என்பது அறிவியல் தெளிவுபடுத்தியுள்ளது. அதுபோன்றே உலகம் ஒன்றே! ஒன்றாக இருந்து பிரிந்ததே!

செருமானிய அறிஞரான ஆல்பிரட்டு வெக்னர் (Origins of Continents and oceans) கண்டங்களும் கடல்களும் தோன்றியது பற்றி நூலெழுதியவர். உலகமே ஒரே கண்டமாக விளங்கிய உண்மையை உணர்த்த அந்தப் பெருங்கண்டத்துக்குப் பங்கேயோ என்று இலத்தீனில் பெயரிட்டார். பங்கேயா என்றால் எல்லா நிலமும் (All - Earth) என்று பொருள்படும்.

விளையாட்டாக உலக வரைபடத்தையும் கத்திரிக் கோலையும் எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு கண்டமாக வெட்டித் தனித்தனியே எடுத்துப் பார்த்தார். அவற்றை ஒன்றுடன் ஒன்று பொருந்துகிறதா என்று பார்த்தார். ஆப்பிரிக்கக் கரையும் தென்னமெரிக்கக் கரையும் பக்கத்தில் வைத்தால் பொருந்தின. இவ்வாறு உலகக் கண்டங்கள் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தவை. காலப்போக்கில் கண்டங்களின் சுழற்சியால் பிரிந்தன என்று கண்டறிந்தார். அவர் கண்டறிந்ததே கண்டங்களின் சுழற்சிக் கோட்பாடு ஆகும்.

ஆக உலகு ஒன்று! மாந்தகுலமொன்று! மொழியும் ஒரே மூலத்தில் இருந்து பிறந்ததாகவே இருத்தல் வேண்டும். மனிதன் விலங்குகள் போலன்றி மொழி பேசும் திறன் பெறக் காரணமான மரபணுவை மாக்சு பிளான்க்சு என்ற செருமானிய அறிஞர் கண்டறிந்த செய்தி 14 ஆகத்து 2002 இயற்கை என்ற அறிவியல் இதழில் வெளியாகி உள்ளது. இந்த மரபணுவுக்கு Fox P2 என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இந்த நெடிய பயணத்தை இங்கு நினைவு ஊட்டுவது தந்தை பெரியார் மனித குலம் ஒன்று என்று சொல்லி வந்தது இன்று அறிவியல் உலகால் மெய்ப்பிக்கப்பட்டு விட்டதை உறுதி செய்யவே! உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் கலைக்களஞ்சிய ஆசிரியர்களுக்கே இல்லாத பகுத்தறிவு கொண்டவராகப் பெரியார் திகழ்ந்துள்ளார். இனவெறிக்கு இடமில்லாதவராக வாழ்ந்துள்ளனர். இனம் என்ற கருத்தாக்கத்தால் மேலாண்மை செலுத்தப்பார்த்தோரை அவர் கடுமையாகச்சாடியது இனப்பற்றால் அன்று! மனித இனம் ஒன்றென உணர மறுப்பவர்களுக்கு எதிராகச் சம்மட்டி அடியெனத் தாக்குதல் கொடுத்தார் தந்தை பெரியார்! மனித குல விடுதலைக்கு, ஒருமைப்பாட்டுக்கு எதிராக நின்றவர்களைப் பெரியார் வசைபாடியது உலக நலனை முன்னிறுத்தியே! உலகினர் சமநிலை வலியுறுத்தியே!

எழுத்துச் சீர்திருத்தமும் இன்றைய ஒருங்குக் குறியும்



எத்தனையோ பகுத்தறிவாளர்கள் உலகில் வாழ்ந்தனர். அவர்களில் எவருமே மொழியைப் பகுத்தாய்ந்திடவில்லை. மக்கள் பயன் பாட்டுக்கு மொழி எளிமையாக இருக்க வேண்டுமென எண்ணியதில்லை. தந்தை பெரியார் குடியரசு ஏட்டின் 20.1.1935 நாள் தலையங்கத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தன் கருத்தைப் பதிவு செய்கிறார்.

> இப்போது மெய் எழுத்துக்கள் என்று சொல்லப்படும் 18 எழுத்துக்களிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இகரம், ஈகரம், உகரம், ஊகாரம் ஆகிய 4 சப்தங்கள் கலந்த எழுத்துக்கள் தனித்தனி வடிவங் கொண்டு அதாவது கி,கீ, கு, கூ என்பது மாதிரியே 18 எழுத்துக்களும் தனித்தனி உருவம் பெற்று 18×4 ஆக மொத்தம் 72 எழுத்துக்கள் அதிகமாக அநாவசியமாக இருந்து வருகின்றன.
>
> இந்தத் தனித்தனி வடிவங்கள் எதற்காக இருக்க வேண்டும்? எல்லா உயிர் மெய் எழுத்துக்களுக்கும் ஆகாரம் ஏகாரம் ஆகிய சப்தங்களுக்கு ா,ெ ஆகிய குறிப்புகளைச் சேர்த்து எப்படி கா, கே என்று ஆக்கிக் கொள்ளுகிறோமோ அதுபோலவே மேல் கண்ட கி, கீ, கு, கூ முதலிய சப்தங்களுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை ஏன் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது மிகவும் யோசிக்கத் தக்க விஷயங்களாகும்

உதாரணமாக ஜ ஷ முதலிய கிரந்த அட்சரங்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கு இன்றும் உகரம், ஊகரம் சப்தங்களுக்குக் கு, கூ என்கின்ற மாதிரி தனி எழுத்துக்கள் இல்லாமல் உகரத்துக்கு இந்த மாதிரி குறிப்புகளையும் ஊகாரத்துக்கு ூ இந்த மாதிரி குறிப்புகளையும் சேர்த்து ஜு, ஜூ, ஷு, ஷூ, ஸு, ஸூ, ஹு, ஹூ, என்பதாக ஏற்படுத்தி இருக்கிறார்கள், அது போலத் தமிழ் எழுத்துகளிலும் கி, கீ, கு, கூ ஆகியவைகளுக்கு ூ என்பது போன்றவைகளையோ அல்லது வேறு விதமாகக் குறிப்புகளையே சேர்த்தால் அச்சில் 72 எழுத்துக்கள் தேவை இல்லை என்பதோடு பிள்ளைகள் தமிழ் கற்பதற்கும் 72 எழுத்துக்களைத் தனியாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை.

எழுத்துக்கள் உருவம் மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது, புதிய எழுத்துக்களைச் சேர்ப்பது என்பது போலவே சில எழுத்துக்களை அதாவது அவசியமில்லாத எழுத்துக்களைக் குறைக்க வேண்டியது அவசியமாகும்.

உதாரணமாக உயிரெழுத்துக்கள் என்பவைகளில் ஐ, ஔ, என்கிற இரண்டு எழுத்துக்களும் தமிழ் பாஷைக்கு அவசியமில்லை என்பதே நமது வெகு நாளைய அபிப்ராய மாகும். ஐகாரம் போன்ற எழுத்துக்களுக்கு ை இந்த அடையாளத்தைச் சேர்ப்பதற்குப் பதில் ய் என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால் ஐகார சப்தம் தானாகவே வந்து விடுகிறது. உதாரணமாகக் கை என்பதற்குப் பதில் கய் என்று எழுதினால் சப்தம் மாறுவதில்லை என்பது விளங்கும்.

அதுபோலவே ஔகாரத்துக்கும் கௌ என்பதற்குப் பதிலாகக் கவ் என்றோ கவு என்றோ எழுதினால் சப்தங்கள் மாறுவதில்லை. கௌமதி - கவ்மதி - கவுமதி என்றே சப்தங்கள் ஒன்று போலவே உச்சரிப்பதைக் காணலாம்.

தமிழில் மேலே குறிப்பிட்ட இந்தப்படியான சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுமானால் தமிழில் மொத்த எழுத்துக்கள் 46ஆம் 7 குறிப்பு எழுத்துக்களும்

> ஆக 53 எழுத்துக்களில் தமிழ்ப் பாஷை முழுவதும் அடங்கிவிடும்.

இவ்வாறு 20.1.1935இல் எழுதிய பெரியார்

> இந்த மாற்றங்கள் நாளா வட்டத்தில் செய்யக் கூடியது என்று சொல்வதனால் ண ணை முதலிய 7 எழுத்துகள் பொறுத்தவரை உள்ள மாற்றத்தை வாசகர்கள் இப்போது முதலே அங்கீகரிப்பார்கள் என்று கருதுவதாகக் கூறிச் சீர்திருத்தத்துக்குத் தொடக்கம் செய்தது வரலாறு.

38 எழுத்துக்களில் தமிழ் எழுத்தைச் சுருக்குவது பற்றி 1936 ஆம் ஆண்டில் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பெரியார் பேசினார்.

> மொத்தத்தில் 38 எழுத்துக்கள், அதாவது உயிரெழுத்து ஐ, ஔ இரண்டும் அவை ஏறும் மெய் எழுத்துக்களில் 2× 18=36 ஆக 36+2= 38 நினைவில் கொள்ளத் தேவை அற்ற எழுத்துக்கள் ஆகிவிடும். ஐ = அய், ஔ=அவ் என எழுதலாம். இவை தவிர உயிர்மெய் எழுத்துகளில் தனி மாற்றம் பெற்றிருக்கிற ணு, று, னு ஆகிய மூன்று எழுத்துக்களும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல் ஆக்கி விடலாம்.
>
> மற்றும் மெய் எழுத்துக்களில் இகரம், ஈகரம், உகரம், ஊகாரம் ஆகிய 4 குறில் நெடில் எழுத்துக்களைக் கொண்ட 4×18=72 தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டுத் தனிச் சிறப்புக் குறிப்பை அதாவது ககரத்துக்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு ா (கால்) போட்டுவிடுவது போல, ககரத்துக்கு எகரம், ஏகரம் காட்ட ஒற்றைச் சுழிக்கொம்பு இரட்டைச் சுழிக் கொம்பு 'ெே' போடுவது போல், மற்ற இகர ஈகாரத்துக்கும் உகர ஊகாரத்துக்கும் சில குறிப்புகளை உண்டாக்கி உயிர் 10, மெய் 18, குறில் நெடில் குறிகள் 9 ஆய்தம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கி விடலாம்.

என்று 1936இல் தந்தை பெரியார் பேசினார்.

20.1.1935இல் 53 எழுத்துக்களில் தமிழ் என்று சிந்தித்த பெரியார் ஒரே ஆண்டில் 1936இல் 38 எழுத்துக்களாகத் தமிழைச்

சுருக்கிப் பயன்பாட்டுக்கு எளிதாக்குவது பற்றிக்கருத்துரைத்தார். அவரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் ஓய்ந்திடவில்லை. இன்னும் மேலே சென்று உயிர் 10, மெய் 15, ஆய்தம் 1 மெய்க்குறிப்பு 1 என 27 எழுத்துக்களில் தமிழ்மொழி வரிவடிவத்தைச் சுருக்குவது பற்றிப் பெரியார் சிந்தித்தது இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் எதிர் கொள்ளும் சிக்கல்களுக்கும் தீர்வாக அமைந்துள்ளதை ஒப்புநோக்கிப் பாருங்கள்.

சூன் 23-2009 அன்று எனக்கு வந்த ஒரு மின்னஞ்சலில் செ. நாராயணசாமி என்ற ஆய்வாளரின் கருத்தைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

> தற்சமயம் நான் வள்ளலாரின் திரு அருட்பா பாக்கள், சிலப்பதிகாரத்தின் சில பகுதிகள், பாரதியார் பாடல்கள் ஆங்கில மொழியாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளேன். என்னுடைய திருக்குறள் தமிழ், ஆங்கில மொழியாக்க நூலும் தமிழ் - தமிழ் - முழு ஆங்கில நூலும் 1998 தொடங்கி 12க்கும் மேற்பட்ட பதிப்புகள் சென்னை சுரா புத்தக நிலையத்தின் மூலம் வெளி வந்துள்ளன. அவற்றை இணைய தளத்தில் கட்டணமின்றிப் பார்வைக்கும் சேர்க்க விரும்புகிறேன்

என்று செ. நாராயணசாமி தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டு பின் வரும் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

> தமிழ் நுண்ணியல் பல்கலைக்கழக நூலகத்தில் எல்லாத் தமிழ் இலக்கிய நூல்களும் உள்ளன. Tamil View work அவர்களின் மின் எழுத்து வடிவம் கம்பன். ஆனால் ஒலியச்சு முறைப் பதிவு இல்லை. TSCU எழுத்து வடிவங்கள் பயன்படுத்தப்பட வில்லை.
>
> இணையத் தளத்திலும் கணிப்பொறி மின்னஞ்சல்களிலும் நேரிடையாகத் தமிழில் எழுதும் வசதிக்குத் தமிழாராய்ச்சி வட்டமும் தமிழக அரசும் அனுப்பியுள்ள வேண்டுகோளின் பேரில் பன்னாட்டு நேரிணைக் கோட்பாட்டு மையத்தினர் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு நமது அரசும் இன்னும் தேவையான மாற்றங்களைச் செய்து புதிய திருத்திய மனுவை அனுப்பியதாகத் தெரியவில்லை. மொத்த

> எழுத்துக்கள் 40 க்குள் இருக்க வேண்டும் என்ற விதியைக் கடைப்பிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

என்று தமிழ் எதிர்கொள்ளும் அனைத்துலகச் சிக்கலை 21 ஆம் நூற்றாண்டில் குறிப்பிடுகிறார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இச்சிக்கலுக்குத் தீர்வு முன்மொழிந்த பெரியாரின் பகுத்தறிவுக் கண்ணோட்டம் காலங்காலமாகத் தமிழர்களால் நினைந்து போற்றப்படும்.

பெரியார் தமிழுக்குப் பகைவர் என்பது போல் ஒரு மாயத்தோற்றத்தைச் சிலர் உருவாக்கி விட்டார்கள். அவர் பயன்படுத்திய ஒரு சொற்றொடரை மட்டுமே பற்றிக் கொண்டு இத்தகு புனைந்துரைகள் புற்றீசல் என்று புறப்பட்டன.

முனைவர் மா. நன்னன் தொகுத்த பெரியார் கணினி - 2, பக்கம் 933இல் பெரியார் தமிழை எவ்வளவு உயர்வாகப் போற்றுகிறார் என்பதைப் பதிவு செய்துள்ளது.

> தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவை தமிழே ஆகும். மலையாளப் பாகத்தில் பேசும் தமிழ் மலையாளமாகச் சொல்லப்படுகின்றது. கர்நாடகப் பாகத்தில் பேசும் தமிழ் கன்னடம் ஆகிவிட்டது. ஆந்திரத்தில் பேசும் தமிழ் தெலுங்காக ஆகிவிட்டது. நால்வர்களும் பேசுவது தமிழ் மொழிதான்.
>
> திராவிட மொழிகள் என்று சொல்லப்படும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவைகள் பிரித்துக் கொள்ளப்பட்ட, பிரிக்கப்பட்ட மொழிகளே அல்லாமல் கிளை மொழிகள் அல்ல.
>
> பண்டிதர்களில் சிலர் இவை நான்கும் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்) ஒன்றிலிருந்து வந்தவை, ஒரே தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்த அக்கா தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பது என் கருத்து. இத்திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான். அது தமிழ் தான். அந்த ஒன்றைத்தான் நாம் நாலு பெயரிட்டு அழைக்கிறோம். நாலு இடத்தில் பேசப்படுவதால் நான்கு பெயரால் வழங்கி வருகிறதே ஒழிய நாலிடத்திலும் பேசப்படுவது

தமிழ் ஒன்றுதான். நாலும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவதுதான் தவறு. ஒன்றுதான் நாலாக நமது அறியாமையால் கருதப்பட்டுவருகிறது. இதை நிரூபித்துக் காட்டவும் என்னால் முடியும்.

நாலு தனி இடத்தில் வசித்து வந்த மக்கள் போக்குவரத்துத் தொடர்பு இல்லாததால் அந்தந்தச் சீதோட்சண நிலைக்கேற்ப இயற்கையாகவே அவர்கள் பேசிய வார்த்தைகளில் சில சப்த மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதைச் சாதகமாக வைத்துக் கொண்டு நம்மை நாலு சாதியாகப் பிரித்து வைத்த ஆரியம் நம் மொழியையும் நான்காகப் பிரித்து வேண்டுமளவும் வடமொழியை அவற்றிற்குள் புகுத்தித் திராவிட மொழியைக் கெடுத்து விட்டது. அன்றைய பண்டிதர்கள் ஆரியத்திற்கு அடிமைப்பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்கள் இல்லை. இன்னும் அந்தப் பண்டிதர்களுக்கு அந்த ஆரியமோகம் தீர்ந்த பாடில்லை.

நாம் அங்கே என்பதை ஒருவன் அக்கடே என்றும் ஒருவன் அவடே என்றும் கூறுகிறான். அச்சிறு வேறுபாட்டின் காரணமாக இவை வெவ்வேறு மொழியாக்கப்படலாமா? அங்கிட்டு என்று வழங்கப்படும் தமிழன் வேற்றுமொழியாளனா? எனவே இவை நான்கும் ஒரே உதிரத்திலிருந்து உதித்து எழுந்தவை அல்ல. அந்த உதிரமே தான் இவை நான்கும். என்னருந் தமிழே! நீயேதான் தெலுங்கு! நீயே தான் கன்னடம்! நீயே தான் மலையாளம்! என்று தான் நான் கூறுவேன். அதை நமது மக்களுக்கு உணர்த்தி ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற ஒன்றுபட்ட நிலையை உண்டாக்க வேண்டும்

என்றார் பெரியார்.

இந்தப் பெரியாரா தமிழை இழிவு படுத்துபவர். தமிழைப் பழிப்பவர் என்று இவரைச் சொல்வது மடமையிலும் மடமை அல்லவா!

பெரியார் கருத்துக்குப் பேரறிஞர் அம்பேத்கார் உடன்பட்டு நிற்பதையும் தமிழின் தொன்மையை நிறுவுவதையும் இங்குச் சுட்டிக் காட்டுதல் சாலப் பொருத்தமாகும்.

> தாசர்கள் என்பதையும் நாகர்கள் என்பதையும் வேறுபடுத்திப் பார்ப்பது பிழையான கருத்தாகும். தாசர்களும் நாகர்களும் ஒன்றே! நாகர்களுக்கு இன்னொரு பெயர் தாசர்கள் என்பதாகும். வேத இலக்கியங்களில் நாகர்களைத் தாசர்கள் என்று ஏன் குறிப்பிட்டார்கள் என்பது கடினமான செயல் அல்ல

இந்தோ - ஈரானியச் சொல்லான தாக்காகா என்பதன் சமற்கிருத வடிவம் தாசர்கள் ஆகும். இந்திய வரலாற்றுப் பேரவையின் 1936 ஆம் ஆண்டு மூன்றாம் அமர்வின் இந்தியத் தொன்மை வரலாற்றில் நாகர்களும் நாக வழிபாடும் என்ற தலைப்பில் செல்வி கருணாகர குப்தா விரிவாக இதை விளக்கியுள்ளார்.

> ஆரியர்கள் நாகர்களின் அரசனான தாக்காகா பெயரால் தாசர்கள் என்று அழைத்தனர்

என தீண்டத்தகாதவர் என்ற ஆங்கில நூலில் (The Untouchables) பேரறிஞர் அம்பேத்கர் கூறியுள்ளார்.

தமிழே இந்தியா முழுதும் பேசப்பட்ட மொழி என்ற அம்பேத்கார் கூற்றை உறுதிப்படுத்த இந்தியாவெங்கும் தமிழ் என்ற பெயர் இடம் பெற்ற ஊர்ப் பெயராய்வில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையர் திரு. பாலகிருட்டிணன் ஈடுபட்டார். ஆந்திராவில் 29 ஊர்களும் அருணாச்சலப் பிரதேசத்தில் பதினொன்றும் அசாமில் முப்பத்தெட்டும் பீகாரில் ஐம்பத்து மூன்றும் குசராத்தில் அய்ந்தும் கோவாவில் ஒன்றும் அரியானாவில் மூன்றும் இமாச்சலப் பிரதேசத்தில் முப்பத்து நான்கும், கருநாடகத்தில் இருபத்து நான்கும் மகாராட்டிராவில் நூற்று இருபதும் மேகாலயாவில் அய்ந்தும், மணிப்பூரில் பதினான்கும், மத்தியப் பிரதேசத்தில் அறுபதும், நாகாலாந்தில் நான்கும் ஒரிசாவில் எண்பத்து நான்கும், பஞ்சாபில் நான்கும், இராசசுதானில் இருபத்தாறும், உத்திரப்பிரதேசத்தில் ஆறுபத்து நான்கும், மேற்கு வங்கத்தில் இருபத்து நான்கும் தமிழ்நாட்டில் 10 ஊர்களும் தமிழ் என்ற சொல்லை உள்ளடக்கிய ஊர்ப் பெயர்களாக உள்ளன. ஆக இந்தியாவெங்கும் 612 ஊர்ப் பெயர்களில் தமிழ் உள்ளதால் இந்தியாவெங்கும் தமிழர் பரவி வாழ்ந்தமை மெய்ப்பிக்கப் படுவதாகப் பாலகிருட்டிணன் ஆய்ந்து கூறியுள்ளார்.

பீகாரில் தமிழ்க் கோடாவும் ஒரிசாவில் தமிழ்க்குடியும் ஊர்களின் பெயர்களாகும். ஒரிசாவில் பழனி, போடி, தேக்கடி, தேனி என்றுள்ள ஊர்ப் பெயர்களையும் தம் ஆய்வுக்குச் சான்றாகப் பகரும் ஆற்றல் மிகு ஆணையர் போற்றற்குரியோராவர். தமிழ் இந்தியாவெங்கும் பரவி இருந்துள்ளதைச் சான்றுகள் மெய்ப்பித்தாலும் இன்று தமிழுள்ள நிலை பெரியாரைக் கவலை கொள்ளச் செய்கிறது.

> நமது மேன்மைக்கு,நமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்ற மொழி தமிழைவிட மேலான மொழி இந்நாட்டில் இல்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே ஒழிய அது அற்புத அதிசயங்கள் விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல. அற்புத சக்திகள் நிறைந்த மொழி என்று பிடிவாதம் செய்வது அறியாமை தான். அது தமிழ்ப் பண்பு கூட அல்ல. தமிழில் அதிசயம், மந்திரம், சக்தி முதலிய சொற்கள் இல்லை

என்று தமிழ் மீது தான் கொண்டுள்ள பற்றைப் பதிவு செய்யும் பெரியார்

> முதலாவதாகத் தமிழ் முன்னேற்றமடைந்து உலக மொழி வரிசையில் அதுவும் ஒரு மொழியாக இருக்க வேண்டுமானால் தமிழையும் மதத்தையும் பிரித்து விட வேண்டும்.தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்கவேண்டும்.

என்று தமிழ் முன்னேற்றத்தின் தடைக்கல் எதுவென அடையாளம் காட்டியுள்ளார்.

யாதுமூரே! யாவருங்கேளிர் என்ற முழக்கம் மூலம் தான் தமிழ் உலகப் பார்வை கொண்ட மொழியென உலகு அறிந்தது. மதநூற்களால் தமிழுக்கு உலக மதிப்பு கிடைத்திடவில்லை. வள்ளுவரால் தான் வான்புகழ் கிடைத்தது! புராணக் குப்பைகளால் அல்ல என்று புரிந்து கொள்வோம்! மதமற்ற, சாதியற்ற மனிதநேயம் மலர உழைக்கும் ஒப்பிலா மொழியாக உலக அரங்கில் பெரியார் விரும்பியபடி தமிழை உயர்த்துவோம்!

நாத்திகமும் நம் பெரியாரும்

நாத்திகம் என்பது என்ன? இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் அதற்கு முன்பும் பல்வேறு அறிஞர்கள் விளக்கம் நல்கியுள்ளனர்.

1772இல் முதன் முதலாக The System of Nature (இயற்கை அமைப்பு) என்ற நூலைப் பால் என்ரி ஓல்பாச் எழுதினார். நாத்திகம் பற்றிய முதன் நூலாக இந்நூல் போற்றப்படுகிறது. அவரெழுதிய நல்லுணர்வு (Good sense) என்ற நூலில்

> உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் நாத்திகர்களே அவர்களுக்கு கடவுள் பற்றிய எந்தக் கருத்துமில்லை

என்று விளக்கமளித்தார். பிறக்கும் குழந்தையிடம் இல்லாக் கடவுள் உணர்வு மற்றவர்களால் கற்பிக்கப்படுவது இதனால் தெளிவாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நாத்திக நல்லறிஞரான சார்லசு பிராட்லா (Charles Brad Law) 1876இல் எழுதிய (The Free Thinkers text book) "சுதந்திரச் சிந்தனையாளர்களின் பாடநூல்" எனும் தலைப்பிலான நூலில் பிரித்தானிய அறிஞர் பின் வருமாறு நாத்திகம் பற்றி விளக்கவுரை நல்குவார்.

> நாத்திகம் என்பது கடவுள் இல்லாதது. கடவுள் இல்லை என்று நாத்திகம் கூறவில்லை. கடவுள் என்றால் என்ன என்று நீங்கள் கூற வருகிறீர்களோ அது புரியவில்லை என்பவன் நாத்திகன். எனக்குக் கடவுளைப் பற்றிய எந்தவொரு கருத்துமில்லை. கடவுள் என்ற சொல் எந்தப் பொருளையும் புலப்படுத்தாத வெற்று

> ஒலியாகவே புலப்படுகிறது. கடவுளை நான் மறுக்கவில்லை, ஏனென்றால் எனக்கு எந்தஒரு கருத்தும் புலப்படாத ஒன்றை மறுக்க முடியாது. அதைக் கடவுளை உண்டென்பவர் கொண்டுள்ள கருதுகோள் செம்மையற்றது. எனக்கு அதை விளக்கிச் சொல்லி விளங்க வைக்க நம்பிக்கையுடையோரால் முடியாதது

என்று விளக்குவார்.

> அறிவு என்பது எல்லாச் சீவராசிகளுக்கும், தாவரங்கள், பட்சிகள், மிருகங்கள் முதல் மனித சமுதாயம் வரை எல்லோருக்கும் பொதுவானது. ஆயினும் மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமின்றி அதற்கும் மேம்பட்ட பகுத்தறிவையும் பெற்றுள்ளான். பகுத்தறிவைப் பயன்படுத்தும் சமுதாயமே விஞ்ஞானம், வைத்தியம் முதலிய துறைகளில் வெற்றி கொண்டு முன்னேறி வர முடிகிறது

என்று சமுதாய முன்னேற்றத்துக்காகவே பெரியார் பகுத்தறிவைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தியவர். பகுத்தறிவையும் விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருந்துதான் பயன்படுத்த வேண்டும் என இலக்கணம் வகுத்தவர் தந்தை பெரியார்.

> பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்கும் போது எந்தப் பற்றும் அற்ற நிலையில் இருந்து சிந்திக்க வேண்டும். பகுத்தறிவுக்காரருக்கு எந்தப் பற்றும் இருக்கக்கூடாது என்றேன். ஏன்? கடவுள் பற்று உடைய ஒருவன் கடவுள் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவானாகில் ஏற்கெனவே அவற்றில் பற்றுக் கொண்டவன் ஆனபடியால் எப்படி உண்மையை அவனால் காண முடியும்?

என்று வினா எழுப்புவார் பெரியார். எனவே நாத்திகம் உண்மையை தேடுவது. விருப்பு வெறுப்பு அற்று நடுநிலை நின்று ஆராய்வது என்றாகிறது.

அன்னிபெசன்ட் அம்மையார் ஆரம்பக்காலத்தில் நாத்திகராக விளங்கினார். 1877இல் (The Gospel of Atheism) "நாத்திக மறை" என்ற நூல் எழுதியவர் அன்னி பெசன்ட்.

> நாத்திகனின் நிலைப்பாடு தெளிவானது. எந்தவிதக் குழப்பத்துக்கும் இடந்தராதது. எனக்குக் கடவுளைப் பற்றி எதுவும் தெரியாது. தெரியாத ஒன்றை நம்பவும் முடியாது. நீங்கள் கடவுள் பற்றிக் கூறுபவை ஒன்றுக் கொன்று முரண்பட்டவைகளாகும். எனக்குத் தெரியாத மொழிபோலத் தோன்றும் கடவுளை நான் மறுக்கவில்லை. நீங்கள் சொல்லும் கடவுள் இருக்கவே முடியாது என்பதை மட்டும் உறுதிபட மறுப்பேன். அதனால் நான் கடவுள் இல்லாமல் வாழ்கிறேன்

என்றார் அன்னிபெசன்ட்.

இப்படி நாத்திகத்துக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டதுண்டு. அதிலிருந்து மாறுபட்டவர் தந்தை பெரியார். உலகப் பகுத்தறிவாளர் பிறரிடம் இல்லாத உறுதியோடு நெற்றிப் பொட்டில் அறைவது போலக் கடவுள் இல்லை இல்லை இல்லவே இல்லை என்று பெரியாரைப் போலத் துணிச்சலுடன் சொன்னவர்கள் யாரும் இல்லை. "மாஜி கடவுள்கள்" நூலெழுதி வழக்கில் இருந்து மறைந்து போன கடவுளரைப் படம் பிடித்த அறிஞர் அண்ணா அவர்களும் திருமூலர் சொற்றொடரைப் பற்றிக் கொண்டு ஒன்றே குலம்! ஒருவனே தேவன் என மக்கள் மனம் புண்படாமல் பக்குவமாகச் சொன்னார்.

பாவேந்தர் பாரதிதாசனோ எனக்கில்லை கடவுள் கவலை என்றார். ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பதாகச் சொன்னார் அண்ணா! அறிவே தெய்வம் என்றார் பாரதியார். யாருமே பெரியாரைப் போல் கடவுள் இல்லை என்பதை அடித்துச் சொன்னதில்லை. நாத்திகம் பற்றிய விளக்கத்தை அளித்த இன்னொரு பிரித்தானிய அறிஞர் சார்லசு சௌத்ஆல் ஆவார். பகுத்தறிவு இதழினை நடத்தியவர் சார்லசு சௌத் ஆல். அவரது நாத்திகத் தத்துவம் பற்றி வரலாற்றறிஞர் சே.எம். இராபர்ட்டுசன் ஆத்திகம் Theism என்பதன் எதிர்மறையாக A - Theism நாத்திகம் என்ற சொல் பயன்பட்டது. அச்சொல் மதப்பிரச்சாரகர்கள் சொல்வது போலக் கடவுள் இருப்பதை மறுத்துரைக்கவில்லை. தன் அனுபவத்துக்கு ஏற்ப மனிதன் இருப்பதாக நம்பி உருவகித்துக்கொள்ளும் மாயத்தோற்றமே கடவுள் தத்துவம். எந்த விளக்கமும் சரிவர அளிக்க முடியாததும் விளங்காததும் ஆன தத்துவமே கடவுள் ஆகும். கடவுள் இல்லை என்று கூட நாத்திகம் மறுப்பதில்லை. கடவுள் இருக்கிறார் என்று சொல்பவனுக்கே அவர் இருப்பதை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்புள்ளது என்பதே நாத்திகமெனச் சார்லசு சௌத்ஆல் கருதியதாக இராபர்ட்டுசன் எழுதினார்.

Free Thinker இதழாசிரியரும் எழுத்தாளருமான சி. டபிள்யூ பூட் (G.W. Foote) (1902) கடவுள் இல்லை என மறுக்கும் ஒரு நாத்திகரைக் காட்டுங்கள். நாத்திகம் என்பது ஆத்திகத்தின் எதிர்மறை ஆகும். இருதுருவங்களாகும். நாத்திகனுக்குக் கடவுள் கிடையாது என்றார். பிரித்தானிய தேசிய மதச்சார்பற்றோர் சங்கத் தலைவரும் பன்னூல் படைப்பாளியுமாகிய (Chapmen Cohan) சேப்மென் கோகென் கடவுளை நம்ப மறுக்கும் நாத்திகமும் வரலாற்றில் அண்மைக் காலத்திய கருத்தாகும் என்கின்றார். கடவுளை நம்புபவன் ஆத்திகன். நம்பாதவன் நாத்திகன் என்பதாகவே அவர் விளக்கமும் உள்ளது.

கார்டன் இசுடெய்ன் Gorden Stein: என்பார் நம்பாமை Encyclopaedia of Disbeleif: பற்றிய கலைக் களஞ்சியத்தை உருவாக்கியவர். நிகண்டுகளை மறந்த தமிழர்கள் கலைக் களஞ்சியங்களை உருவாக்கினாலும் பல்துறைக்கெனத் துறைதோறும் கலைக்களஞ்சியங்கள் தமிழில் உருவாகவில்லை. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியெனத் தமிழன் தன்னைத்தானே பாராட்டிக் கொள்வான். அத்தகு மூத்த குடியிடம் Encyclopeadia of Rocks and Minerals எனத் தனித்தனியாக உண்டா என்றால் இல்லை என்பதே வேதனை அளிக்கும் உண்மை. புதுவது புனைவது கூட வேண்டாம். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நந்தமிழ் மொழியில் பெயர்க்கச் சொன்ன பாரதியாரின் அறிவுரையாவது தமிழர்கள் பின்பற்ற வேண்டும்.

> ஆத்திகம் என்பது இறைவன் இருப்பதாக நம்புவது என்பதுபோல் நாத்திகம் அந்த நம்பிக்கை அற்ற நிலையையே குறிக்கவேண்டும். ஆனால் A - Theism என்ற அந்த ஆங்கிலச் சொல்லில் மறுப்பு வெளிப்படவே இல்லை. இறை மறுப்பு செய்யும் நாத்திகன் கிடைத்தற்கரிய வகை நாத்திகனாவான்

என்று கூறிய கார்டன் இசுடீன், அப்படி ஒருவன் இருப்பானே ஆகில் என முடிக்கிறார். அப்படி ஒருவர் இருந்தார். உலகிலேயே அவர் ஒருவரே அரிய வகை நாத்திகர். கடவுள் இல்லை! இல்லை இல்லவே இல்லை என்று அடித்துச் சொன்னவர் அவர் தாம் நம் பெரியார்.

"கடவுள் இருப்பதாக நம்பாமையே நாத்திகம் என" இந்தக் கலைக் களஞ்சியம், நம்பாமை பற்றிய கலைக் களஞ்சியம் நவில்கிறது.

The Blackwell Dictionary of Sociology: Allan G. Johnson: கடவுளரும், பெண்பாற் கடவுளரும், பேராற்றல் படைத்த சக்திகளும்

இருப்பதாகப் பண்பாட்டுத் தளத்தில் கட்டமைக்கப்படும் கருத்தாக்கமே ஆத்திக மதமாகும். கிறித்துவத்திலும் இசுலாத்திலும் யூதமதத்திலும் காணப்படும் ஓர் இறைக் கோட்பாடும் இந்து மதம் போல் பல இறைக் கோட்பாடும் பண்பாட்டால் முகிழ்த்தவை என அல்லன் ழி. சான்சான் எழுதிய சமூக இயலுக்கான பளாக்வெல் அகராதி கூறுகிறது.

எட்வில் ஆர்.ஏ. செலிக்மேன் எழுதிய சமூக அறிவியலுக்கான கலைக் களஞ்சியம் "எந்தக் கடவுள் இருப்பதையும் மறுப்பவனே நாத்திகன்" என்ற குறுகிய பொருளில் நாத்திகம் விளக்கப் படுகிறது."உலகம் மனிதப் பண்புகளும் அறிவாற்றலும் கொண்ட ஒருவராலோ பலராலோ படைக்கப்பட்டு ஆளுமை செலுத்தப்படுகிறது என்பதை மறுப்பவர்கள் நாத்திகர்கள் ஆவார்கள்" என்றிடும் இந்தக் கலைக் களஞ்சியம் அந்தக் கால ரோமாபுரி அரசின் கடவுளரை - அறிஞர் அண்ணா அடையாளம் காட்டிய மாஜி கடவுளரை ஏற்க மறுத்த துவக்கக்காலக் கிறித்துவர்களையும் யூதர்களையும் கூட நாத்திகர்கள் என்று நிந்தித்தார்கள் எனும் செய்தியைப் பதிவு செய்கிறது.

மதஞ்சார் கலைக்களஞ்சியங்களும் நாத்திகம் பற்றிய கருத்தறிவிப்பதை இங்கு ஒப்புநோக்குவது சாலப் பொருத்தமாகும்.

New Dictionary of Religions: John R. Hinnells.

ழான் ஆர் இன்னல்சு எழுதிய மதங்களுக்கான புத்தகராதியில்

"எந்தக் கடவுளும் கடவுள்களும் இருக்கிறார்கள் என்ற நம்பாமை உடையவன் நாத்திகன் ஆவான்" என்றுள்ளது.

The Harper Collions Dictionary of Religion: Jonathan Z. Smith and William S. Green.

ஆர்பர் காலின்சின் மதங்கள் பேரகராதியைச் சோனத்தான் இசட். இசுமித் அவர்களும் வில்லியம் எசு. கிரீன் அவர்களும் எழுதினார்கள். Atheism என்ற சொல் a - theos என்ற கிரேக்க மூலச் சொல்லில் இருந்து முகிழ்த்தது. கடவுள் இல்லை என்ற பொருளில் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டது. தெய்வீகத் தன்மை பற்றிய விமரிசனமாக இச்சொல் புழங்கியது. கிரேக்க நாட்டின் அணுத்தத்துவக் கோட்பாட்டாளர்கள் (atomist school of philosophy) கடவுள் இருக்கக்கூடும் என்பதை மறுக்கவில்லை. கடவுளர் சாகாத் தன்மை பெற்றவர்கள் என்பதையும் நிரந்தரமானவர்கள் என்பதையுமே அணுக் கோட்பாட்டியக்கம் மறுத்தது. கடவுளர் இருப்பார்களாயின் இயற்கைக்கு உட்பட உயர் உயிர்களாகவே அவர்கள் இருக்கக்கூடும் என அணுக்கோட்பாட்டியக்கம் கருதியதாகப் பேரகராதி சொல்கிறது.

கர்மாவையோ முற்பிறப்பு அடிப்படையில் மறுபிறப்பையோ ஏற்கும் சுழற்சியில் மனிதருக்குள்ளது போன்றே கடவுளுக்கும். கடவுளுக்கு விதிவிலக்கைப் பௌத்தம் அளிக்கவில்லை. நவீன நாத்திகம் அணுக்கோட்பாட்டியக்கத்தின் வளர்ச்சியாகும். ஆனால் ஒருபடி மேற்சென்று பேராற்றல் படைத்த மனித சக்தி இல்லை என மறுக்கிறது. பேரண்டப் பெருவெளிக்கு அப்பாலோ உள்ளேயோ பேராற்றல் மனிதர்கள் - இறைவர்கள் இல்லை என்பது நவீன நாத்திகம்.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட பேராற்றல் சக்திகள் உள்ளன என நம்பாமல் வாழும் வாழ்வு நெறியே நாத்திகமாகும்.

ஆக்கப்பூர்வ நாத்திகம் "உலகில் மனிதர்கள் சுதந்திரமாக வாழவேண்டுமெனில் கடவுள் என்று இருக்கவும் கூடாது மனிதச் சுதந்திரத்துக்கு தடையும் விதிக்க முடியாது" என்று கூறுவதாக மதப்பேரகராதி நாத்திகத்தின் சில பிரிவுகளுக்கு விளக்கம் அளிக்கிறது.

பெரியாரின் நாத்திகம் மனித விடுதலையை மையமாகக் கொண்டது

> பிறவியினால் பேதமும் தொழிலினால் பேதமும் பொருளினால் பேதமும் நிலைத்திருக்கக் காரணமாய் இருந்து வருவது நாம் ஒப்புக் கொள்ளும் கடவுளும் மதமும் விதியும் வினையும் தான். வஞ்சனையாலும் திருட்டாலும் சூதாலும் ஒருத்தன் பணம் திரட்டிச் செல்வவான் ஆகலாம். இருந்தபோதிலும் அது கடவுளால் அளிக்கப் பட்டதாகச் சமுதாயத்தினால் கொள்ளப்படும்

எனப் பெரியார் கொதித்தெழுந்தார். பெரியாரின் கடவுள் ஒழிப்பு சாதிமத ஒழிப்பு மனித குலச் சமமின்மையை ஒழிப்பை நோக்கமெனக் கொண்டதாகும்.

உலகப் பார்வை கொண்டவர் பெரியார். ஒரு நாட்டுக்குச் சொந்தமானவரல்ல! உலக மக்கள் மேம்பாட்டுக்கு உழைத்தவர் பெரியார்.

> இன்று உலகத்தில் உள்ள பெரும்பான்மை மதக்காரர்கள் தங்கள், தங்கள் கொள்கைகளையும் வாசகங்களையும் ஆண்டவன் சொன்னான் என்று சொல்லிக் கொண்டு அவற்றைப் பாமர மக்களிடத்தில் பலவந்தமாகச் செலுத்தி விட்டார்கள். அதனாலேயே மக்களுள் பற்பல பிரிவுகள், அபிப்ராய பேதங்கள் மக்களின் ஒற்றுமையை குலைப்பதோடு ஒருவரை

ஒருவர் சந்தேகிக்கவும் வெறுக்கவும், அலட்சியமாகக் கருதவும் எதிர்க்கவும் வஞ்சிக்கவும் அடக்கி ஆளவும் பயன்படுகின்றன. இந்த உணர்ச்சியையும் செய்கையையும் உலகத்தில் செல்வாக்குப் பெற விட்டுக் கொண்டிருக்கும் வரை மனித சமூகத்திற்குள் பொதுவான ஒற்றுமையும் ஓய்வும் ஏற்படுவதற்கு இடமே இல்லை" என்றார் பெரியார்.

மோட்சத்துக்குப் போகக் கோயில்கட்டுவான். குளம் வெட்டுவான். எறும்புப் புற்றுக்கு அரிசி போடுவான். பாம்புப் புற்றுக்குப் பால் ஊற்றுவான். ஆனால் மனிதனுக்குத் தொண்டு செய்வதன் மூலம் மனித இனம் மேன்மை அடைய வேண்டும் என்று எந்த மதத்தாபனமோ மதவாதிகளோ போதிப்பதே இல்லை

என்றும் பெரியார் கூறினார்.

மனிதருள் பேதங்களையும் பிரிவுகளையும் ஏற்படுத்துவதால் மதங்களை ஒழிக்கக் கடவுள் மறுப்பைப் பெரியார் கையில் எடுத்தார். மனித மேம்பாட்டுக்கு, மனித நேயத்திற்கு வித்திடாத மதங்களைப் பெரியார் சாடினார்.

"மனிதன் அறிவாளியானால் கடவுளை நம்பமாட்டான்". மூட நம்பிக்கைகளை நம்பமாட்டான். ஆனதாலே மக்களைப் பகுத்தறிவு வாதியாக்கி விட்டால் அவன் நாத்திகனாகி விடுவான். எனவே மனிதனை அறிவாளி ஆக்கக்கூடாது. பகுத்தறிவு வாதியாக்கக் கூடாது. கல்வி கற்றவனாகக் கூடாது என்பதற்காக மனிதனை அறிவற்றவனாக்கி வைத்ததோடு அவன் படிப்பதும் குற்றம் என்று எழுதி வைத்தார்களா? என்று பெரியார் சொல்வார்.

தமிழ் மக்களுக்குக் கல்வி கற்பிக்கப்படக்கூடாது என்பதில் ஒரு தன்னலக் கூட்டம் பல நூற்றாண்டுகளாக பாடுபட்டு வருகிறது. தமிழர்களுக்குக் கல்விக் கற்பிக்கக் காரணமான மடங்களைத் தாக்கி அழித்த நிகழ்ச்சி கல்வெட்டாய்வாளர்களால் குகையிடி கலகமாகக் காட்டப்படுகிறது.

பெரிய தேவரின் 22 ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இந்நிகழ்ச்சியை முதன் முதலாகப் பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் பார்ப்பனரால் தூண்டப்பட்டே

> திருச்சிற்றம்பல முதலியார் இருந்த திருத்துறைப்பூண்டி மடத்தைக் கொள்ளையிட்டிருக்க வேண்டும்

என்றும் குறிப்பிடுகிறது [P.Spratt: DMK in power p. 22]

மூன்றாம் குலோத்துங்கன் பற்றிய மற்றொரு கல்வெட்டு வடநாட்டுப் பார்ப்பன மடத்தலைவர்கள் தென்னாட்டுச் சைவ மடத்தலைவர்களின் செல்வாக்கினைக் குலைப்பதற்காகவே பார்ப்பனர்களால் குகையிடி கலகத்தை தோற்றுவித்திருக்க வேண்டும் என்று கூறுகிறது.

> இக் குகையிடி கலகம் சோழ மன்னர்களுக்குக் குருமார்களாக நிலவியவர்களும், கோளகி மடம், பிச்சாவிருத்தி மடம் முதலான சைவாதீனங்கட்குத் தலைவர்களாக இருந்தவர்களும் ஆகிய வடநாட்டுப் பிராமணர்கள் விரதம், சீலம், ஞானம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தென்னாட்டுச் சைவத் துறவிகளின் செல்வாக்கையும் மேம்பாட்டையும் குறைப்பதற்கு உண்டு பண்ணியதாகும்

என்பது கல்வெட்டாய்வாளர் கருத்து. (P. Spratt).

இரண்டுமே மதங்கள் தாம்! இரண்டுக்கும் மோதல்! ஒரு மதம் தாய்மொழியில் கல்வி கற்பிக்கிறது. அதனை எதிர்த்து இன்னொரு மதம் கலகம் செய்கிறது. கல்வி கற்கக் கூடாது என்று நம்மவர்களை மூடநம்பிக்கையுடன் என்றென்றும் வைத்திருக்க விரும்பிய கூட்டமே பெரியாரை இறை மறுப்பாளராக மத எதிர்ப்பாளராகச் சாதி ஒழிப்பாளராக மாற்றியது என்பது வெள்ளிடை மலையென விளங்கும்.

கடவுள் உண்டென்பாரும் இல்லை என்பாரும் ஆத்திகம் - நாத்திகம் எனப் பிரிந்துள்ள நிலையில் அறிவியலும் உண்மை தேடி ஓடிய வண்ணமுள்ளது. பகுத்தறிவைப் பயன்படுத்திக் கடவுளரைக் கண்டுபிடிக்க ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன.

சுவிட்சர்லாந்து நாடும் பிரான்சும் சந்திக்கும் இடத்தில் உள்ள சூரா (Zura) மலையின் அடிவாரத்தில் பூமிக்கடியில் நூறு மீட்டர் ஆழத்தில் முழு வட்டப்பாதையில் 27 கி.மீ. தூரம் செல்லும் சுரங்கப்பாதை உள்ளது. இந்தச் சுரங்கப்பாதை (CERN) அணுஆய்வுக்கான அய்ரோப்பிய மையத்துக்குச் சொந்தமானது. அங்கு நடக்கும் ஆய்வுகள் உலகைப் பற்றிய மர்ம முடிச்சுகளை அவிழ்த்துக் கடவுள் புதிருக்கு விடை தேட வல்லவை ஆகும். அங்கு (Large Hadron collider CLHC)

என்ற பெரும்மோதல் கருவி உள்ளது. மிகச் சிக்கலான வடிவமைப்புக் கொண்ட இந்தக் கருவி மின்னல் வேகத்தில் துகள்களை மோதி வெடிக்கச் செய்து பேரண்டம் பிறந்த புதிருக்கு விடை தேடுகிறது.

(Bing Bang) பெரும் மோதுதல் என்று கூறப்படும் பூமியின் தோற்றத்துக்குக் காரணமான சூழலை உருவாக்கித் துகள்கள் மோதி வெடித்துப் பிளக்கச் செய்து புதிய இயற்பியல் விதிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் துகள் (God Particle) என்று Higgs என்ற துகளுக்குப் பெயரிட்டு அத்துகளுள் கடவுட் சக்தி உண்டாவெனத் தேடிடும் ஆய்வுகள் 2007 முதல் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. கடவுளைக் கண்டுபிடிக்கட்டும்! கண்ணில் காட்டட்டும். மனிதம் உயர மானுடம் செழிக்கப் பாடாற்றுவோம்!

புதிய வெளிச்சத்தில் விலகும் பழமை இருள்!

பெரிய அறிஞர்கள் பகுத்தறிவு வாதியராகவே வாழ்ந்துள்ளனர். அவர்களைப் பழமைப் பிடிப்புள்ளவராக்க மக்களுக்குக் காட்டப் பல முயற்சிகள் நடந்துள்ளன. நடக்கின்றன. அறிவியல் அறிஞர் சர்.சி.வி. இராமன் மனைவிக்குச் சோதிடம் மீது நம்பிக்கை இருந்துள்ளது. இதை, சர்.சி.வி. இராமன் மேல் ஏற்றி சர்.சி.வி இராமன் சோதிடத்தை நம்புபவராகச் சித்திரிக்கப்பட்டார். பெரும்பாலும் பகுத்தறிவாளர்கள் குடும்பத்துப் பெண்கள் பழமைவாதிகளாகவே இருந்துள்ளனர். இதைக் கொண்டு பகுத்தறிவு நீரோட்டம் நின்றுவிட்டது என்று பொய்யுரையும் பரப்புரையும் நடக்கின்றன.

> சர்.சி.வி. இராமன் மூடநம்பிக்கைகளை ஏற்றவர் அல்ல. சடங்குகளை ஏற்றுக் கொண்டவரும் அல்ல. அவர் இறக்கும் நேரத்தில் கடவுளின் பெயரைக் கூறுமாறு அவர் மனைவி கேட்டுக் கொண்டும் நான் மனித ஆற்றலில் நம்பிக்கை உள்ளவன் என்று கடவுள் பெயரைச் கூற மறுத்துள்ளார்.

"I beleive only in the spirit of man" என்றார் சர்.சி.வி. இராமன். இத்தகவல் பேராசிரியர் எசு. இராமசேகர் எழுதிய C.V. Raman : A Pictorial Biography (1988) நூலில் 13 வது பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

பெரியாரும் அவர் பின்பற்றச் சொன்ன பகுத்தறிவுப் பாதையும் எல்லா மக்களுக்கும் பொது. அவர் அளவுகோல்படி சர்.சி.வி. இராமன் பகுத்தறிவு நீரோட்டத்தில் வந்தவர். பெரியார் பஜனை செய்து கொண்டு உள்ளுக்குள் பழமைக்கும் இடம் தருபவர்கள் பகுத்தறிவு அற்றவர்களே!

வானநூல் வேறு! சோதிடம் வேறு. வானியல் அறிவியலைச் சாரும். ஜோதிடம் மூட நம்பிக்கையைச் சாரும். இந்தியாவில் வேதியச் சோதிடம், சீனாவில் சீனச் சோதிடம், பழங்கிரேக்கத்தில் எலனிசுடிக் சோதிடம் என்று சொல்லப்பட்டுள்ளன. சோதிடமும் வானியலும் வேறு வேறு என 636இல் Isidone of Seville சொன்னார். ஆனால் கோபர்நிக்கல் பூமியும் ஒரு கிரகமே என நிறுவிய பிறகே Astrology வேறு Astronomy வேறு என 16ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே பிரித்துப் பார்க்கப்பட்டது.

ஆகப் பகுத்தறிவு நீரோட்டம் வற்றாதது. எந்நாளும் ஊற்றெடுத்துப் பெருகுவது. நேற்று நம்பியது இன்று தவறு என நிறுவுவது என இத்தகு இலக்கணங்கட்கு இடமளிப்பதாகும். வானியல் வேறு சோதிடம் வேறு என்று பிரித்தறியாமலே 16 ஆம் நூற்றாண்டு வரை இருந்தார்கள். பிரித்துப் பார்த்த பின்னரும் இன்றளவும் குழப்பம் நீங்கவில்லை. குட்டையைக் குழப்பி மீனைப் பிடிப்பவர்களைப் போல அறிவைக் குழப்பிச் சோதிட வணிகம் நடக்கிறது. இதனால் தான் பகுத்தறிவுச் சிந்தனை வளரவும் வளர்க்கவும் பெரியார் இயக்கம் கண்டார்.

நவக்கிரகங்கள் என்று கூறி வழிபடுகிறார்கள். புதிதாக ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டதால் தசாகிரகம் என்று பெயரிட மறுக்கிறார்கள். அறிவின் புத்தொளி அவர்களுக்குக் கண்கூசச் செய்கிறது.

29.07.2005: கலிபோர்னியோ பொறியியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் பிரவுன் அவர்களும் அவரது ஆய்வுத் துணைவர்களும் பேரண்டப் பெருவெளியில் புளூட்டோவை விடப் பெரிய கிரகத்தைக் கண்டு பிடித்தார்கள். பூமிக்கும் கதிரவனுக்கும் உள்ள தொலைவை விட 97 மடங்கு கூடுதல் தொலைவில் உள்ளது இக்கிரகமாகும்.

இந்தப் பத்தாவது கிரகத்தை அக்டோபர் 31-2003இல் சாண்டிகோ அருகில் உள்ள டாலோமார் விண்வெளிக் கண்காணிப்பகத்தின் சாமுவெல் ஆசிர் தொலைநோக்காடி படம் பிடித்தது. வேறு இரண்டு தொலைநோக்காடிகளும் இப்புதிய கிரகத்தைப் படம் பிடித்தன.

ஒ.பி. 313 என்று தற்காலிகப் பெயர் 2003இல் இந்தப் பத்தாவது கிரகத்துக்குச் சூட்டப் பெற்றது. இதற்கு உரிய பெயர் சூட்ட வேண்டிய பொறுப்பு அனைத்துலக வானியல் ஒன்றியத்துக்கு உள்ளது. உலகெங்கும் உள்ள வானியல் கழகங்களின் கூட்டமைப்பான இந்த ஒன்றியம் 1919இல் துவங்கப்பட்டது. 63 நாடுகளைச் சார்ந்த 9040

பேராசிரியர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். International Astronomical Union என்ற அனைத்துலக வானியல் ஒன்றியம் அனைத்துலக அறிவியலுக்கான அனைத்துலகக் கவுன்சில் உறுப்பினர் ஆகும்.

இந்த ஒன்றியம் தான் புதிய கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் பெயரிடும் தகுதி கொண்டது ஆகும்.

பத்தாவது கிரகம் மட்டுமல்ல, பகுத்தறிவாளர்கள் Kuiper Beltஇல் கியூபர் வளைவில் இன்றும் கண்டுபிடிக்க வேண்டிய புதிய கிரகங்கள் உள்ளன என்கிறார்கள். ஆக அறிவு நாளும் வளர்வது. புதிய கண்டுபிடிப்புகள் மூலம் மக்களுக்குப் புத்தறிவு புகட்டுவது. ஆனால் இந்தப் பகுத்தறிவு நீரோட்டம் பாய்ந்தும் அறிவுப் பயிர் வளராத களர்நிலங்களாகப் பலர் மனங்கள் உள்ளன. இருட்டுலகில் உழலும் அவர்களுக்குப் பகுத்தறிவுப் பகலவனாகப் பெரியார் ஒளியூட்டினார். வழிகாட்டினார். ஒன்பது கிரகங்கள் எனப் பத்தாவது கிரகம் கண்டுபிடிக்கப் பட்ட பின்னரும் ஒப்பாரி வைப்பது அறிவுடைமைக்கு ஒவ்வாதது! எள்ளி நகைக்க நம்மை ஏமாளிகளாக நாமே காட்டிக் கொள்வதாகும்.

கிரகக் கணக்குத் தப்பு என்பதைப் போல நேரக்கணக்கும் குறைபாடு கொண்டதே.

கிரகோரியன் நாட்காட்டி கி.பி. 1583 முதல் ஏற்கப்பட்டது. இத்தாலி, போலந்து, போர்த்துகல், இசுபெயின் ஆகிய நாடுகள் முதன் முதலில் இந்த ஆண்டுக் கணக்கை ஏற்றன. இதில் 10 நாள்கள் கழித்து ஏற்கப்பட்டன. 1752இல் பிரிட்டன் கிரகோரியன் நாட்காட்டியை ஏற்றது.

ஆக ஒவ்வொரு நாடும் ஒரே கிரகோரியன் நாட்காட்டியைத் திருத்தித் தத்தமக்கு ஏற்ப மாற்றிக் கொண்டுள்ள போது இந்த ஆண்டுக் கணக்கும் அதைத் கூறும் நாட்காட்டியும் கொண்டு கணிக்கப்படும் நேரமும் நேரப்படி குறிக்கப்பெறும் சோதிடமும் எப்படி மாறாத உண்மை என்று கூறிட முடியும்?

கிரகோரியன் ஆண்டு என்பது 365.2425 நாள்கள் கொண்டது. இதில் 27 விநாடி கணக்கில் பிழை உள்ளது. சூரியன் ஆண்டு கணக்கு என்பது கி.மு. 45இல் நடைமுறைக்கு வந்தது. இது 365,25 நாள்கள் கொண்ட ஆண்டாகும். ஆக 11 நிமிடங்கள் குறைவாய்க் கணக்குக் கொண்டது கிரிகோரியன் ஆண்டுக் கணக்கு.

நாம் இன்று பின்பற்றும் 365 நாள் ஆண்டுக் கணக்கிலும் 6 நாள்கள் பிழை வரும். லூனார் ஆண்டுக்கணக்கோ 12 மாதம் முதல் 13 மாதம் வரை மாறக் கூடியது. ஆக ஒவ்வொரு ஆண்டுக் கணக்கிலும் அடிப்படையில் நேரப் பிழை இருக்கும்போது சோதிடன் துல்லியமாகக் கணித்தான் என்று எப்படிக் கூற முடியும்?

பூமி சூரியனைச் சுற்றிவர 365. 2422 நாளாகிறது. ஆக 365 நாள் கணக்கில் 0.2422 நாள் பிழை வரும். ஒவ்வொரு ஆண்டும் 6 மணி நேரப் பிழையுடன் கூடிய ஆண்டுக்கணக்கே இன்று நாம் பின்பற்றும் நேரக் கணக்கு. இந்த நேரக் கணக்கின் படி நிமித்திகன் சோதிடம் கணிப்பது எப்படி சரியான கணக்கு ஆகும்? 2008இல் பிப்ரவரியில் 29 நாளும் 5 வெள்ளிக்கிழமைகளும் வந்தன. வெள்ளியில் துவங்கி வெள்ளியில் முடிகிறது. 1980 க்குப் பிறகு 2008 - இதற்கு அடுத்து 2036இல் Leap year வரும்.

ஆக, தமிழ்மொழியில் பல கணக்கியல் சொற்களை இழந்து விட்டு ஆங்கிலக் கணக்கை நாம் பின்பற்றுகிறோம். ஆயிரம் கோடி என்று குறிப்பிடக் கும்பம் என்ற சொல் தமிழில் உண்டு. கணக்கியல் சொல் காணாமல் போய்விட்டது. 1000 கோடியைக் குறிக்கக் வேண்டிய தமிழ்ச் சொல் கும்ப ராசியை குறித்து நிற்பதா? கொதிக்க வேண்டாமா தமிழருள்ளம்! பத்தாயிரங்கோடியை குறிக்க கணிகம் என்ற சொல்லும் கோடாகோடியைக் குறிக்கத் தாமரை என்ற சொல்லும் பத்து கோடா கோடியை குறிக்கச் சங்கம் என்ற சொல்லும் நூறு கோடா கோடியைக் குறிக்க வாரணம் என்ற சொல்லும் தமிழில் இருந்தன. இந்தக் கால கணிதவியல் மாணவ மாணவிகளைக் கேட்டுப் பாருங்கள். வாரணம் என்றால் நூறு கோடா கோடி என்று சொல்லமாட்டார்கள் வாரணம் ஆயிரம் சினிமாவா என்று கேட்பார்கள்.

கணக்கைக் கவிதை வழியில் சொன்ன கற்றறிந்தோர் செறிந்திருந்த செந்தமிழ்நாடு இன்று சிந்தனைக் குழப்பத்தில் சிக்கிக் கிடக்கிறது.

காக்கை பாடினியார் என்ற பெண்பாற் கவிஞர் கணக்கியலைக் கவிதையாக ஊட்டிய மாமேதை ஆவார்.

விட்டமோர் ஏழு செய்து திகைவர நான்கு சேர்த்து
சட்டென இரட்டடி செய்தால் திகைப்படும் சுற்றுதானே

என்பது காக்கை பாடினியார் செய்யுள்.

ஒரு வட்டத்தின் (Circle) விட்டத்தை (Diameter) ஏழு சம கூறுகளாக்கி அதனுடன் நான்கு சம கூறுகளைச் சேர்த்தால் வருவது பதினொன்று சம கூறுகளாகும். இது இரட்டித்தால் 11×2 = 22 இருபத்திரண்டு சமகூறுகள் கிடைக்கும். இது முழு வட்டத்தின் பரிதியின் அளவாகும்.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல இந்தக் கணக்கியல் செய்தி இங்குப் பதியப்பட்டது. நமது கணக்கியலை நாம் இழந்து விட்டதன் எடுத்துக்காட்டாக இச்செய்தியைச் சிந்தையில் நிறுத்துக! சிந்தித்திடுக!

மாற்றார் கணக்கை ஏற்றோம்! அதில் மாற்றங்கள் செய்யப்பட்டால் ஏற்கும் மனப்பக்குவம் இல்லாதவர்களாக உள்ளோம்.

பகுத்தறிந்து புதிய உண்மைகள் புலப்படுத்தப்பட்டால் அதை ஏற்கும் மனவளத்தைத் தமிழர்களுக்கு ஏற்படுத்தியவர் பெரியார். டெலிபோன் கண்டுபிடித்த பெருமை அலெக்சாண்டர் கிரகாம் பெல்லைச் சாரும் எனச் சொல்லி வந்தோம்! உலகினரும் சொல்லி வந்தார்கள். இன்று புதிய உண்மைகள் புலப்பட்டதும் உலகம் மாற்றிக் கொண்டது. நம் பாட நூல்கள் மாற மறுக்கின்றன. அலெக்சாண்டர் கிரகாம் பெல்லுக்கு முன்பாகவே அந்தோணியோ மியூசி என்ற கார் பழுதுபார்க்குநர் தன் பட்டறையில் இருந்து வீட்டில் பேச டெல்டிரோஃபோனோ என்ற கருவியைக் கண்டுபிடித்தார். இவரே முதலிடம் பெறத்தக்கவர் என்ற கருத்து எழுந்தது. அமெரிக்க நாடாளுமன்றம் விவாதித்து இத்திருத்தத்தை ஏற்று வரலாற்றைத் திருத்தியது. இத்தாலியர் கொண்டாடினர். உலகே ஏற்கும் திருத்தமும் நம் நாட்டவரால் ஏற்கப் படாமல் இருப்பது ஏன்? பகுத்தறிவை நம்மவர்கள் பயன்படுத்தாததால் தான்!

அமெரிக்காவைக் கொலம்பசு கண்டுபிடித்ததாக வரலாறு சொல்வார்கள்! அதற்கும் மாற்றுக் கருத்து முன்மொழியப்பட்டுவிட்டது. International Herald Tribune என்ற அமெரிக்க நாளேடு 1421 ஆம் ஆண்டு சீனம் அமெரிக்காவைக் கண்டுபிடித்த ஆண்டாகப் பதிவு செய்துள்ளது. கேவின் மென்சிசு (Gavin Menseis) எழுதிய நூலில் 1405-1423 ஆணிகளுக்கு மிடையே 317 கப்பல்களில் 28,000 வீரர்களுடன் ழெங் ஈ (Zheng he) உலகைச் சுற்றி வரச் சீனப் பேரரசால் அனுப்பப்பட்டதாகவும் அவரே அமெரிக்காவை முதலில் கண்டறிந்தவர் என்றும் பதிவு உள்ளது. இவர் அமெரிக்காவைக் கண்டுபிடித்த அறுநூறு ஆண்டு விழா சிங்கப்பூரில் கண்காட்சியாக 2005இல் நடத்தப்பெற்றது. ழெங் ஈ நினைவு அருங்காட்சியகம் அமைக்கச் சீன அரசு 600 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

பகுத்தறிவைப் பயன்படுத்தினால் ஒழிய, கூறியதையே கூறிக் கொண்டிருக்கும் குற்றறிவினராகவே நாம் இருந்திடல் முடியும். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல் நடப்போமாகில் சிற்றறிவு பெற்றவர்களாகவே சிறுமையுற வேண்டி இருக்கும்.

வெளிப்பட்ட உண்மையைக் கூட உலகுக்கு வெளிப்படுத்தாத தமிழர்கள் சீனர்களைப் பார்த்தாவது திருந்திடல் வேண்டும். 1971ஆம் ஆண்டு இந்தியாவின் புகழ்பெற்ற ரீடர்சு டைசசுட் வெளியிட்ட உலக வரைபடங்கள் படத்தில் 71 வது பக்கத்தில் சிக்கிமுக்கும் திபேத்துக்கும் இடையே இருந்த கணவாய்க்குச் சோழர் கணவாய் என்ற

பெயரிருந்தது. கைபர் - போலன் கணவாய் பற்றியே பேசினோமே ஒழிய, சோழன் கணவாய் பற்றி உலகறியச் செய்தோமா?

1819 சனவரி 29இல் சர் இசுடா ஃபோர்டு கிரிப்சு வணிகத்தலம் அமைக்கத் தீவு தீவாகத் தேடிய பொழுது நாராயணப்பிள்ளை என்ற தமிழர் தெரிவு செய்த இடமே இன்றைய சிங்கப்பூராகும். சிங்கப்பூர் தி.மு. கழகப் பொதுச் செயலாளராக இருந்த பெ. த. இராசன் எழுதிய சிங்கப்பூரின் வரலாற்றில் தமிழர்கள் என்ற நூல் இந்த உண்மையைச் சொல்கிறது.

பகுத்தறிவை அன்றாடம் பயன்படுத்தத் தவறுவதால் புதிய உண்மைகளைப் புரிந்துப் கொள்ளத் தவறியவர்களாகவே உள்ளோம்!

புரட்சிகரப் புதுயுகத்தின் விடிவெள்ளி

> சகல சவுகரியங்களும் உள்ள இந்தப் பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபட வேண்டும்? ஏன் சாக வேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்த சிக்கலான பிரச்சினைகளாக இருந்தன. இன்று தெளிவாக்கப்பட்டும் பரிகாரம் தேடப்பட்டும் வருகின்ற காலம் நடக்கிறது. இந்தப் போக்கு சீக்கிரத்தில் மக்களின் பொது வாழ்க்கையிலே பெரியதொரு புரட்சியை உண்டாக்கித்தான் தீரும். அப்போது பணம் காசு என்ற உலோக நாணயமே இருக்காது. அரசு ஆட்சி இருக்காது. கடினமான உழைப்பு இருக்காது. இழிவான வேலை என்பது இருக்காது. அடிமைத்தன்மை இருக்காது. ஒருவரை யொருவர் நம்பிக்கொண்டு வாழ வேண்டிய அவசியம் இருக்காது. பெண்களுக்குக் காவல், கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது

என்று எதிர்கால உலகைப் பெரியார் உருவாக்க உழைத்தார். அவரின் புரட்சிகரச் சிந்தனைகளின் தாக்கம் இன்று எந்நிலையில் உள்ளது? சற்றே அலசிப் பார்ப்போம்!

அடிமைத்தன்மை இருக்காது என்றார் பெரியார். அடிமைத்தளைகள் இன்னமும் அறுபடவில்லை. அமெரிக்க அதிபராகக் கறுப்பரினமும் வெள்ளை இனமும் கலந்த கலவையான பாரக் ஒபாமா இன்று ஆள்கிறார். அவரின் ஆப்ரிக்கப் பயணமும்

அவரின் தந்தையின் நாடான கயானாவில் அவர் பேசிய பேச்சுகளும் உலக அளவில் ஊடகங்களில் பதிவாகி உள்ளன. அந்தப் பயணத்தின் போது 17 ஆம் நூற்றாண்டில் அடிமை வணிகர்கள் பயன்படுத்திய கடற்கரை ஓரக் கோட்டையான கேப் கோசுட் காசல் (Cape coast castle) கோடடைக்குப் பாரக் ஒபாமா தன் மனைவி மக்களுடன் சென்றார். அங்கு அடைபட்டிருந்த அடிமைகள் திரும்பி வர முடியாத கதவு ஒன்றின் வழியாக அமெரிக்க நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கடந்த காலம் அவர் மனக்கண்ணில் விரிந்தது. அவர் மனைவி மைக்கேல் ஆப்ரிக்காவிலிருந்து அடிமைகளாக அமெரிக்காவுக்கு விரட்டியடிக்கப்பட்டவர்களின் வழித் தோன்றல் ஆவார். 11 சூலை 2009இல் அந்த அடிமைகள் இருந்த கோட்டையில் கனத்த இதயமுடன் அமெரிக்க அதிபர் குடும்பம் கடந்த காலத்தை நினைத்துப் பார்த்ததாக ஏடுகள் எழுதின.

> இந்த இடம் நெஞ்சடைக்கும் சோகத்தையும் இங்கிருந்து போனவர்கள் ஆப்ரிக்க - அமெரிக்க இணைப்புக்கு வழிகோலியதால் மறுபுறமும் மகிழ்வையும் ஒரே சமயத்தில் ஏற்படுத்துகிறது

என்ற பாரக் ஒபாமா கடந்த மாதம் செருமானி நாட்டின் புக்சன் வால்டு நகரில் நாஜிக்கள் நடத்திய சித்ரவதை முகாம்களுக்குச் சென்றிருந்தார். யூதர்கள் அடிமைகளாய்ப் பட்ட ஆறாத்துயரம் அவர் மனதைத் தைத்தது. இரு அடிமைக் கூடங்களையும் பார்வையிட்ட பாரக் ஒபாமா

> இதுபோன்ற கொடுமைகள் இன்னமும் இருக்கின்றன. இவற்றுக்கு எதிராக நாம் போராடியாக வேண்டும். இந்த உலகில் இன்னமும் அடிமைத்தளை உள்ளது. இந்தக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகின் ஒவ்வொரு மூலையிலும் அடிமைத்தளையில் கட்டுண்ட மக்கள் இருக்கிறார்கள்

என்று வேதனைப் பெருமூச்சை வெளிப்படுத்தினார்.

பாரக் ஒபாமாவின் மனதில் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் இரும்பு முள்வேலிக்குள் அடைபட்டுக் கிடக்கும் தமிழர்களின் அவலம் நிழலாடி இருக்க வேண்டும். சேரிகள் தோறும் ஊருக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ள இந்தியர்கள் நினைவும் அடிமைகள் என்னும் போது பாரக் ஒபாமாவுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஆப்ரிக்க அடிமைகள் அடிமைத்தளையில் இருந்து விடுபட்டுச் சுதந்திர மனிதர்களாகச் சுவாசித்த பொழுது அடிமைத்தளையில் சிக்க வைக்கப் பட்டவர்கள் தமிழர்கள். நீக்ரோக்கள் அடிமைத்தளையில் இருந்து விடுபட்ட போது அவர்கள் செய்து வந்த தொழிலைச் செய்ய

வெள்ளை இனத்தவர்க்கு ஆட்கள் தேவைப்பட்டனர். கரீபியன் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களில் கரும்புத் தோட்டங்களில் கூலித் தொழிலாளியாகப் பணிபுரிந்த நீக்கிரோக்கள் விடுவிக்கப்பட்டனர். அந்த வெற்றிடத்தை நிரப்ப இந்தியாவின் சோட்டா நாக்பூர் பகுதியில் இருந்து கூலிகளாய் நம் மக்களைப் பிடித்திழுத்துச் சென்றனர்.

பிப்ரவரி 1838இல் முதல் அடிமைக்கப்பல் இந்தியத் துறைமுகமான கல்கத்தாவில் இருந்து புறப்பட்டது. மலைவாழ் பழங்குடிமக்கள் 420 பேருடன் அந்தக் கப்பல் கயானாவைச் சென்றடைந்தது. அக்கப்பலில் 50 பெண்களும் 12 சிறுவர்களுமிருந்தனர். ஐந்து வருட ஒப்பந்தத்தில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் வேலைப்பளு தாங்காமல் உயிரிழந்தனர். ஒப்பந்தத்தை மீறியதாகப் பலர் தூக்கிலிடப்பட்டனர். நடுவழியில் கப்பலிலேயே உயிரிழந்தவர்களும் உண்டு. இந்தக் கப்பலின் பயணத்தை Jahaji Bhai என்ற இந்தி மொழித் தலைப்பிட்டு குறும்படமாக சுரேஷ்குமார் உருவாக்கினார். "கப்பல் சகோதரர்கள்" என்று இதனை தமிழில் சொல்லலாம். 50 நிமிடம் ஓடக்கூடிய இந்தப் படம் கரீபியன் கடல் நாடுகளிலும் இந்தியாவிலும் 2003இல் திரையிடப்பட்டது. "Once more recomoved" என்ற குறும்படம் 19ஆம் நூற்றாண்டில் பீகாரில் இருந்தும் உத்திரப்பிரதேசத்தில் இருந்தும் கரீபியன் பகுதிகளுக்கு குடியேறிய குடும்பங்கள் பற்றியது ஆகும். அமெரிக்க HBO தொலைக்காட்சிக்காக உருவாக்கப்பட்ட படம். Song of Malabaries என்ற குறும்படம். நெதர்லாந்து நாட்டின் தேசியத் தொலைக்காட்சியில் சூன் 2004இல் காட்டப்பட்டது. இந்தக் குறும்படங்கள் வாயிலாக அடிமை இந்தியரின் அவல வாழ்வைச் சுரேஷ் குமார் படம் பிடித்துக் காட்டினார். அடிமைகளைப் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து பிடித்து இழுத்து வருவதை மனித நேயமுள்ள பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். பிரிட்டிஷ் அரசும் பணிந்தது.

உடனே அடிமை வியாபாரிகளின் கண் பிரெஞ்சியர் வசமிருந்த புதுச்சேரி மீது படிந்தது. 1854 க்கும் 1920 க்கும் மிடையே புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம், சந்திரநாகூரிலிருந்து 50000 அடிமைத் தொழிலாளிகள் கடிலோப்பு, மர்த்தனிக்கு உள்ளிட்ட தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகளான நீக்கிரோக்கள் விடுதலை பெற்ற காலத்தில் அடிமைகளாய் ஆக்கப்பட்டவர்கள் இந்தியர்கள் - தமிழர்கள் இவர்களுக்காகக் கண்ணீர் மல்கப் பாடியவர் ஒரேயொரு கவிஞர். ஆம்! பிஜித்தீவின் கரும்புத் தோட்டங்களில் சாறாகப் பிழிந்து சக்கையாகத் துப்பப்பட்ட தமிழனுக்காகப் பாடியவர் மகாகவி பாரதியார் ஒருவரே!

Slave என்பது அடிமைகளைக் குறிக்கும் ஆங்கிலச் சொல். இச்சொல் இலத்தீன் மூலத்திலிருந்து பிரெஞ்சு வழியாக ஆங்கிலத்திற்கு வந்தடைந்த சொல். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று தமிழிலக்கணம் தொல்காப்பியம் கூறும். உரோமப் பேரரசில் மத்திய கிழக்கு அய்ரோப்பாவிலிருந்த ஸ்லாவ் Slavic இன மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டதால், அதிலிருந்து Slave என்ற சொல் உருவாகியது.

அடிமை எதிர்ப்பு சர்வதேசியம் Anti-Slavery International என்ற தொண்டு நிறுவனம் 1839 முதல் பிரிட்டனில் இயங்கி வருகிறது.

சிறார் தொழிலாளர் முறை, கட்டாயத் திருமணம், பாலியல் வன்முறை, போன்ற நவீன அடிமைத் தளைகளுள் பாரம்பரிய அடிமைத்தனத்துடன் கூடவே 21 ஆம் நூற்றாண்டிலும் நிலவுவதாக இந்தப் பேரமைப்பு குற்றஞ் சாட்டுகிறது. கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஆப்ரிக்கா, பிரேசில் அருகில் உள்ள சில நாடுகளில் இன்னமும் அடிமைத்தனம் நிலவுவதாக இந்த அமைப்பு சொல்கிறது.

கடன்பட்டுக் கொத்தடிமை ஆவதை நவீனயுகத்தின் அடிமைத்தனம் என அய்க்கிய நாடுகள் மன்றம் விளக்கமளிக்கிறது. அனைத்துலகச் சட்டம் அடிமைத்தனத்தைக் கடுங்குற்றமாகக் கருதுகிறது. இருந்தும் அடிமைத்தனம் அகலவில்லை. அடிமைத்தனத்தை அகற்றப் பெரியார் கொண்ட பேரவா நிறைவேறவில்லை.

பெரியார் "பணம் - காசு" இருக்காது என்று எதிர்காலத்தை உருவகிப்பார். இன்று உலகின் தலை சிறந்த நாணயமாக உள்ள "டாலர்" தடுமாறிக் கொண்டுள்ளது. இதை Dollars Dilemma என்று அழகுற வருணித்துப் பொருளியல் நிபுணர் பேராசிரியர் சம்மந்தன் எழுதி இருப்பார். டாலர் உலக நாணய முறையாக இருப்பதா? என்று எழுந்த கலகத்தின் விளைவே அய்ரோப்பா ஒன்று கூடி உயர்த்திப் பிடிக்கும் "யூரோ" நாணயமாகும்.

விரிவடைந்து வரும் உலகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க இருப்பில் வைக்கப்பெறும் தங்கத்துக்கும் டாலர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டதால் 1969 முதல் சர்வதேச நாணய நிதியம் புதிய அனைத்துலக இருப்பினை ஏற்படுத்தியது. Special Drawing Rights சுருக்கமாக SDR எனப்படும் பிரிட்டன் உட்சு திட்டம் இதை அறிமுகப்படுத்தியது. இருப்பினும் தோல்வியில் முடிவுற்று நாடுகள் ஏற்ற இறக்கமான நாணய முறையை ஏற்றன.

ஒவ்வொரு நாளும் டாலருக்கிணையாக ஒரு SDR இன் மதிப்பை அன்றாடம் சர்வதேச நாணய நிதியம் நிர்ணயம் செய்து வருகிறது.

ஆப்ரிக்க வளர்ச்சி வங்கி SDR ஐப் போல units of amount என்ற நாணய மாற்றை உருவாக்கியுள்ளது. சீனா 2009 மார்ச் முதல் SDR உலகப் பொது நாணயமாக ஏற்க வலியுறுத்தி வருகிறது. சூதாட்டப் பொருளாதாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க உலகளாவிய ஒரே நாணய முறை தேவை என 26-10-1996 தேர்தல் ஆணையத்தில் பதிந்த கொள்கைப் பிரகடனத்தில் கூறியுள்ள கட்சி திராவிடப் பேரவையாகும்.

ஒருலக நாணய முறை நோக்கி நகரும் உலகம் பெரியார் கனவை நிறைவேற்ற முதல் அடியை எடுத்து வைத்துள்ளது.

நாடுகள் என்ற கட்டமைப்பு தளர்ந்து மறைந்து விடும் என்றார் பெரியார். The End of Nation State என்ற நூலை எழுதினார் Kenichi Ohmae.

"1923இல் அய்ரோப்பாவில் 18,000 கி.மீ. எல்லைப் பரப்பில் 23 நாடுகள் இருந்தன. 2004இல் சுமார் 40,000 கி.மீ எல்லைப் பரப்புடன் 50 நாடுகளாக அவை விரிந்தன. பிரிந்தன. பெருகின. போரால் புதிய நாடுகள் பிறந்ததும் உண்டு. பேச்சு வார்த்தையால் பிரிந்ததும் உண்டு. இன்று உலகில் 194 நாடுகள் உள்ளன. உலக மயமாக்கல் நாடுகளின் எல்லைகளை அழித்து விடும். உலக மயமாக்கல் "நாடு" என்பதனைக் காலத்திற் கொவ்வாததாக ஆக்குகிறது. நாட்டின் இறையாண்மைக்கு உலகமயமாக்கல் அச்சுறுத்தலாக அமைகிறது. நாடுகள் சிதறி நகர அரசுகளும் நகர அரசுகளுடைய பெயரளவுக்கான கூட்டமைப்பாகவுமே நாடுகள் எதிர்காலத்தில் மாறும் என்கிறார் இந்நூலாசிரியர்.

அய்ரோப்பாவில் 12 சிறிய நாடுகள் உள்ளன. அதில் 5 தீவுகள் அல்லது தீவுக்கூட்டமாகும். மத்தியதரைக் கடலின் வடபகுதியில் உள்ள சின்னஞ்சிறு நகரான மொனாக்கோ தனி நாடாகும். 32,000 பேர் வாழும் மொனாக்கோவின் குடிமக்கள் 8000 பேர்களே! 500 ஏக்கர் பரப்பளவில் ஒரு நாடு! பிரான்சு அதன் அண்டை நாடு. மொனாக்கோவின் அயலுறவு! பாதுகாப்பு! அஞ்சல்தொடர்புகளைப் பிரான்சு பார்த்துக் கொள்கிறது.

31,000 பேர் வாழும் லீச்டென்ஸ்டீன், பாதிசுயாட்சி பெற்றுள்ள 64,000 பேர் வாழும் அண்டோரா, 24,000 பேர் குடிமக்களாகக் கொண்ட சான் மெரினோ, பிரிட்டிஷ் பகுதிகளான மேன்தீவுகள் (70,000) சானல் தீவுகள் (1,50,000) பியார்சு தீவுகள் (45,000) மற்றும் கிப்ரால்டர் (29000) என நாடுகள் சிதறிச் சின்னஞ்சிறு நாடுகளாகத் தேய்வது நாடுகளற்ற உலகம் வருமெனப் பெரியார் சொன்னதற்கு முன்னோட்டமா?

109 ஏக்கரில் 700 குடிமக்களுடன் வாடிகன் நகரமும் நாடாக உலக மன்றில் ஏற்கப்பட்டுள்ளது.

கரீபியன் பகுதியில் 14 நாடுகளுடன் 15 பிரதேசங்களும் உள்ளன. 6400 பேர் வாழும் மோண்ட் செரட். 1,300,000 வாழும் டிரினிடாடு அண்டு டொபேகோ, 2,36,000 பேருடன் பெலிசு. 4,31,000 மக்களுடன் சூரி நாம், 1.68000 மக்கட் தொகையுடன் பிரெஞ்சு கயானா. 7,05,000 பேருடன் கயானா எல்லாம் நாடுகளே!

பசிபிக் கடல் பகுதியில் 24 தீவுகள் நாடுகளாக உள்ளன. 7,73,000 மக்கட் தொகையுடன் பிஜித்தீவுகள் மட்டுமல்ல 1700 மக்களுடன் டொக்கலோ தீவும் தனி நாடாக உள்ளது.

இப்படி விரிக்கலாம். நகரங்கள் நாடுகளாகும். நாடுகள் நகரங்களாகத் தேயும்! பன்னாட்டு நிறுவனப் படையெடுப்பால், உலக மயமாக்கலால் நிகழும் இவை நாடுகளற்ற நிலைக்கு முன்னோட்டமா? பெரியாரின் கண்ணோட்டம் பெறப்போகும் நிறைவேற்றமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

> மனிதச் சமூகத்தில் புரட்சி என்பது மிகச் சாதாரணமாய் இருந்து காரியத்தில் நடைபெற்றுத்தான் வருகின்றது. மனிதனுக்கு முற்போக்கு அறிவும் அக்கறையும் ஏற்பட ஏற்படப் புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத் தோன்ற மாறுதல்கள் என்ற புரட்சி உண்டாகிக் கொண்டு தான் இருக்கும்

என்று புரட்சிகளை வரவேற்றவர் தந்தை பெரியார்.

புரட்சி என்பதற்கு ஆங்கிலச் சொல் Revolution ஆகும். இலத்தீன் மொழியில் Revolutio என்றால் திருப்பம் என்று பொருள் படும். அதிகாரத்தைத் திருப்பிப் போடுதல், அதிரடி மாற்றங்களை ஏற்படுத்துதல் புரட்சி என்றிடுவர். அரசியல் புரட்சியும் சமூக மாற்றத்துக்கான புரட்சியும் மனிதகுல வரலாற்றில் திருப்பு முனைகளாகத் திகழ்கின்றன.

புரட்சிகளை நான்கு வகையினதாக நான்கு எடுத்துக்காட்டுகளைக் கூறி முன்பெல்லாம் வகைப்படுத்தினர்.

1868இல் இசுபெயின் நாட்டில் வில்லியம் ஆப் ஆரஞ்சு முன் நின்று நடத்திய புரட்சி புகழ்மிகு புரட்சி (Glorious Revolution) என்ற அடைமொழியுடன் அழைக்கப்படும். இங்கிலாந்து அரசனான ஜேம்சு II இடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கினர். படையெடுத்து வந்த படைக்குத் தலைவனாக விளங்கிய டச்சுக்காரரான வில்லியம் ஆப் ஆரஞ்சு பாராளுமன்ற யூனியனுக்காகப் போரிட வந்தார். ரத்தஞ் சிந்தாப் புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி வில்லியம் III என்ற பெயருடன் இங்கிலாந்து அரசருமானார்.

பிரெஞ்சுப் புரட்சி (1789 - 1799), உருஷ்யப் புரட்சி (1917), சீனப்புரட்சி (1927 - 1949) என நான்கு புரட்சிகளை முன்னிலைப்படுத்திய வரலாற்றறிஞருண்டு. அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, உருஷ்யப் புரட்சியுடன் பிரிட்டனின் உள்நாட்டுப் போரை முன்னிலைப் படுத்திக் கிரேன் பிரிட்டன் என்ற ஆர்வார்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் நூலெழுதினார்.

ஆட்சிகளை மாற்றிய அரசியல் புரட்சிகளை நெடிய பட்டியலிட்டால் தான் கூற முடியும். விரித்தால் பெருகும். ஆயின் அமைதி வழியில் அறப்போராட்டங்கள் மூலம் மக்களின் அறிவெழுச்சியை ஏற்படுத்திய பெரியாரின் புரட்சியை உலக வரலாறும் கலைக் களஞ்சியங்களும் உரிய முறையில் பதிவு செய்திட வில்லை.

மகாத்மா காந்தி முதல் மார்டின் லூதர் கிங் வரை அறவழிப் புரட்சியாளரை அடையாளம் காட்டும் கலைக் களஞ்சியங்கள் பெரியார் முதல் அம்பேத்கார் வரை உலகப் புரட்சியாளர் வரிசையில் இடமளித்து மேற்கோள் காட்ட முன் வரவில்லை. இது நம் குற்றம். நம் சோம்பலின் விளைவு. ஆங்கில நூல்களெழுதி, அகிலத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய நூல்களெழுதிப் பெரியாரின் பங்களிப்பை - அம்பேத்காரின் அறிவாற்றலை நாம் உரிய முறையில் எடுத்துச் செல்ல வில்லை.

மதங்கடந்து மலரும் புத்துலகம்

மதங்கள் பகுத்தறிவு இயக்கங்களால் அலசி ஆராய்ந்து தோலுரித்துக் காட்டப்பட்டதன் விளைவாக கடந்த நூற்றாண்டில் தடுமாறி நின்றன. அறிவியலுக்குப் பொருத்தமில்லாக் கருத்துக்களைக் களைந்து அறிவியல் அடிப்படையில் புது மெருகேற்றிக் கொண்டு மக்கள் முன் தலை காட்டின.

அப்படி உருவான புதிய மதம் (Church of Scientology) அறிவியல் மதம் L.Ron Hubbard அவர்களால் நிறுவப் பெற்றது. காணொளி அலைவரிசை உண்டு! Scientology: A New slant on life என்ற நூலும் உண்டு! Dianetics and Scientology தொடர்பான நூல்களை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். இது என்ன? இது பற்றிச் சிறிது பார்ப்போம்.

மனம் பற்றி, ஆத்மா பற்றி, வாழ்வு பற்றி மிகத்தீவிரமாக அலசி ஆய்ந்து தொகுக்கப்பட்ட தரவுகள் ஐம்பதாண்டுக் காலம் எல்.ரான் அப்பார்டு அவர்கள் உழைப்பின் வெளிப்பாடாக வந்தவை. நூற்றுக்கணக்கான நூல்களும் சற்றொப்ப மூவாயிரம் பேருரைத் தொகுப்புகளும் இப்புதிய மதத்தை விளக்க எழுந்தவையாகும்.

Dianetics என்னும் புதிய துறை மனங்களின் இரகசியங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்த உருவானதாகும். Dianetics என்ற தலைப்பில் கையெழுத்துப் படியாக எல். ரான் அப்பர்டு அவர்களால் அவரின் நண்பர்களுக்கு வழங்கப்பட்ட ஆய்வேடு பலரால் படி

எடுக்கப்பெற்றுக் காட்டுத்தீயெனப் பரவியது. இதனால் உலகின் பல பாகங்களில் இருந்தும் கேள்விக் கணைகள் கிளம்பின. அந்த அய்யங்களுக்கு விடையளிக்க முழுமையான நூலொன்று உருவாக வேண்டிய காலத்தின் கட்டாயம் கனிந்தது. Dianetics: Modern Science of Mental Health என்ற நூல் எழுந்தது.

கடந்த ஐம்பந்தாண்டுகளுக்கும் மேலான உலகில் மிகுந்த எண்ணிக்கையில் விற்கப்பட்ட நூல்கள் வரிசையில் இந்நூல் இடம் பெற்றுள்ளது. 20 மில்லியன் படிகள் அச்சாகி விற்றுத்தீர்ந்தன. உலகின் பல இடங்களில் இக்கருத்தோட்டம் பரவியுள்ளது. மனித மனம் பற்றி மிகப் பேரளவில் உலகினர் தெரிந்து கொள்ளப் பயன்படும் நூலாக இது மிளிர்கிறது.

மனிதனை வேண்டத்தகாத அச்சங்களுக்கும் இனம்புரியாப் பயங்களுக்கும் ஆட்படுத்தி அடிமையாக்கிவிடும். மனங்களின் செயல்பாட்டையும் உட்கூறுகளையும் முழுமையாகப் பகுத்தாராயும் அறிவியலாக இக்கோட்பாடு கூறப்பட்டாலும் பழமை அதனை விடுவிக்கவேயில்லை.

Xenu ழீனு என்றொரு கடவுள் பேரண்டத்தில் அரசோச்சியது. 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உலகின் கோடிக்கணக்கான மக்களைக் கொன்றொழிக்க எரிமலைகளையும் அணு குண்டுகளையும் வெடிக்கச் செய்ததாம். மக்கள் அழிந்தாலும் அவர்தம் ஆத்மாக்கள் அழியவில்லையாம். ழீனு இந்த ஆத்மாக்களைக் கைப்பற்றி அவற்றை மூளைச் சலவை செய்து வருகின்றதாம். இவை நம் மூளையில் குடியேறி மூடநம்பிக்கைளை வளர்க்கின்றனவாம்!

இந்த ஆவிகளை Thetans எனப் பெயரிட்டனர். இத்தகு ஆவிகள் மனித மூளைக்குள் புகுந்து கொண்டால் அவை உடல் பெறுகிறதாம். வசிக்க, நம்மை நசுக்க! அதை Body thetans என அழைத்தனர். இந்த வலிய ஆவிகள் நம் மூளைக்குள் உட்கார்ந்து கொண்டு மூடநம்பிக்கையின் பால் நம்மை இட்டுச் செல்கின்றனவாம். இதைப் போக்க, மூளைச் சலவை செய்ய, நச்சு எண்ணங்கள் உருவாக்கும் ஆவிகளை விரட்ட Scientology மதத்தவர்க்கு ஏராளமான பொருள் செலவிட்டு உலகில் ஏமாந்தவர்கள் ஏராளம்.

இந்த ஏமாற்று வித்தைகளை மக்கள் புரிந்து கொள்ள எளிய மொழியில் எடுத்தியம்பியவர் தந்தை பெரியார்.

> ‘உலகக் கல்வி வேறு, பகுத்தறிவு வேறு, பட்டம் வேறு,
> பெரிய டாக்டராய் இருப்பான். ஆனால் அவனும்

> மூத்திரமும் சாணியும் சாப்பிட்டால் ஒருவன் மோட்சத்திற்குப் போகலாம் என நினைப்பான். பெரிய வானசாத்திர நிபுணனாய் இருப்பான். அவனும் தன் மாஜி தந்தைக்கு அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு அனுப்புவான். ஒருவன் பெரிய உடற்கூறு சாத்திர நிபுணனாய் இருப்பான். அவனும் தன் மனைவியையும் மகனையும் வீட்டுக்குத் தூரம் என்று வீதித் திண்ணை அறையில் தள்ளி மூடி வைத்து விட்டு உள்ளே தாழ்ப்பாள் போட்டுத் தூங்குவான்

ஆகையால் மனிதனுக்குப் பகுத்தறிவையும் உலகக் கல்வியையும் அறியப் பள்ளிக்கூடமும் பட்டமும் போதுமானதாக ஆகிடாது என்ற பெரியார் மொழி மூளைக்குள் உட்கார்ந்து கொண்டு மூட நம்பிக்கைகளை உருவாக்கும் ஆவிகளை விரட்டியடிக்கப் பணம் தாரீர் எனப் புதிய வைத்தியம் செய்யப் புறப்பட்ட அறிவியல் மதம் இன்று இருப்பதில் இருந்தே எத்துணை பொருத்தமாக முன்கூட்டியே பெரியார் சொன்னார் என்பதைத் தெளிவாக்கும்.

அறிவியலுக்கென மதம் அமைக்கப் புறப்பட்டவர்கள் ழீனு என்னும் கடவுள் பற்றிய கட்டுக்கதையை அடித்தளமாகக் கொண்டே அந்த மதத்தை அமைத்தார்கள். அது இரகசியமாகவும் இருக்க வேண்டும் என்று பாடுபட்டார்கள். Scientology மத போதனையில் OTIII என்ற கல்விநிலை எட்டப் பல அடிப்படைப் பாடங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறுதல் வேண்டும். இந்த OTIII தகுதி பெற 3,50,000 (மூன்று இலட்சத்து அய்ம்பதினாயிரம்) டாலர் கட்டணஞ் செலுத்திப் படிக்க வேண்டுமாம். அந்தப் பாடத்தை ஏட்டுச்சுவடியாக மத நிறுவனர் உலவ விட்டார். பாடம் நடத்தும் ஒளி நாடாவும் வெளியே கசிந்து விட்டது. இதனால் தான் ழீனு எனும் கடவுள் பற்றிய இரகசியம் உலகறிய நேர்ந்தது. இதை யாராவது தெரிந்து கொண்டால் அவர்களுக்கு அழிவு என அச்சுறுத்தி வைத்திருந்தார். ஆக அச்சம் ஊட்டியே அறிவியல் பெயரில் உருவான மதமும் தன் வியாபாரத்தை நடத்தி வருவதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பெரியார் அல்ல ஒவ்வொருவரும் பெரியாராக, பகுத்தறிவாளராக மாறினால் ஒழிய மனித குல அறிவுக்கு விடுதலை ஏற்படப் போவதில்லை.

1. புதிய ஏற்பாடு யாரால் எழுதப்பட்டது என்று மக்களிடையே வாக்கெடுப்பு நடக்கும் காலத்தில் நாம் வாழ்கிறோம். ஏசுவின் தூதர்கள் தாங்கள் கண்ணால் கண்ட காட்சிகளை எழுதினார்களா?

2. பலமுறை திரும்பத் திரும்பக் கூறப்பட்ட கதைகளையும் கேள்விப்பட்ட செய்திகளையும் ஏசுவின் திருத்தூதர்களின் நண்பர்களோ அல்லது சீடர்களோ தொகுத்து எழுதினார்களா?
3. வாய்மொழி வழியாகப் பல தலைமுறைகள் கேள்விப்பட்ட கண்ணால் தாங்கள் காணாத கதைகளைக் கிறித்துவர்கள் தொகுத்தனரா?
4. இது பற்றி எனக்குத் தெரியாது
5. இதைப் பற்றிக் கவலை எனக்கில்லை

ஆக 5 கேள்விகள் தந்து மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

24.7.2009 காலை 9:12 மணியளவில் இந்தக் கருத்துக்கணிப்பில் 1224 பேர் பங்கேற்றனர். கண்ணால் கண்டதை ஏசுவின் சீடர்கள் பதிவு செய்ததாக 29% விழுக்காடு மக்கள் கருத்துத் தெரிவித்தனர். பன்முறை கேட்ட கதைகளை ஏசுவின் சீடர்களுடைய நண்பர்கள் பதிவு செய்ததாக 9% விழுக்காடு வாக்குகள் விழுந்தன. பாரம்பரிய செவிவழிச் செய்திகளைக் கிறித்தவர்கள் புதிய ஏற்பாடாகத் தொகுத்ததாக 47% விழுக்காடு பெரும் பான்மையோர் கருத்தாக உள்ளது. தெரியாது என்று 7% விழுக்காடும் கவலையில்லை என 5 விழுக்காடும் வாக்களித்துள்ளனர்.

எல்லாவற்றையும் பகுத்தாராய்வது இன்று மத நூல்களோடு முடிவுற்றிட வில்லை. உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக மேதை சேக்சுபியரின் படைப்புகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

1. Timon of Athens சேக்சுபியரால் முழுமையாக அவராலேயே எழுதப்பட்டதா? அதில் பாதியளவு பங்கேற்று எழுதியவர் தாமசு மிடில்டன்னா? இந்த அய்யம் இலக்கிய விவாதமாக நடைபெற்று வருகிறது.
2. சேகச்சுபியரும் ழான் பிளெட்சரும் All is true (Henry VIII மற்றும் The Two Noble Kinsmen) என்ற சேக்சுபியரின் கடைசி நாடகம் எழுதுவதிலும் பயனுள்ள கூட்டாளிகளாகச் செயல்பட்டனர் என்பது பரவலாக ஏற்கப்பட்டுள்ள கருத்தாகும்.

ஆசுதிரேலியாவின் உள்ள நியூகாசர் பல்கலைக்கழக இலக்கியம் மற்றும் மொழியியல் கணினியியல் துறைப் பேராசிரியர் Hugh Gaig, சேக்சுபியர் படைப்புகள் பற்றிய புதிர்களுக்கு விடைதேடுகிறார் 2004

முதல்! அவருக்கு முன்பு அதே பல்கலைக்கழகத்தில் 1980இல் பணிபுரிந்த John Burrows படைப்புகளில் அடிக்கடி பயன்படும் "the" and "but" முதலான சொற்கள் எங்கெங்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதைக் கணக்கிட்டார். ஒவ்வொரு எழுத்தாளருக்குமுரிய நடையழகு கொண்டு இன்னார் இயற்றிய படைப்பு என இனங்காட்டல் ழான் பர்ரோவின் உத்தியாகும். இன்று இலக்கியப் படைப்புகளை, எழுத்தாளரின் தனி முத்திரைகளை, நடையழகை, மொழிப் பயன்பாட்டைக் கணினி மூலம் அலசி ஆராய்வது என்ற தனித்துறையாகவே வளர்ந்து விட்டது.

கணினி ஆய்வுக்கு மட்டும் கருவியாகப் பயன்பட வில்லை. ஏமாற்று வேலைகளுக்கும் ஏவலாளாகப் பயன்படுகிறது. மாணவர்கள் தரும் முனைவர் பட்ட ஆய்வேடுகள் பற்றிய விவாதம் இன்று மேலை நாடுகளில் எழுந்துள்ளது. வாசிங்டன் பல்கலைக்கழகப் பேராசிரியை சூலிரயான் தன்னுடைய மாணவி ஒருத்தியின் ஆய்வேட்டைக் கண்டு வியப்புற்றார். அய்யமும் ஏற்பட்டது. இவ்வளவு கருத்துச் செறிவாக மாணவி எங்கிருந்து எழுதியிருக்க முடியும் என வியப்புடன் கணினி வழியே அந்தத் தலைப்பு தொடர்புடைய செய்திகளைத் தேடினார். ஐந்து நிமிடங்களில் மாணவியின் திருட்டுத்தனத்தை அந்தப் பேராசிரியை கண்டு பிடித்தார். காம்பிரிட்சு பல்கலைக்கழக ஆய்வறிஞர் பாஸ் ஆண்டர்சன் கட்டுரை இணைய இதழ் ஒன்றில் வெளி வந்திருந்தது. அதை அப்படியே சுருட்டிக் கொண்டு மாணவி ஆய்வேட்டை அளித்துள்ளதைப் பேராசிரியர் கண்டுபிடித்தார்.

மும்பைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷரித் பௌமிக்கிடம் தோட்டத் தொழிலாளர் பற்றிய எம்ஃபில் ஆய்வேட்டை அவரது மாணவன் அளித்தான்! பேராசிரியர் எழுதியதையே திருடி மாணவன் ஆய்வேடாக அளித்துள்ளது கண்டு அவர் அதிர்ச்சியுற்றார்.

இதை எவ்வாறு கண்டுபிடிப்பது? ஏமாற்றுவது எப்படி என மாணவர்களுக்குச் சொல்லித்தர www.cheaters.com என்ற இணையத்தளம் இருக்கிறது. ஏமாற்றும் மாணவர்களின் ஏமாற்று வேலையைக் கண்டறிய www.plagarism.org என்ற இணையத் தளமுள்ளது. மென்பொருள் கொண்டு பகுத்தறியும் காலத்தில் மூளையால் மட்டுமே தமிழிலக்கியங்களை பகுத்தறிந்த பெரியாரின் பேருழைப்பு நம்மை மலைக்க வைக்கும்

வெள்ளக்காரனுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்
என்னன்னா அவன் பழசை நினைக்காம,

> புதுக்கருத்தோட, புதுசு எங்கேன்னு போவான். இங்கே எவ்வளவோ பெரிய புலவனாக இருந்தாலும் பழைய குப்பையைத் தேடி அதிலேயிருந்து பெரியவராய் ஆயிடலாம்னு பார்க்கிறானே தவிர, தன் கருத்துன்னு சொல்றது ஒன்னும் கிடையாது" எனப் பெரியார் நம் இலக்கியவாதிகளின் குறையைக் குத்திக் காட்டினார்.

> இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் ஆண்களுக்குப் பெண்களை அடிமைப்படுத்த வேண்டும் என்பதற்கே இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதனால்தான் பெண்கள் சமுதாயம் தலை எடுக்கவே முடியாது போய்விட்டது

எனப் பெண்ணியம் பேசிய பெரியார் இலக்கியங்களைப் பகுத்தறிய எந்த அளவுகோலைக் கையாண்டார் என்பதற்கு இச்சான்றும் ஒன்று.

> இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால் உலகில் எல்லாம் எல்லாத் துறைகளும் மனிதனின் உயர் வாழ்க்கைக்கு மட்டுமல்ல. மனித சமுதாய வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து

என்று பெரியார் இலக்கிய நோக்குக்கு வழிகாட்டி உள்ளார்.

இவ்வாறாக, குறள் உள்ளிட்ட எல்லா இலக்கியங்களையும் பெரியார் அலசி ஆய்ந்து மனதில் பட்ட கருத்தை மக்களிடம் எடுத்து வைத்தார். சிந்திக்கத் தூண்டினார்.

> அறிவால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக் கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக்கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்

என்று பகுத்தறிவுப் பகலவனே அடையாளம் காட்டிய குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஏற்குமாறு இடைவிடாமல் வலியுறுத்தி வாதிடுவதும் ஏற்கச் செய்தலும் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

பெரியார் எண்ணமும்: எதிரொலியும்



அன்று பெரியார் எண்ணினார். எண்ணியதை எடுத்தியம்பினார். இன்று அவர் கூற்று உண்மையென அறிவியல் மெய்ப்பித்துள்ளது. இதை நிறுவப் பல்துறை சார்ந்து பெரியார் பதிவு செய்த கருத்துக்களையும் அவற்றின் அறிவியல் சார் எதிரொலிகளையும் ஒப்பு நோக்குவோமாக.

ஆத்துமா

> ஆத்துமா என்பது வஸ்து அல்ல, பொருள் அல்ல. அது சுதந்திரம் அறிவு, உணர்ச்சி முதலாகியவைகளை உடையது அல்ல என்பதோடு அது பெரிதும் அர்த்தமற்ற வார்த்தை என்றே நமக்குக் காணப்படுகிறது

என்று பெரியார் கருத்தறிவித்தார்.

> ஆத்துமா என்பது ஒன்று இருக்குமானால் உடம்பு இல்லாமல் காரியம் செய்யச் சக்தி உண்டா? உடம்பு இருந்தால் தான் காரியம் செய்ய முடியும். உடம்பு புதைக்கப்பட்டு விட்ட பின் ஆத்துமா எப்படி காரியமாற்ற முடியும்? அதற்கு எப்படி மோட்ச நரக வாழ்வு தொடரும் என்று சிந்திக்க வேண்டாமா? சந்தேகப் பட்டால் கூட நரகம் சம்பவிக்கும் என்ற பயத்தைப் புகுத்தியுள்ளதால் மனிதன் சிந்திக்கக் கூடப் பயந்து அறிவு வளர்ச்சி அற்றவனாகி விடுகிறான்

என்று பெரியார் எழுப்பிய வினாக்கள் இன்றுவரை பதிலளிக்கப்படாத வினாக்கள் ஆகவே விளங்குகின்றன.

> ஒரு கடிகாரம் தவறாக மணி காட்டியதால், கெட்டுப்போன காரியம் ஒன்று இருக்குமானால் அதற்குப் பொறுப்பாளி அந்தக் கடிகாரத்தைச் செய்தவனாவான். அல்லது அந்தக் கடிகாரத்தைப் பராமரித்தவனாவான்! இரண்டு பேரிடமும் குற்றம் இல்லையானால் மணியைத் தவறாகக் கணித்துக் கொண்டு நடந்தவனாவான்.
>
> இவர்கள் மூவரும் அல்லாமல் கடிகாரத்தின் ஆத்துமா மீது குற்றம் சுமத்தி அதற்கு அதைக் கண்ணுக்குத் தெரியாததாக்கி அதற்குக் கண்ணுக்குத் தெரியாத சரீரம் கொடுத்து அதைத் தண்டிப்ப தென்றால் இதில் எத்தனைப் பித்தலாட்டமும் அறியாமையும் இருக்கின்றன என்று பாருங்கள். அது போலத்தான் சரீரம் செய்யும் வேலைக்கு ஆத்துமாவைப் பிணை ஆக்கியதும் ஆத்துமாவுக்குத் தண்டனை ஏற்படுவதுமான காரியங்களாகும்

என்றார் பெரியார்.

> உலகில் மனிதன் மட்டும் சாவது இல்லை. பிறப்பது இல்லை. ஏராளமான சீவன்கள், மிருகங்கள், மரம், செடி, கொடிகள் யாவும் மடிந்து சாகின்றன. மனிதனுக்கு எப்படி ஆத்துமா இருக்கின்றது என்கிறானோ அது போன்று இவைகளுக்கெல்லாம் ஆத்மா இருக்க வேண்டுமே! அப்படி இல்லை என்று சொன்னால் அவைகளுக்கெல்லாம் இல்லாத ஆத்மா மனிதனுக்கு மட்டும் இருக்க வேண்டிய அவசியம் என்ன என்று பார்த்தால் கடவுளிடம் மனிதனுக்குப் பயம் ஏற்பட வேண்டுமானால் அதற்கொரு வேலை வேண்டும். அதற்கு வேலை கொடுக்கவும் மனிதனைப் பயமுறுத்தவும் அயோக்கியனால் ஏற்பாடு செய்யப்பட்டது தான் ஆத்துமாவாகும்

என்று பெரியார் விளக்குவார்.

> மனிதனில் மட்டும் ஆத்மா என்ற ஒன்று தனியாக இருப்பதாகச் சொல்வார்கள். அது உயிர் பிரியும் பொழுது அதுவும் பிரிகிறது. சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்து சிகப்பு நிறம் உண்டாகிறது. இதில் சுண்ணாம்பிலாவது சிவப்பிருந்ததா? மஞ்சளிலாவது

> சிவப்பிருந்ததா? எதில் சிவப்பிருந்தது? சும்மாவாவது மனிதனை ஏமாற்றக் கற்பிக்கப்பட்டுள்ள கற்பனையே ஆத்துமா!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஆத்மா பற்றிக் கூறிய கருத்துக்களின் திரட்டு மா. நன்னன் அவர்கள் தொகுத்த பெரியார் கணினியிலிருந்து தரப்பட்டுள்ளது. ஆத்மா என்பதற்கு ஆங்கிலச் சொல் Soul என்பதாகும். இச்சொல் தற்காலத் தத்துவ ஞானியரால் எவ்வாறு பொருள் கொள்ளப்படுசொல் என்று சற்றுப் பார்ப்போம்! Jed Key என்ற தத்துவ வித்தகர்

> ஒரு மனிதனின் நினைவுகள், வயதாக ஆக ஏற்படும் அனுபவங்கள், தருக்க முறைப் படி அலசி ஆயும் உடல் மற்றும் மனக்கூறுகளை உள்ளடக்கிய மனிதனின் முழுமையை, அவன் அன்றாடம் எடுக்கும் முடிவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை Soul என்ற சொல் சுட்டுகிறது.

என்று விளக்கமளிப்பார். இசையின் ஆத்மா என்பது பல்லிசைக் கருவிகளைப் பல இசைவாணர் தத்தம் தனித்திறனுக்கேற்ப இசைத்து அவற்றின் கூட்டுறவால் விளைவதே இசையின் ஆத்மா எனப்படும். ஒரு நாட்டின் ஆத்மா என்பது அந்நாட்டு மக்களின், இயற்கை வளங்களின், நிகழ்வுகளின் கலவையால் விளைந்த செல்வாக்கே அந்நாட்டின் ஆத்மா எனப்படும். ஆக நாட்டின் ஆத்மா என்பது தனியாக இல்லை. தனித்தியங்கவும் இல்லை. இசையின் ஆத்மா தனித்தில்லை. கருவியின்றி, அதைக் கையாளுபவரின்றி இசைமாமணிகளின் மிடற்றிலிருந்து எழும் ஒலியின்றி இவற்றின் கலவையில் அன்றி ஆத்மா என்று தனித்துப் பிரித்தெடுத்திடுதல் இயலாது.

அறிஞர் பிளாட்டோ ஆத்மா என்பது ஒரு மனிதனைப் பிழிந்தெடுத்த சாறுக்கு ஒப்பு என்பார். பிளாட்டோ ஆத்மாவின் மூன்று உட் கூறுகளைப் பகுப்பார். 1. மனம் அல்லது பகுத்தறிவு 2. உணர்ச்சிகள், 3. விழைவுகள், (அ) ஆசைகள். மனம் என்பது தேரோட்டி போன்றது. தேரை இழுக்கும் குதிரைகளான ஆசைகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி இயக்கும் மனம், இந்த மூன்றின் இயக்கம் ஆத்மா என்பது பிளாட்டோ கருத்து ஆகும்.

பிளாட்டோவைப் பின்பற்றி மனிதனின் பிழிவு என ஆத்மாவை அரிசுடாடில் சொன்னாலும் பிளாட்டோவில் இருந்து மாறுபடுவார். ஆத்மா தனியே ஒன்றில்லை என்பது அரிசுடாடிலின் கருத்தாகும். ஒரு உயிரின் செயலாக்கமே ஆத்மா என்பது அரிசுடாடில் கருத்தாகும். கண்ணின் ஆத்மா என்பது அதன் பார்வையே! கத்தியின் ஆத்மா

என்பது அக்கத்தி வெட்டுஞ் செயலே என்பார். இவ்வாறு சொன்ன அரிசுடாடில் இறுதியில் உடம்பிலிருந்து பிரித்து அறிவின் செயல் அழியாதது என்றும் தடுமாறினார். இறப்புக்குப் பின் ஆத்மா நினைவுச் சக்தி இழந்து போகும் என்றும் கூறிக் குழம்பினார்.

இன்றைய ஆய்வறிஞர்கள் கருத்து பெரியாரின் கருத்தையே உறுதி செய்கிறது. அதுவும் அறிவியல் அடிப்படையில் அமைந்த ஆய்வுகள் மூலம் பெரியார் கருத்தே உறுதி செய்யப்படுகின்றது.

ஒரு மனித மூளையின் எந்தப் பகுதியில் உள்ளுணர்வு ஒளிந்துள்ளது? மூளையில் எந்த இடத்தில் சுதந்திரச் சிந்தனை முகிழ்க்கிறது? என்று கண்டறிய அறிவியல் சோதனைகள் நடத்தப்பட்டன. மூன்று தொண்டர்கள் தம்மை ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள ஒப்பினார்கள். மாறுகிற மனநிலைக்குக் காரணமான மூளையின் வலப்பகுதியில் முன்னுள்ள காம்மா கதிர்களின் உயரழுத்தம் அதிகரித்தது. விநாடிக்கு 47-48 சுழற்சி ஏற்பட்டது. பரிசோதனைக்குக்குட்பட்டவர் உணரும் முன்பு 8 விநாடி முன்பு இந்த அதிர்வலைகள் ஏற்பட்டன.

1980இல் இதற்கு முன்பே கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பெஞ்சமின் லிபெட் மேற்கொண்ட ஆய்வுகள் ஒரு மனிதன் உணரும் முன்பே அதாவது ஒரு வினாடியின் 3/10 முன்பே அவன் விரல் அசைய ஆணை மூளையில் உதிப்பதாக இந்த ஆய்வு கண்டறிந்தது. இது பற்றிய செய்தி வெளியிட்ட தி எகானமிஸ்ட் நாளேடு ஆழ்மனதளவிலேயே முடிவு எடுக்கப்பட்டு உணர்நிலை மனத்திற்கு முடிவு அறிவிக்கப்படுவதாகக் செய்தியில் கூறியது.

நம் புறமனமறியாமல் அக மனம் இயங்குகிறது. ஆம் மனதில் அடியில் மேற்கொள்ளப்படும் முடிவுகளைப் புறமனம் செயல்படுத்துகிறது.

ஏழு மனிதர்களின் மூளைக்குள் மின்கம்பிகளைச் செலுத்தி ஆய்வுகளை மேற்கொண்ட மைக்கேல் டெசுமுருகட்டும் அவருடன் இணைந்த பிரெஞ்சு நரம்பியல் நிபுணர்களும் எங்கு எவ்வாறு முடிவுகள் முளைக்கின்றன என்று கண்டறிந்தனர்.

எந்தப் பகுதி மூளையில் இருந்து முடிவுகள் உருவாகின்றன என்பதைத் துல்லியமாக இன்று அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்து விட்டனர். இது நிறுவப்பட்ட பிறகு உருவமில்லா ஆத்மா அல்லது மனம் நம்மை இயக்குகிறது என்ற வாதம் தகர்ந்து போயிற்று. பெரியார் சொன்னது நிறுவப் பெற்றது!

> ஒரு பொருள் என்பதன் கூட்டை - சேர்க்கையைப்
> பிரித்து விட்டால் அந்தப் பொருளுக்கு வேறு பெயர்

> ஏற்பட்டு விடும். இப்படி கூட்டுக்கள்! சேர்க்கைகள் பிரியப் பெயர்கள் மாற்றமடைந்து முடிவில் காணமுடியாததாகிப் பெயர் சொல்லவே மயக்க முண்டாகி முடிவில் மூலப்பொருள் தன்மையை அடைந்து விடும். இப்படிப்பட்ட சேர்க்கைப் பொருள்களில் ஒன்றுதான் மனிதன்"

என்று விளக்கும் பெரியார் எளியமக்களும் புரிந்து கொள்ளுமளவு மிக மிக எளிய மொழியில் மக்களிடம் எடுத்துச் சொன்னவர்.

> ஒரு கடிகாரம் ஓடிக் கொண்டு இருப்பது போலவும் ஒரு இஞ்சின் ஓடிக் கொண்டு இருப்பது போலவும் ஒரு இஞ்சின் இயங்கிக் கொண்டிருக்கும் போது அதனுடைய அசைவின் காரணமாக அதனோடு இணைக்கப்பட்ட மற்றும் பல இயந்திரச் சாதனங்கள் வேலை செய்வது போலவும் இருக்கிறது போன்றே உயிர் என்பதும் ஒரு இயங்கும் தன்மையாகும்

என்று விளக்கும் பெரியார் இன்னொரு எடுத்துக் காட்டையும் பதிவு செய்வார்.

> வாத்தியப் பெட்டி என்று ஒரு பெட்டி இருக்கிறது. அதற்குச் சாவி கொடுத்து வைத்து விட்டால் அது இராகம், தாளம், ஆகியவைகட்கு ஏற்ற வண்ணம் பாட்டு வர்ண மெட்டுக்களை ஒலிக்கச் செய்கிறது. ஒலிகேட்ட உடனேநாம் இன்னராகம், இன்ன தாளம், இன்ன பாட்டின் மெட்டு என்று சொல்லலாம். இதன் காரணம் என்ன? வெறும் சப்தமாக இருந்தால் இயற்கை ஒலி என்று சொல்லலாம்! ஆனால் தாளம். இராகம் சரியாய் ஒரு பல்லவி. ஒரு அனுபல்லவி 2.3 சரணங்கள் உடன் குறிப்பிட்ட பாட்டு என்று சொல்லும் படியாக அந்தப் பெட்டி பாடுகிறது என்றால் என்ன அர்த்தம். அதன் அமைப்பின் காரணமாய் ஏற்பட்ட ஒலியானது நமக்கு அத்துப்படி தெரிகிறது என்பதுதானே ஒழிய அதற்குத் தன் உணர்வோ உயிரோ ஏதாவது இருக்கிறது என்று சொல்ல முடியுமா? அது போலவே மனிதச் சரீர அமைப்பு கூட்டு ஜீவன் என்ற இயக்கச் சக்தியால் இயக்கப்படும் பொழுது பேசுதல். நினைத்தல். பார்த்தல். கேட்டல். கோபித்தல். சிரித்தல். அழுதல். பாடுதல். அடித்தல். அதிசயங்கண்டு பிடித்தல் ஆகாயக் கப்பலில் பறத்தல்

முதலிய காரியங்கள் செய்யப்படுகின்றன. இதற்குத் தனியாக ஜீவன் அல்லது உயிர் என்ற வஸ்து தேவையில்லை.

இப்படி பன்னிப் பன்னிச் சொல்லிப் பகுத்தறிவூட்டிய பெரியார் எழுப்பிய வினாக்கள் மூடத்தனத்தின் முக மூடியைக் கிழித்து எறிந்தன.

மூடத்தனங்கள்

ஒரு மனிதனை அல்லது ஒரு சமுதாயத்தை, ஒரு நாட்டாரை, ஒரு மதத்தாரைக் காட்டுமிராண்டித் தன்மை உள்ளவர்கள் என்று சொல்வதற்கு காரணங்களான குறிப்புகள் என்னவென்றால்

1) கைரேகை பார்த்தல்

2) சோசியம் பார்த்தல்

3) பிறந்த நேரம் கொண்டு சாதகப் பொருத்தம் பார்த்தல்

4) சகுனம் பார்த்தல் அதற்கு பலன் கணித்தல்

5) நல்ல நேரம், நல்ல நாள், நல்ல கிழமை, நல்ல மாதம் என்பவைகளைப் பார்த்தல்

6) ஆரூடம் பார்த்தல் அதை நம்புதல்

7) பட்சி சாத்திரம் பார்த்தல்

8) ராகு காலம் குளிகை காலம், எம க்ண்டம் முதலியன பார்த்தல்

9) கழுதை கத்துதல் பலன் பார்த்தல், ஆந்தை அலறுதல் பலன் பார்த்தல்

11) பல்லி கத்துவது குறித்தப் பலன் பார்த்தல் 1

2) பாம்பு குறுக்கே போவது பற்றிப் பலன் பார்த்தல்,

13) காக்காய் கத்தலுக்கு பலன் கூறுதல்

14) விதவை வருதல்

15) நெருப்பு எதிரில் வருதல்

16) மனிதன் தும்முவதன் பலன்

17) விளக்கு அணைதல் அதற்கு கெட்ட பலன் கூறுதல் 18) கண்திருட்டி படுதல் - திருட்டி கழித்தல்

19) சாந்தி கழித்தல்

20) மந்திரம் செபித்தல்

21) தழைகளைக் கொண்டு (வேப்பிலை) பாடம் போடுதல்

22) சாமி ஆடுதல்

23) வாக்கு (பூசாரியிடம்) கேட்டல்

24) பேய் ஆடுதல்

25) பேய் ஓட்டுதல்

26) வலம் சுற்றுதல், இடம் சுற்றுதல்

27) வலது கால், இடது கால் / வலக்கை - இடக்கை உயர்வு தாழ்வு கற்பித்தல்

28) எண்களில் நல்ல எண் / கெட்ட எண் பார்த்தல்

29) அதிசயங்கள் செய்து காட்டல் பற்றிய நம்பிக்கைகள்

30) ஆசீர்வாதம் செய்தல், வாழ்த்துக் கூறுதல், நம்பிக்கை, கொள்ளுதல் சாபம் கொடுத்தல் ஆகியவைகளில் நம்பிக்கை கொள்ளுதல்

31) இயற்கைக்கு மாறாக இறந்தவர்கள் பிசாசாக வந்து தொல்லை தருவரென்ற நம்பிக்கை.

32) தூங்கி எழுந்தவுடன் பார்க்கத் தகுந்த வஸ்துகள், சிலர் முகத்தில் விழிப்பதால் கெடுதி ஏற்படும் என்று நம்புதல்

33) அமாவாசை, சனிக்கிழமை முதலிய நாட்களில் கறி உண்ணுவதில்லை என்ற நம்பிக்கை.

இவ்வாறாக நந்தமிழ் மக்களையும் இந்திய மக்களையும் பற்றிப் பிணித்துள்ள மூடநம்பிக்கைகளைப் பட்டியலிட்டவர் பெரியார். அவரைக் கடவுள் மறுப்பாளராகவே மட்டும் பார்த்துத் தூற்றித் திரிவோர் நம் மக்கள் பகுத்தறிவு பெற எந்தெந்த மூடநம்பிக்கைகளில் இருந்து விடுபட வேண்டும் என்று பெரியார் போராடினார் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சில எண்கள் நல்ல எண்கள் என நம்பும் பழக்கம் இந்தியரிடையே மட்டுமல்ல, சீனர்களிடமும் இருக்கின்ற பழக்கமாகும். 6,8,9 ஆகிய எண்கள் சீனர்களுக்கு நல்ல எண்கள் ஆகும். 2 ஆம் எண்ணையும் சீனர்கள் நல்ல எண்ணாகக் கருதுவர். நல்லவை யாவும் இணையோடு வரும், (Good things come in pair) என்ற பழமொழி உள்ளதால் சீனர்கள் இரண்டாம் எண்ணை நல்ல எண்ணெனப் போற்றினர். சீன மொழியில் ஐம்பூதங்களுடன்

தொடர்புடையதாக ஐந்து கருதப்பட்டு அந்த எண் நல்ல எண்ணென நம்பப்படுகிறது. எட்டு என்ற எண்ணை மண்டாரின் மொழியில் செழிப்பு (அ) செல்வம் என்ற பொருள்தரும் சொல் போன்று ஒலிப்பதனால் அதுவும் நல்ல எண்ணாகவே நம்பப்பட்டது. எனவே பெரியாரின் இயக்கம் உலக மக்களுக்கும் தேவைப்படும் இயக்கம். ஒரு நாட்டை மூடநம்பிக்கையின் பிடியில் இருந்து மீட்பது மட்டுமல்ல பெரியாரின் தொண்டு! மாந்த குலத்துக்கே பகுத்தறிவுப் பணி தேவையெனத் தெளிதல் நன்று!

> அதிர்ஷ்டம் அடித்தால் ஒருவன் அதற்குக் கடவுளே காரணம் என்பான்! துரதிஷ்டம் வந்தால் அதற்காகக் கடவுள் மீது பழி போட மாட்டான். ஒரு மனிதனை அழிவில் இருந்து காப்பாற்றினால் அவன் கடவுளைப் போற்றுகிறான். அதே விபத்தில் பல்லாயிரமவர் உயிர் துறந்தால் கடவுளை ஏன் அந்த மனிதன் நிந்திக்க மறுக்கிறான்?

என மேலை நாட்டறிஞர் வெண்டி காமினர் எழுப்பும் வினா பெரியாரின் எதிரொலியாகவே நமக்குப் படுகிறது! மதச் சார்பற்ற மாந்தநேயக் கவுன்சில் என்ற பேரமைப்பில் உள்ள பகுத்தறிவாளர்களின் வினாக்கள் உலகெங்கும் பகுத்தறிவு நீரோட்டம் ஓடுவதை மெய்ப்பித்து நிற்கின்றன. இந்த அமைப்பின் தலைவராக இருப்பவர் பால் குர்ட்சு (Paul kurtz). இவர் நியூயார்க் மாநிலப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைத் தலைவரும் பேராசிரியருமாவார். Council for Secular Humanism அமைப்பை நிறுவியவர். Prometheus Books வெளியீட்டகத் தலைவர். Free enquiry இதழிகையின் தலைமை ஆசிரியருமாவார். 48 நூல்கள் 850 கட்டுரைகள் தீட்டிப் பகுத்தறிவுப் பணியில் ஈடுபடும் இவரும் பெரியார் வழியினரே என நாம் போற்றுதல் வேண்டும்.

பெரியார் மக்களிடையே பரப்புரை நிகழ்த்தியது போன்று மேலை நாட்டில் நூல்களெழுதிப் பகுத்தறிவைப் பரப்புரை செய்தனர்.

The Vanquished gods: Science Religion and Nature of Belief என்ற நூலெழுதினார் Richard H Schlagel. இந்நூல் மதவாதிகளுக்கு நன்மை அளித்திருக்கக் கூடிய நூல். ஆனால் அந்த வாய்ப்பை மதவாதியர் கை நழுவ விட்டனர். மதமும் அறிவியலும் ஒன்றிற்கொன்று பொருத்தமுடையன அன்று. மதங்களின் காலம் முடிந்து விட்டது. உலகைப் புரிந்து கொள்ள மதங்களைக் காட்டிலும் அறிவியலே துணை புரியக் கூடியதென இந்நூல் நுவல்கிறது.

Gods against gods: The History of the war between monotheism and Polytheism: எழுதியவர் Jonathan Kirsch. கடவுளுக்கு எதிராகக்

கடவுள்: ஓரிறைக்கும் பல இறைவர்க்குமான போர் பற்றிய வரலாற்றை விரித்துக் கூறும் இந்நூல் மேலை நாடுகளில் பல கடவுள் கருத்தியியலை ஓரிறைக் கருத்தியல் வெற்றி கொண்ட வரலாற்றை விளக்குவதாகும்.

Philosophers without gods: Meditations on Atheism and the Secular life: ஆசிரியர் லூயிஸ் எம். அந்தோணி. கடவுளை மறுத்துரைக்கும் 20 தத்துவ ஞானிகளின் கட்டுரைகள் தாங்கிய நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. பெரியாரை ஆங்கில வழியில் அகிலத்தின் பார்வைக்கு நாம் கொண்டு செல்லத் தவறுவதால் நாத்திக நல்லறிஞருள் - தத்துவ வித்தகருள் பெரியார் இடம் பெறாமல் இருட்டறையில் உள்ளார் என்பதை உணர்வோமாக!

பெண்ணடிமைத்தனம்

உலகெங்கும் பெண்ணடிமைத்தனம் நிலவியே வந்துள்ளது. மனிதன் செய்யும் ஏழு கொடிய பாவங்களை மதவாதிகள் பட்டியல் இட்டார்கள். அந்த ஏழு பாவங்களில் காமம் முதலிடம் வகிக்கிறது. Seven Deadly Sins என்ற நூலே உள்ளது. சைமன் பிளாக்பர்ன் எழுதிய இந்நூல் காமம் மிகப் பெரிய பாவம் என்கிறது. ஏழுபாவங்களில் எது முதன்மையான பாவம் என்று கருத்துக் கணிப்பு நடந்தது. 2002-03இல் நியூயார்க் பொது நூலகத்தில் ஏழு பாவங்கள் பற்றிப் பேசிட ஏழு அறிஞர்கள் அழைக்கப்பட்டனர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சைமன் பிளாக்பர்ன் காமம் என்ற தலைப்பில் பேசினார். பணமோகம், அதிகார மோகத்தைக் காட்டிலும் கூடுதலாக மனிதனின் சிந்தனையை ஆக்கிரமித்திருப்பது காமமே என அந்தப் பேராசிரியர் பேருரை நிகழ்த்தினார்.

பெண் விடுதலைக்காக உலகில் எழுந்த இயக்கங்களை மூன்று கட்டங்களாக வரலாற்றாசிரியர்கள் பிரிப்பர். பெண்களுக்கும் வாக்குரிமை கோரி நிகழ்ந்த போராட்டங்கள் 19 ஆம் நூற்றாண்டில் துவங்கின. இருபதாம் நூற்றாண்டில் வெற்றிகள் விளைந்தன. ஆயின் 21 ஆம் நூற்றாண்டில் ஆட்சி அதிகாரத்தில் 33% விழுக்காடு பெறவே இன்னமும் பெண்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வாக்குரிமை கிடைத்தது. ஆயின் சம உரிமை இன்னமும் கிடைக்கவில்லை. எழுத்தாளர் வர்ஜினியா உல்ஃப் போன்றோர் முதற்கட்ட பெண் விடுதலைப் போரை முன் நடத்தினர்.

இரண்டாம் கட்டமென 1960 - 1980 க்குமிடைப்பட்ட காலம் கூறப்படும். சட்டங்களில் பெண்களுக்கான சம உரிமை கோரிப் போராட்டங்கள் நிகழ்ந்த காலமாகும். இரண்டாம் கட்டப் போராட்டம்

பெறத் தவறிய வெற்றிகளைக் குவிக்க 1990 முதல் மூன்றாம் கட்டப் போராட்டத்தில் பெண்ணிய வாதிகள் மேற்கொண்டுள்ளனர். அத்தனை கட்டங்களைக் காட்டிலும் பெரியாரின் பெண்ணியப் போர் வீறு மிக்கது. வரலாற்றில் பதிவுக்குரிய திருப்பு முனையாகும்.

பெரியார் சொன்னார்

> திருமணம் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்றால் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் சேர்ந்து உலக வாழ்வு வாழ்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் (Contract) என்பதாக இருக்க வேண்டுமே ஒழிய, திருமணம் என்றால் ஆண் வீட்டாருக்குச் சம்பளம் இல்லாமல் வெறும் சோற்றுச் செலவோடு மட்டுமே ஒரு வேலைக்குப் பெண் சம்பாதிப்பதாக இருக்கக்கூடாது

என்று திருமணத்துக்கு இலக்கணம் சொன்ன பெரியார் நமது இலக்கியங்களையும் அலசுகிறார்.

> இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் ஆண்களுக்குப் பெண்களை அடிமைப்படுத்த வேண்டும் என்பதற்கே இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதனால் தான் பெண்கள் சமுதாயம் தலை எடுக்கவே முடியாது போய்விட்டது

எனப் பெண்ணடிமைத்தனத்துக்குத் துணை நின்ற இலக்கியங்களைப் பெரியார் தோலுரித்துக் காட்டினார்.

திருமணத்துக்கு இடைத்தரகர் தேவையில்லை என்பதும் பெரியார் கொள்கையாகும். திருமணத்தின் அடிப்படைத் தேவையே இதை நடத்திக் கொடுக்க யாரும் தேவையில்லை என்பதுதான். மணமக்கள் தாங்களாகவே முடித்துக் கொள்ள வேண்டிய காரியம். பிற்கால வாழ்க்கையை இருவரும் சிநேகிதர்களாய் இருந்து அன்புடனும் ஒத்துரிமையுடனும் ஒருவருக்கொருவர் பழகிக் கூட்டு வாழ்க்கை ஏற்படுத்திக் கொள்ளத் தொடங்கும் இந்தக் காரியம் மணமக்களுடைய சொந்தக் காரியம் என்பது எங்கள் கொள்கை. இதில் மற்றவர்களது பிரவேசமே இருக்கக்கூடாது என்பது எங்களுடைய அடுத்த கொள்கை.

பெண்ணுக்குச் சம உரிமை கிடைக்காதென்றால் திருமணமே தேவையில்லை என்பார் பெரியார்.

> ஆண் பெண் சமத்துவமாய் நடத்தப்பட்டுச் சமத்துவமாகப் பாவிக்கப்படுவதாக இருந்தால் தான் இம்மாதிரியான வாழ்க்கை ஒப்பந்தங்கள் இருக்க வேண்டுமே ஒழிய அப்படி இல்லாவிட்டால் பெண்கள் திருமணம் இல்லாமல் தனித்து வாழ்வதே மேல் என்று சொல்வேன். எதற்காக ஆணுக்குப் பெண் அடிமையாக இருக்கவேண்டும்? இஷ்டப்படாவிடில் என்ன செய்ய முடியும்? என்று பெரியார் பெண்கள் சமஉரிமைக்குப் போர்க்குரல் எழுப்பினார். கல்யாணம் ஆனால் கணவனுக்கு அடிமை! ஆகாவிட்டால் பெற்றோருக்கு அடிமை, உடன் பிறப்புகளுக்கு அடிமை, என்று அடிமைத்தளைகள் அறுபடாத சமூகத்தில் தான் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கிறோம்.

குடும்ப வாழ்க்கை நிர்வாகம் பற்றிப் பெரியார் கூறுகையில்

> மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் வரவுக்கேற்ற வகையில் செலவு செய்ய வேண்டும். கடன் வாங்கக்கூடாது. வரவு சிறிதாக இருப்பினும் அதில் ஒரு காசாவது மீதப்படுத்தணும். என்னைப் பொறுத்தவரையில் ஒழுக்கம் என்றால் இதுதான் என்பேன். வரவுக்கு அதிமாகச் செலவு செய்வது விபச்சாரித்தனம் என்பேன்!

இன்று பெண்ணியம் பேசுவோர் ஓரினச் சேர்க்கை போன்று இயற்கைக்கு மாறான உறவுகளை வரவேற்பர். கணவனைக் கைவிட்டுவிட்டுப் பெண்ணோடு பெண் கொள்ளும் உறவு இயற்கைக்கு மாறானது. அணும் ஆணும் கூடிப் பெற்ற அறுபது பிள்ளைகளின் பெயரைத் தமிழ் வருடங்களெனச் சொல்லி வந்த மடமைக்குக் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் ஆளும் தமிழ்நாட்டரசு முற்றுப் புள்ளி வைத்து வரலாறு படைத்தது.

> திருமணம் என்பது ஆணும் பெண்ணும் சேர்ந்து கூட்டு வாழ்க்கை - வாழ்க்கைத்துவக்கம் - செய்விப்பது என்றுதான் சொல்கிறோம். ஆணும் ஆணும் சேர்ந்தோ, அல்லது பெண்ணும் பெண்ணும் சேர்ந்தோ கூட்டு வாழ்க்கை வாழவேண்டும் என்று நாங்கள் இயற்கைக்கு மாறாக ஒன்றும் சொல்லவில்லை

என்று இன்று பெரிதாக விவாதிக்கப்படும் இயற்கைக்கு மாறான உறவுகளுக்கு எதிராகப் பெரியார் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

> விதவைத்தன்மை என்பது நமது நாட்டில் மிகக் கொடுமையான முறையில் இருந்து வருகின்றது. இதை எந்தச் சீர்திருத்தவாதியும் கவனிப்பது இல்லை. விதவைகள் வாழ்க்கை ஒரு சிறைக்கூட வாழ்க்கையை ஒக்கும். ஒரு கைதிக்குள்ள நிர்பந்தம் ஒவ்வொரு விதவைக்கும் இருந்து வருகிறது. எப்படி கைதியானவன் சிறைக்கூட விதியை மீற வேண்டும் என்கின்ற ஆசைக்கும் அவசியத்துக்கும் உள்ளாகின்றானோ அதுபோலவே தான் ஒவ்வொரு விதவையும் விதவைச் சட்டத்தை மீற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிக் கஷ்டப்படுகிறாள்! இந்தக் கொடுமை நிரபராதியான ஒரு பெண்ணுக்கு ஏன் ஏற்பட வேண்டும்? என்று கேட்டால் இதற்கு என்ன மறு மொழி இருக்கிறது. இந்த 20 ஆம் நூற்றாண்டில் தலைவிதி என்றும் கடவுள் செயல் என்றும் சொல்லி மக்களை ஏய்க்க முடியுமா?

பெண்ணியம் பற்றிப் பேசுகையில் பெரியார் காலத்துடன் நாம் நின்றுவிட முடியாது. 2006இல் வெளிவந்த "தி டாவின்சி கோடு" திரைப்படம் உலகெங்கிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அது பற்றிய விமர்சனத்தை 26 மே - 2006 ல் நிகாத் காசுமி என்பவர் தி டைம்சு ஆப் இந்தியா நாளேட்டில் எழுதி இருந்தார். "டான் பிரவுன்" "தி டாவின்சி கோடு" என்று நூலாக எழுதினார். அதையே அதே தலைப்பில் ரோன் ஓவர்டு திரைப்படமாக்கினார். இவ்விரண்டும் மத தத்துவம் பற்றிய ஆய்வேடாக எவரும் கருதத் தேவையில்லை.

> உண்மையில் பெண்ணியவாதிகள் தான் இந்நூல் படித்து படம் பார்த்து மேரி மாக்தலின் என்ற பெண்ணையே இயேசு தன் வாரிசாக விட்டுச் சென்றார். அந்தக் கதைப்படி! ஆணாதிக்க வாதிகள் இதனை மறைத்து விட்டார்களே என பெண்ணியவாதிகள் போர்க்குரல் எழுப்பி இருக்க வேண்டும்

என எழுதினார். அதைப் படித்து விட்டு இணையத்தில் பெரியாரின் சீடர்கள் இந்தப் புதிய செய்தியை வரவேற்கிறார்கள்.

> இயேசு தன் சீட பரம்பரை எனப் பெண்ணை வாரிசாக அறிவித்துச் சென்றாரா என்பது பற்றி இன்னமும் ஆய்வுகள் நிகழட்டும்

என 29.05.2006இல் 15:28:5 மணிக்கு இணையப் பதிவு செய்தேன்.

இது மட்டுமல்ல, இயேசுவைக் காட்டிக் கொடுத்த Judas பற்றியும் விவாதங்கள் நிகழ்கின்ற காலத்தில் நாம் வாழ்கிறோம். "ஒவ்வொரு கதைக்கும் ஒரு வில்லன் தேவைப்படுகிறான். விவிலியத்தில் ஜுடாஸ் அந்த வில்லன் பாத்திரத்தை நிறைவு செய்கிறான். இயேசுவின் சீடர்களில் ஒருவனான ஜுடாசை அச்சீடர் குழுவின் பொருளாளராகவும் முக்கிய தருணங்களில் உடனிருந்தவனாகவும் ஜான் கூறுவார். Judas Iscariot பெயரிலேயே குழப்பங்கள் உள்ளன. Judas Sicariot என்று படி எடுத்தவர் திருத்தி எழுதிவிட, கிரேக்கத்தில் இருந்த தீவிரவாதக் குழுவான Siaric யில் உறுப்பினர் எனவும் அச்சொல்லுக்குக் கொலை புரிவோன் (Assasin) என்ற பொருளுண்டு என்றெல்லாம் பெயரும் கெட்டது. பொருளும் மாறியது.

ஜுடாஸ் எப்படி எவ்வாறு இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் என்பதும் அலசப் பெறுகிறது. இயேசு Garden of Gethsemane வில் இருந்த போது இவர் தான் இயேசு என்றாராம் ஜுடாஸ். இயேசு தலைமறைவு வாழ்வு வாழவில்லை. எனவே காட்டிக் கொடுத்ததாக ஆகாது. நண்பர்கள் தன்னைக் காட்டிக் கொடுப்பார்கள் என்று தீர்க்க தரிசனமாக இயேசு சொன்ன வாசகத்தை மெய்ப்பிக்கவே சீடனான ஜுடாஸ் காட்டிக் கொடுத்ததாக வரலாற்றாசிரியர்கள் எழுதுகின்றனர். இது எதைக் காட்டுகிறது? பெரியார் அன்று இதிகாச புராணங்களை அலசியது போல உலகெங்கும் எல்லா மதங்களுக்குள்ளும் ஆய்வுகள் நடக்கின்றன., விவாதங்கள் நிகழ்கின்றன. உண்மையைத் தேடுவதும் அதற்காகப் பகுத்தறிவை நாடுவதும் மன்னிக்க இயலாத குற்றங்களா? இல்லையே!

பெண்களுக்கு எதிரான கொடுமைகளின் உச்சக்கட்டம் பெண்களைச் சூனியக்காரிகளாக - மந்திரவாதிகளாக - பேய் பிடித்தவர்களாகப் பேயை விரட்டுபவர்களாக இட்டுக் கட்டி அவர்கள் மீது தொடுக்கப்பட்ட பாலியல் வன்முறையையே என்று கூற முடியும். Malleus Maleficarum என்பார் பெண் மந்திரவாதிகளை எப்படியெப்படி எல்லாம் சித்ரவதை செய்யலாம் என்பதற்கு நூலே எழுதினார். எல்லாப் பெண் மந்திரவாதிகள் உடலிலும் சாத்தானின் அடையாளமிருக்கும். எனவே அந்த அடையாளங்களைக் கண்டறியப் பெண்களைத் துகிலுரிந்தார்கள். பெண்களின் மார்பிலும் அல்குலிலும் சூடு போட்டார்கள். இப்படி சித்ரவதை தாங்காமல் பேய் பிடித்த பெண்கள் கொடுமை செய்பவன் சொல்வதை ஒப்புக் கொள்வாள்! அவள் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக இவர்கள் குதூகலிப்பார்கள். பெரும்பாலும் வயதில் மூத்த பெண்கள்தான் சூனியக் காரிகளாகக் குற்றஞ் சாட்டப்படுவர்.

இதற்கொரு விதிவிலக்கு இளமையும் அழகும் அறிவும் நிரம்பிய ஜோன் ஆஃப் ஆர்க் ஆவார். கிராமப்புறத்து அழகியான ஜோன் ஆஃப் ஆர்க் கனவுகளில் செயின்ட் மைக்கேல், செயிண்ட் காதரீன், செயிண்ட் மார்க்கரெட் என புனிதர்களின் உருவங்கள் தோன்றுமாம். ஆங்கில ஆதிக்கத்தை விரட்டி அடித்து பிரெஞ்சு மக்களை விடுவிக்க கடவுள் தன்னை தேர்ந்தெடுத்துள்ளதாக இந்தக் கனவுகள் வழி ஜோன் ஆஃப் ஆர்க் நம்பினார்.

எனவே 1429 ல் எட்டாம் சார்லசு மன்னனிடம் தன் கனவுகளைச் சொல்லி நம்ப வைத்து ஓர்லையன்சு நகரை விடுவிக்கப் பிரெஞ்சுப் படையணிக்குத் தலைமையேற்று ஜோன் ஆஃப் ஆர்க் புறப்படுவார். பிரிட்டிஷாரின் கூட்டாளிகளான பர்கண்டியர்கள் அவரைச் சிறைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்பு வித்தனர். கடவுள் தன்னிடம் நேரில் பேசிக் கட்டளையிட்டதாலேயே படையெடுத்து வந்ததாக ஜோன் ஆஃப் ஆர்க் கூறியதால் அவள் இறையை நிந்திப்பவராக, சூனியக் காரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பிரிட்டிஷாரால் உயிரோடு கொளுத்தப் படுவாள்!

1456 சூன் 16இல் அவள் நிரபராதி எனப் போப்பாண்டவர் Callistus III அறிவிக்கும் வரை சூனியக் காரியை எரித்து விட்டதாகவே எக்காளமிட்டனர் ஆணாதிக்க வாதிகள்! இவ்வாறு 40,000 முதல் 60,000 பெண்கள் வரை எரியூட்டி அய்ரோப்பாவெங்கும் சூனியக்காரிகள் முத்திரையிடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. "சதி" யென நம் நாட்டில் எரிதீயில் பாய்ந்து இறந்தோர் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படாத புதிராகவே உள்ளது. இதற்கெதிராக இந்தியாவில் கலகக்குரல்கள் எழுந்தன. அவற்றுள் பெரியாரின் போர்க்குரலை வரலாற்றில் இருட்டடிப்பு செய்தல் இயலாது.

"ஒரு பெண்ணைத் தானம், தாரை வார்த்துக் கொடுத்துவிட்டால் அந்தப் பெண்ணைக் கணவன் என்பவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கேட்க நமக்கு உரிமை இல்லை. அவன் அடிக்கலாம். கொடுமை செய்யலாம். யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். வாடகைக்குத் தரலாம். தான் மோட்சம் பெற மற்றவர்க்குத் தரலாம். சூதாடும் பொழுது மனைவியைப் பந்தயப் பொருளாக வைத்து ஆடலாம்" என்றுள்ள பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகப் பெரியாரின் போராட்டங்களுக்கு நன்றி கூறவே பெண்குலம் அவருக்குப் பெரியார் பட்டமளித்துப் போற்றியது! ஆயிரம் ஆத்திகர் தூற்றினும் பெண்குலம் போற்றியது! பெரியார் புகழை வரலாற்றில் ஏற்றியது!

பெண்ணியப் போராளி பெரியார் புகழ் என்றும் வாழும்.

பன்நூல் பகுத்தறிவுப் பலகணி

பகுத்தறிவுப் பணியில் பெரியார் ஈடுபட்டது போல் பலரும் ஈடுபட்டிருக்கலாம். ஆயின் அவரெழுதிக்குவித்த அளவு வேறு எவரும் எழுதியும் பேசியும் மக்களை விழிப்புற்றெழச் செய்ததில்லை. கணக்கற்றோர் நாத்திகம் பேசியுள்ளனர். அவருள் சிலர் நூல்கள் தீட்டியுமுள்ளனர். அத்தகு நூல்கள் சிலவற்றை ஈண்டு காண்போம்.

Fear, Faith, Fact, Fantasy என்ற நூலை John A. Hendersan எழுதியுள்ளார்.

> உலகின் துன்பங்களில் இருந்து ஆறுதல் பெற மதங்களை நாடுகிறார்கள். ஆயின் பெரும்பான்மையான உலகச் சிக்கல்கள் மதங்களாலும் மதங்களின் மோதல்களாலுமே ஏற்படுகின்றன. சிக்கல்களுக்கும் காரணமான மதம் சிக்கலில் உள்ளோர்க்கு ஆறுதல் நல்குவதாகவும் எவ்வாறு இருக்க முடியும்? மக்கள் மதங்களைக் கேள்வி கேட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தத் தயங்கும் காரணத்தாலேயே மதங்கள் இன்றளவும் மனித வாழ்வில் நிலையான இடம் பிடித்துள்ளன. கேள்வி எழுப்புவோர் தொகை மிகுமாயின் மதங்கள் ஆட்டம் கண்டுவிடும்

என்று இந்நூல் சொல்லும் செய்தியைச் சிந்தையில் நிறுத்துவோம்.

அறிவுக்குத் தீனி போடும் கேள்விகளால் மதங்களை நிலைகுலையச் செய்தவர் பெரியார். எடுத்துக்காட்டாக அவரெழுப்பிய கேள்வி ஒன்றைப் பார்ப்போம்

> அந்த இராட்சதன் பூமியை எப்படி சுருட்டினான்? பூமிதான் பந்துபோல இருக்கிறதே? அவன் அதை உருட்டுவதனால் ஒரு சமயம் உருட்ட முடியுமே ஒழியச் சுருட்ட முடியாது... சுருட்டினானே அவன் சுருட்டும் போது தான் எங்கிருந்து கொண்டு சுருட்டினான்? அவன் சமுத்திரத்துக்குள் ஒளிந்து கொண்டான் என்கிறாயே அந்தச் சமுத்திரம் எதன் மேல் இருந்தது? பூமியின் மேல் இல்லாமல் அதுவும் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டோ அல்லது பறந்து கொண்டோ இருந்தது என்றால் சமுத்திரம் தண்ணீர் ஆயிற்றே அது ஒழுகிப் போய் இருக்காதா? அப்போது அடியில் ஒளிந்து கொண்டிருப்பவன் தொப்பென்று கீழே பூமியுடன் விழுந்திருக்க மாட்டானா? அல்லது அது வேறு உலகம், இது வேறு உலகமா?

நம் நாட்டில் இத்தகு கேள்விக் கணைகளால் தாக்கித் தகர்க்கப்பட்ட கட்டுக்கதை மீது கட்டப்பட்ட பண்டிகைகளை இன்னமும் ஆண்டு தோறும் கொண்டாடுகிறோம்! கேள்விகளே எழுப்பாத மக்கள் வாழும் நாடுகளில் மதங்கள் ஆதிக்கம் இருப்பது வியப்பில்லை அன்றோ!

The Gathering of Infidels: A Hundred Years of the Rationalist Press Association என்ற நூல் பில் குக் (Bill Cooke) அவர்களால் எழுதப்பட்டதாகும். பிரிட்டனில் 1899இல் நிறுவப்பெற்ற இச்சங்கம் மிகுந்த பழமை வாய்ந்த பகுத்தறிவாளர் கழகமாகும். சுதந்திரச் சிந்தனையாளர்கள் ஒன்றுகூடிப் பகுத்தறிவாளர் பத்திரிகையாளர் மன்றம் கண்ட நூறு ஆண்டு வரலாற்றை இந்நூல் நுவல்கிறது. இந்த வரலாறு பலர் அறியாத வரலாறு. பல்வேறு இதழ்கள், இதழாளர்கள் அமைப்புகள் பகுத்தறிவுப் பணியாற்றினர். பலர் பெயர் தெரியாமல் அவர்தம் எழுத்துகள் தொகுக்கப்படாமல் காணாமல் போயின. பிரிட்டனின் பகுத்தறிவு இதழாளர் மன்றம் பல நூல்களை விற்றது. மக்களும் பெருமளவில் வாங்கினர். இதே காலக்கட்டத்தில் அமெரிக்காவில் அறிவாளர்களுக்குள்ளேதான் பகுத்தறிவு இயக்கம் முடங்கிக் கிடந்தது. பிரிட்டனிலோ அதை மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமை பகுத்தறிவு இதழாளர் மன்றத்தைச் சாரும்.

1925 முதல் 1938 வரை தந்தை பெரியார் நடத்திய குடியரசு வார ஏட்டையும் மக்கள் மீதான அதன் தாக்கத்தையும் இங்கு எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

1983 - 84 ஆம் ஆண்டுகளில் குடியரசு, புரட்சி, பகுத்தறிவு Revolt முதலான இதழ்களைத் திரட்டி அவற்றில் இருந்து தந்தை பெரியாரின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்து, சுமார் 18 ஆயிரம் பக்கங்கள் எழுதும் பணியைச் சுமார் 50 பகுத்தறிவாளர்கள் மேற்கொண்ட தகவலைத் தந்தை இரா. இரத்தினகிரி ஒரு பிரபல தமிழ் வாரமிருமுறை ஏட்டில் (5.8.2009) பதிவு செய்தார். குடியரசு ஏட்டில் கைவல்ய சுவாமிகளின் கட்டுரைகள் முதல் மிஸ்மேயோ எழுதிய மதர் இந்தியா நூல் பற்றி உள்ள பல செய்திகளைப் பிரிட்டனில் உள்ளவர்கள் தொகுத்தது போல் தொகுத்தும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தும் வெளியிட வேண்டும்.

Tilting of Religion என்ற நூல் கிளென் டபிள்யூ. பெர்குசன் அவர்களால் எழுதப்பட்டது. கிளென் டபிள்யூ, பெர்குசன் கனக்டிகட் பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்தவர். கென்யா நாட்டுக்கு அமெரிக்கத் தூதராகவுமிருந்தார். அவரின் கட்டுரைத் தொகுப்பே இந்நூலாகும். மதங்களின் தன்மை பற்றித் தோலுரித்துக் காட்டும் கட்டுரைகள் உண்டு. கடவுளை விவாதிக்கும் கட்டுரையும் உண்டு. அதிசயச் செயல்களை அலசும் அறிவியற் கட்டுரைகளுமுண்டு. அடுத்த பிறவியை, பாவங்களை, மதக்கல்வியை, ஈமச்சடங்குகளை எனப் பல்துறைகளைப் பகுத்தறிவுப் பார்வையோடு படம் பிடிக்கும் எழுத்தோவியங்களும் உள்ளன.

> அறியாத வயதில் பெற்றோரோ, உடன் பயில்வோரோ ஆசிரியரோ நண்பரோ நமக்குச் சொல்லும் கருத்துக்களை ஏற்றதும் உண்டு. மறுத்ததும் உண்டு. எந்தக் காலக் கட்டத்தில் பிறர் கூறிய கருத்து நம்முள் புகுந்து நம் கருத்தாயிற்று என்று வரையறுத்தல் எளிதான செயல் அன்று. ஒருமுறை கருத்தை உள்வாங்கி ஏற்றுக் கொண்டால் அதை மாற்றுவதும் எளிதல்ல. ஒரு கருத்தை உள்ளே நுழைய விட்டுவிட்டால் நம் அனுபவம் அது தவறு என்று சொன்னாலும் ஏற்ற கருத்தை மாற்றிடுவது கடினம். இளமையில் ஏற்றுக் கொண்ட நம்பிக்கையைக் கல்வியாலோ விவாதத்தாலோ மாற்றுதல் முடியாத காரியம்

என மதக் கருத்தியல் மனங்கள் மீது செலுத்தும் ஆதிக்கம் பற்றி பெர்குசன் எழுதுவார். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என நம் பழமொழியும் பெர்குசன் கூற்றை மெய்ப்பிக்கிறது.

"சிந்தனா சக்திதான் மனிதனை மிருகங்களிடமிருந்தும் பட்சிகளிடமிருந்தும் பிரித்துக் காட்டுவதாகும். மிருகங்கள் மனிதனை

விட எவ்வளவோ பலம் பெற்றிருந்தும் அவை அவனுக்கு அடிமைப் பட்டிருப்பதற்கும் இதுதான் காரணம். மனிதனிடமுள்ள வேறு எந்தச் சக்தியைக் காட்டிலும் பகுத்தறியும் சக்திதான் அவனை மற்ற சீவராசிகளைக் காட்டிலும் மேம்பட்டவனாக்கி வைக்கிறது. ஆகவே அதை உபயோகிக்கும் அளவுக்குத்தான் அவன் மனிதத்தன்மை பெற்றியங்குவதாக நாம் கூற முடியும். பகுத்தறிவை உபயோகியாதவன் மிருகமாகவே கருதப்படுவான்"

என்ற தந்தை பெரியார் சிந்திக்கத் தூண்டினார். பகுத்தறிவைப் பயன்படுத்துமாறு மக்களிடம் மன்றாடினார். இளமையில் ஏற்ற நம்பிக்கைகளை தகர்த்து இளைஞர் உள்ளங்களை ஈர்த்து அறிஞர் அண்ணாவைத் தளபதியெனக் கொண்டு பகுத்தறிவுப் படை கண்டார்.

> நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியாரென உலகம் போற்றய ஒப்பில்லா அறிவாசான் அண்ணாவே உளமுவந்து ஒப்பினார் எனில் பெரியாரின் பெருமைக்கு இதைவிடச் சான்று இருக்க முடியுமா?

Natural Atheism என்ற நூலை டேவிட் எல்லர் எழுதினார். இயல்பான நாத்திகம் பற்றி இயம்ப வந்தவர் பிறக்கும் போது அனைவரும் நாத்திகர்களே என்ற விளக்கம் அளித்தார். எந்தவொரு கடவுளைப் பற்றியும் எண்ணமே இல்லாமல் தான் ஒவ்வொரு மனிதரும் பிறக்கிறோம். நண்பர்களிடமிருந்தும் குடும்பத்தாரிடமிருந்தும் பண்பாட்டுச் சூழலில் இருந்தும் நம்பிக்கைகளை இரவலாகப் பெறுகிறோம். அவர்களுள் சிலர் அந்த நம்பிக்கைகளில் இருந்து விடுபட்டு மீண்டும் நாத்திகராகின்றனர். அத்தகு மனிதர்களை இயல்பான நாத்திகர்கள் என டேவிட் எல்லர் வருணிக்கிறார்.

எல்லா மனிதர்களும் நாத்திகர்களாகவே பிறக்கிறார்கள். எந்தக் குழந்தையும் குறிப்பிட்ட மதம் பற்றிய அறிவுடனோ மத நம்பிக்கையுடனோ பிறப்பதில்லை. பின் மதமயக்கம் மனிதனை ஆட்கொள்கிறது. பிறரிடமிருந்து பன்றிக் காய்ச்சல் போலப் பற்றிக் கொள்கிறது. அதிலிருந்து விடுபட்ட நாத்திகமே நம் இயல்பென மீண்டும் திரும்ப 12 வழிகளை டேவிட் எல்லர் நூல் விளக்குகிறது. பெரும்பாலான நூல்கள் கடவுளுக்கு ஆதரவான கருத்தாகவோ கடவுளை மறுத்துரைக்கும் வாதமாகவோ இருக்கும். ஆயின் டேவிட் எல்லர் பகுத்தறிந்து சிந்திப்பது பற்றிப் பேசுவார். சிந்திப்பது எப்படியெனச் சிந்திப்பார், சிந்திக்க வைப்பார். உண்மை தேடி அறிவை நாடி அறிவியலோடு கூடிப் பகுத்தாய்ந்து தெளிந்திடப் பயிற்றுவிப்பார்.

இந்நூல் எழுதிய நோக்கம் பற்றி டேவிட் எல்லர் கூறுவார். "உங்களை நீங்களே உணர்ந்து கொள்ளச் செய்தலே" இந்நூல் நோக்கம் என்பார். உங்கள் முடிவுகள் சரியானவை என உங்களுக்கு தன்னம்பிக்கை ஊட்ட உருவான நூல் என்பார். உங்கள் நிலைப்பாடு சரியானதென்று நிலை நாட்டும் என்பார். நீங்கள் நல்ல மனிதரென உணர்வீர்கள். ஒழுக்கப் படிநிலைகளை மதமே ஒட்டுமொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. பகுத்தறிவைப் பயன்படுத்தும் உங்கள் பிறப்புரிமையை மீட்டெடுக்கத் தூண்டுவதே இந்நூற் பயன் என்பார். பொய்மையும் வெறியும் மலிந்த தவறான பாதைகளில் தடம்புரளாமல் உங்களை நேர்வழி நடத்தி உங்கள் பகுத்தறிவு அடிப்படையில் உலகை நோக்கிடச் செய்யும் நூலென்பார். இவர் கூற்றையும் பெரியார் கூற்றையும் ஒப்பு நோக்கிப் பாருங்கள்.

> சிந்தனை அறிவு ஒன்று தான் உண்மை அறிவாகக் கருதப்படக் கூடியது. வெறும் புத்தக அறிவு அறிவாகி விடுமா? அதைக் குருட்டுப் பாடம் பண்ணி ஒப்புவித்தவனே மேதாவி ஆகி விடுவானா? அப்படியானால் படித்த மேதாவிகள் கல்லைக் கடவுள் என்று நம்பி அதன் காலில் விழுந்து வணங்குவார்களா? விஞ்ஞானம் படித்த மகோன்னத பண்டித நிபுணர் என்பவர்கள் எல்லாம் மோட்சத்துக்காகச் சாணியையும் மூத்திரத்தையும் கலக்கிக் குடிப்பார்களா? அல்லது பாப விமோசனத்திற்காகத்தான் தீர்த்தமெனச் சேற்று நீரை வாரித் தெளித்துக் கொள்வார்களா? அவர்கள் படித்த சயின்சுக்கும் இந்தச் சாணி மூத்திரக் கலவைக்கும் ஏதாவது சம்பந்த முண்டா? வேறு நாட்டில் எந்த மடையனாவது இப்படி செய்வானா?"

என்று பெரியார் சிந்திக்க வைப்பார். நாத்திகமே இயல்பென மேலைநாட்டு நூல் சொல்வதை எளிய மொழியில் அறிவைக் கொளுத்திடும் பணியில் ஈடுபடுவார். எல்லா நாட்டுப் பகுத்தறிவாளரும் மக்கள் சிந்திக்கத் தூண்டியவர்களே! மனங்களில் மண்டிய மதவிருளை ஓட்டியவர்களே! நல்வழி காட்டியவர்களே என்று தெளிந்திடுக!

உலகப் பகுத்தறிவு நீரோட்டம் என்ற சொற்றொடர் இந்நூலின் தலைப்பில் இடம் பெற இரண்டு காரணங்கள் உள்ளன. ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பகுத்தறிவு சார் நூல்கள் அருந்தமிழர் அறியாதவை. அகிலமெங்குமுள்ள பகுத்தறிவாளர் பலர் நம்மவர்க்கு அறிமுகம் இல்லாதவர்கள். இக்குறையை ஈடுசெய்யும் உந்துதல் உருவாக

முதற்படியாக இந்நூல் மலர்கிறது. நூலாக வடிவம் பெறும் என் உரை உருக்கொண்டது. பெரியாரை உலக அளவில் கொண்டு செல்லும் கடமையும் உண்டென நினைவூட்டவும் இத்தலைப்பு தரப்பட்டது.

நாத்திகத்தைத் தத்துவ அடிப்படையில் நியாயப்படுத்த இயலுமா? என்ற வினா நிச்சயம் உங்கள் உள்ளங்களைக் குடைந்திருக்கும்! அதைச் செய்துள்ளார் மைக்கேல் மார்ட்டின். அவரது Atheism: A Philosophical Justification என்பதாகும். 1990இல் இந்நூல் வெளிவந்தது. ஆத்திகத்துக்கு எதிரான விரிவான விளக்கமான வாதங்களை உள்ளடக்கியது இந்நூல். அதே வேளையில் நாத்திகம் மெய்ப்பிக்கப்பட அழுத்தமான வாதங்களும் ஆழ்ந்தகன்ற சுருக்கமும் செறிந்த நூலாகவும் இந்நூல் மிளிர்கிறது.

300 பக்கங்கள் கொண்ட இந்நூலின் முதற் பகுதி எதிர்மறை நாத்திகக் கருத்தியலைப் பேசும். கடவுள் உண்டென்பார் எடுத்து வைக்கும் அத்துணை ஆதாரங்களையும் மறுத்து விளக்கமளித்துத் தெளிவளிப்பது முதற் கட்டமாக அமையும். இதனை எதிர்மறை நாத்திகம் எனலாம்.

அடுத்த கட்டம் Positive Atheism: ஆத்திகர்கள் கூறும் கடவுள்கள் இல்லவே இல்லை என நாத்திகத்தின் கருத்து வலிமையை நம் நெஞ்சில் நிறுத்துவதாக இரண்டாம் கட்டம் அமையும். ஆக நூலின் நோக்கம் முழுமை பெற்றது. தரமிகு பகுத்தறிவுப் படைப்பொன்று தரணிக்குக் கிடைத்தது.

நாத்திகராக இருந்தால் மட்டும் போதாது. நாத்திகம் ஏன் என்பதை நிலை நாட்டியாக வேண்டும். அத்தகு பணிக்கு இத்தகு நூல்கள் அரிய துணைபுரியும். பகுத்தறிவு இருந்தால் போதாது! அதைப் பயன்படுத்த வேண்டும் என்ற பெரியார் மொழியையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

> சமுதாயத்துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேசம், இழிவு, தரித்திரம், மடமை முதலிய குணங்கள் மனிதன் அறிவுக் குறைவினால் பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாததால் ஏற்பட்டவை ஆகும் என்று தான் சொல்ல வேண்டுமே ஒழிய, காலக் கொடுமையாலோ கடவுள் தன்மையாலோ அரசாட்சியாலோ ஏற்பட்டது என்று எவரும் சொல்லி விட முடியாது

என்று பெரியார் நம் குறைபாட்டை நமக்குப் புரிய வைத்தவர். எளிய மொழியில் இயம்பியவர். எதையும் பகுத்தறிந்து பார்க்கத் தூண்டியவர்.

நல்லொழுக்கத்தை நிலைநாட்ட மதமும் கடவுளும் இருந்தாக வேண்டும் என்ற கருத்து ஆத்திகத்தின் சார்பில் முன்மொழியப் படும் கருத்தாகும். ஒழுக்கம் என்பது மதத்தோடும் கடவுள் நம்பிக்கையோடும் பின்னிப் பிணைந்ததாகவே மானிட வரலாற்றில் பேசப்படுவது. Atheism: Morality and Meaning என்ற நூல் மூலம் மைக்கேல் மார்டின் ஆற்றிய பேருரைத் தொகுப்பு இதனை அலசி ஆய்கிறது. போசுடன் பல்கலைக்கழகத் தத்துவத் துறைப் பேராசிரியரான மைக்கேல் மார்ட்டின் தத்துவத் துறையில் ஏராளமான நூல்கள் எழுதியவர். பெரும்பாலான நூல்கள் ஆத்திக நாத்திக வாதங்களை எடுத்துச் சொன்னாலும் நாத்திகம் நல்லொழுக்கம் பற்றி ஆழ்ந்தகன்ற பொருள் பொதிந்த விளக்கம் அளிக்காது உள்ள குறையைப் போக்கிட இந்நூலை எழுதினார்.

> இழிவான குணங்கள் மற்ற சீவராசிகளை விட மனிதரிடமே அதிகமாகக் காணப்படுகின்றன. எல்லையற்ற ஆசையையும் பொறாமையான போட்டியையும் உண்டாக்கி ஓய்வில்லாமல் செய்து விடுகிறது அவனிடம் உள்ள இழிபண்பு. மனிதனை மனிதன் சுரண்டவும் இழிவு படுத்தவும் வெறுக்கவுமான காரியங்களுக்கா அறிவைப் பயன்படுத்துவது?

என்று சாடுபவர் பெரியார். பதவிகளால் பெருமை இல்லை. பண்புகளால் தான் ஒவ்வொருவரும் பெருமையுறுவர் என்றவர் பெரியார்.

> மந்திரிப் பதவி பெரிதல்ல, பணக்காரனாக இருப்பதும் பெரிதல்ல, மனிதனாக வாழ்வதுதான் பெருமை

இழிவற்றவனாக வாழ்வதுதான் பெருமை என்று ஒழுக்கம் விழுப்பம் தரலான் உயிரினும் அதை ஓம்புக என்ற வள்ளுவத்தின் பாதையை நம்மவர்க்குக் காட்டியவர் பெரியார்.

ஏன் ஒருவன் நாத்திகனாக இருக்க வேண்டும். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் உண்டென்று ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? சமுதாயத்தில் பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்ட கடவுள் கருத்தியலை ஏன் மறுத்துரைக்க வேண்டும்? இந்த வினாக்களுக்கு விடைதேடும் நூல் ஏன் நாத்திகம்? என்ற நூலாகும் ஜார்ஜ் எச். இசுமித் எழுதிய இந்நூல் நாத்திகம் எவ்வாறு நம்பகத்தன்மை மிகுந்தது என்று நிலைநாட்டுகிறது. நவீன நாத்திகத்தின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

> நாத்திகம் நம்பத்தகுந்தது என்று நவின்றால் நாத்திகன் சொல்வது சரியென்று ஆகிடும். நாத்திகம் சரியென்று ஆனால் கிறித்துவம் சொல்வது பிழையென ஆகும். கிறித்துவம் சொல்வது பிழை என்றானால் நம்பிக்கை என்பது நல்லறிவு பெறச் சரியான வழிகாட்டியாக விளங்கவில்லை என்றாகிவிடும். நல்லறிவு பெறக் கிறித்துவம் கூறிய ஒவ்வொரு கருத்தும் நெறியும் பகுத்தறிவின் அடிப்படையில் மறு ஆய்வுக்கு உட்படுத்தியாகல் வேண்டும் என்றாகிவிடும். அங்குப் பெரும் குழப்பம் பிறக்கும். எல்லாம் தலைகீழாகிவிடும். தருக்க முறைப்படி விளக்கமும் விடையும் தேடிக் கண்டுபிடித்தாக வேண்டிய நெருக்கடி பிடிக்கும்

என இந்நூலாசிரியர் எழுதுவார். இது பற்றிக் கருத்துக் கூறிய விமர்சகர்கள் அவர் ஆத்திகன் என்ற சொல்லையே பயன்படுத்தி இருக்கலாம். ஆத்திகம் என்பதற்கு மாற்றாகக் கிறித்துவம் என்று குறிப்பிட்ட மதத்தைக் குறிப்பிட்டிருக்கத் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நாத்திகம் எல்லா மத அடிப்படையையும் மறுப்பது. குறிப்பிட்ட மதத்தை மட்டுமே மறுக்கும் குறுகிய நோக்க முடைய தன்று நாத்திகம்.

பெரியார் தனது மேலைநாட்டுப் பயணங்கள் மூலம் கண்டறிந்த உண்மைகளை இவ்வாறு பதிவு செய்வார்.

> எனது மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது பல விழாக்களில் நான் கலந்து கொண்டுள்ளேன். அவர்களது விழாக்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது புதிய படிப்பினை இருக்கும். ஏதாவது முற்போக்குப் பெருக்கத்திற்கான வசதி இருக்கும். ஆனால் இப்போது நமது நாட்டில் எந்த விழாவும் அப்படி இருப்பதில்லை. அறிவுக்கு உணர்ச்சி கொடுக்கும் தன்மையே நமது விழா முறையிலே இல்லை. இங்குப் பெரிய பெரிய உற்சவ விழாக்கள் பல இலட்சக்கணக்கான செலவில் இலட்சக்கணக்கான மக்களைக் கூட்டுவித்து நடைபெற்று வருகின்றன என்றாலும் அவற்றால் அறிவும் நாகரிகமும் மேலும் அந்தகாரத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதே அல்லாது ஒன்றேனும் அறிவு வளர்வதுக்கு நவ நாகரித்துக்கு ஏற்றதாய் அமைந்திருக்கவில்லை

என்று மக்கள் அறிவு பெறத் தடைக்கல்லாக உள்ள விழாக்களைச் சாடும் பெரியார் பொருள் பொதிந்த கேள்வி ஒன்றை எழுப்பினார்.

“ஆயுதத்தை வைத்துப் பூசை செய்வதையே அறியாத வெள்ளையன் துப்பாக்கி முனைக்கு நாம் மண்டியிட வில்லையா?” நெஞ்சைச் சுடும் வினா!

God part of the Brain: Scientific Interpretation of Human spirituality and God என்ற நூல் மாத்யூ ஆல்பர் என்பவரால் எழுதப்பெற்றது. நம் உடற்கூறியல் காரணமாக நம் மூளையின் எந்தப் பகுதியில் மதம் நம்மைப் பிடிக்கிறது என்று மனிதனுக்கு மதம் பிடித்தலையக் காரணத்தைத் தேடும் நூலாகும்.

> கடவுள் என்பது ஒரு சொல். மனித மனதில் உள்ள ஒரு கருத்து. இது மட்டுமே உறுதியாக ஒருவரால் கூற முடியும். மற்ற அனுமானங்கள் இதன் மீது புனையப்பட்டவைகளாகவே உள்ளன. ஆத்திகம் என்பது மக்களின் நடத்தையில் ஒருகூறு. அவ்வளவே என்று விளக்கம் அளிப்பார் மாத்யூ அல்பர். இந்நடத்தை எல்லாப் பண்பாட்டினராலும் பின்பற்றப்பட்டதா? எனில் இல்லை. சமூகத்திற்குச் சமூகம் மாறுபட்டது. எடுத்துக்காட்டாகக் கடவுளோ மதமோ எட்டிப் பார்க்காத ஆப்பிரிக்கப் பழங்குடிகளான பிக்மி Pygme பழங்குடிகளைக் கூறலாம் என்று வில் டூரண்ட் எழுதுவார். எந்தச் சடங்கும் அங்கு இல்லை. பொய்யும் வழுவும் புகுந்ததன் பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்று சடங்கு தோன்றிய விதம் பற்றி விளக்கும் தொல்காப்பியமும் அத்தொல்குடிகளுக்கு இல்லை. எந்தச் சடங்குமின்றி இறந்தோர் புதைக்கப்பட்டனர்.
>
> என்னைப் புதைக்கவோ, எரியூட்டவோ வேண்டாம். எந்த மதமும் என்னைப் பிடிக்கவில்லை. மதம் யானைகளுக்குப் பிடிக்கலாம். மனிதனாகிய எனக்குப் பிடிப்பதில்லை. எச்சாதியும் என்னைத் தன்சாதி என்றிடச் சவக்கூடமோ சுடுகாடோ காரணமாகிடல் கூடாது. எனவே என்னை நடுக்கடலில் தூக்கி எறியுங்கள். கடல் கொண்ட பழந்தமிழகத்துக்கு என் எலும்புக்கூடு பயணிக்கட்டும். மீனினம் என் மேனிச் சதை உண்டு மகிழட்டும்

என அடிக்கடி நான் கூறுவதுண்டு. சடங்குககள் அற்ற ஆப்பிரிக்கப் பழங்குடிகள் பற்றி அறிந்த போது வியந்து போனேன்.

கடவுள் என்ற சொல்லை விட “மனித மூளையின் ஓரிடத்தில் பதுங்கியுள்ள கற்பனை” என்ற சொல்லைக் கையாள்வதே பொருத்தம் என்பார் மாத்யூ ஆல்பர்.

The Impossibility of God என்ற நூல் கடவுள் இருப்பதற்கான வாய்ப்பே இல்லை என நிறுவுகிறது. மைக்கேல் மார்டினும் ரிக்கி மோனியரும் கூட்டாக எழுதிய நூல் இதுவாகும். பரம்பரை பரம்பரையாகக் கடவுள் இருப்பதாக நம்புவோரின் நம்பிக்கையைத் தகர்க்கக் கூடிய ஏராளமான வாதங்கள் முன் மொழியப்பட்டுள்ளன. அவற்றை உள்வாங்கிக் கொண்டால் மேற்குலக மக்கள் நம்பும் எந்தக் கடவுளும் இருந்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்று தெளிவளிக்கும் நூல் இது. பல்வேறு தத்துவ மேதையரின் கருத்துக்கள் இதற்கு முன்பு கேட்டறியா படித்தறியா வாதங்களின் தொகுப்பாக 400 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 32 சாட்சியங்கள் கடவுளை மறுக்கின்றன. கடவுளின் பொய்மையைப் புலப்படுத்துகின்றன. கிறித்துவம் கூறும் கடவுள் தன்மைக்கும் ஏடன் தோட்டத்து ஆதாம் ஏவாள் கதைக்குமுள்ள முரண்பாடுகளை வெளிச்சமிடுகிறது இந்நூல் . நல்லது எது கெட்டது எதுவென அறிவுபுகட்டும் மரத்தின் பழத்தைக் கடவுளின் கட்டளைக்கு மாறாக பறித்து உண்ட ஆதாமும் ஏவாளும் ஏடன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப் பட்டார்கள்.

அந்தப் பழத்தை உண்ணும் முன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நல்லது எது கெட்டது எது என்று தெரியாதே! தெரியாத போது அவர்கள் செய்தது தவறாகுமா? அதற்காக அவர்களைத் தண்டிக்கலாமா? என்ற பொருள் பொதிந்த வினாவை இந்நூல் எழுப்புகிறது. இது போல் பல வினாக்கள், படிக்கப் படிக்கச் சுவையூட்டி அறிவு கூட்டும் நூலாக மிளிர்கிறது.

> இலக்கியமென்று பாராட்டப் படுகின்றவற்றில் உள்ள குறைகளையும் மூடநம்பிக்கைகளையும் ஒழுக்கக் கேடுகளையும் தாராளமாக எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. இதுதான் நமது புலவர்களின் இலக்கியத் தொண்டாக இருக்க வேண்டும்

என்று இலக்கணம் வகுத்தவர் பெரியார். ஆனால் நடைமுறையில் சந்திரசேகரப் பாவலர் போல இங்குப் புலவர்கள் இல்லை. இருந்த புலவர்களிடமும் ஆராய்ச்சி மனப்பான்மை இல்லை. மேலை நாட்டு நூல்கள் எழுப்பிய வினாக்கள் போல் இங்கு எழுப்பிடும் நுண்மாண் நுழைபுலம் பெற்றிருந்தும் வாய்மூடி மௌனிகளாகப் பழமைக்குப் பல்லக்குத் தூக்கிகளாக இருந்தார்கள்.

> நாட்டில் மக்களைத் திருத்தத் தகுதி உடையவர்கள் புலவர்கள் தான். நமது புலமை எல்லாம் சோற்றுக்கு அல்ல மக்களைத் திருத்த என்று கருதித் தொண்டாற்ற வேண்டும். புலவர்களாலே தான் நாடு திருத்தப்பாடு அடைய முடியாமல் போய்விட்டது

என்று தமிழகம் தாழ்ந்ததற்கு அறிவாளிகளின் மௌனமே காரணமெனப் பெரியார் சொல்வார். ஏ! தாழ்ந்த தமிழகமே! எனத் தமிழகத்தை எழுப்பிட இதனால் தான் நாடெங்கும் முழுங்கினார் நல்லறிஞர் நம் அண்ணா!

God's Defenders: what they beleive and why they are wrong என்ற நூல் கடவுளுக்காக வாதமிடுபவர்களையும் அவர்கள் வாதத்தில் உள்ள ஓட்டைகளையும் மக்கள் முன் வைக்கிறது. எஸ்.டி. ஜோஷி என்ற இந்தியர் எழுதியது இந்நூல். கடவுளுக்காக வாதமிடுவர்களில் வில்லியம் லேன் கிரெய்க் (William Lane Gaig) நல்ல திறமைசாலி. நன்கு வாதிடுகிறார். ஆனால் அவர் புகழ்பெற்றவர் அல்ல. எனவே மக்களிடையே நன்கு அறிமுகமான வில்லியம் ஜேம்சு, ஜி.கே. செஸ்டர்டன், டி. எஸ். எலியட், சி. எஸ். லெவிஸ், வில்லியம் எஃப் பக்லிஜினியர், சிசுபீபன், எல் சார்ட்டர், ரெவரண்ட் ஜெர்ரி ஃபால்வெல், ரெய்னால்ட் பிரைஸ், அன்னி டில்லார்டு, எலிசபத் குப்ளர்-ராஸ்,நியேல் டொனால்டு வால்டி, மற்றும் கந்தர் லெவி என்ற கடவுளின் வழக்கறிஞர்களின் வாதங்களைத் தயவு தாட்சண்யமின்றித் தகர்த்து எறிந்து விமரிசிக்கிறது ஜோஷியன் ஆய்வு நூல். இத்தகு ஆய்வு நோக்கு அருகிவிட்ட தமிழ்நாட்டில் பெரியார் இயக்கமே ஆய்வு நடத்திய அறிவியக்கமாக மிளிர்கிறது.

> நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும் ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங்களையும் பிரத்தியட்ச அனுபவத்திற்குச் சம்மந்தப் படுத்தப்பட முடியாத கலை காவியங்களையும் படித்து, உருப்போட்டு அவைகளில் இருப்பவைகளை மனதில் பதிய வைத்துக் கொண்டு இருப்பதோடல்லாமல் அவைகளில் சம்மந்தப்பட்ட கதை கற்பனைகள் உண்மையாக நடந்தவை என்றும் நம்பிக் கொண்டிருப்பார்கள் ஆவார்கள்!

என்று பெரியார் சொன்னார். புளுகு மூட்டைகளை , புனைகதைகளை மெய்யென நம்பி மயங்கி மனப்பாட மாமணிகளாய் அரைத்த மாவையே எல்லாவிடத்தும் அரைத்துப் பன்நூல் படித்துக் கரைத்துக் குடித்து அறிவாளியாகி விட்டதாகத் தம்மைத்தாமே முதுகில் தட்டிப் பாராட்டும் கூட்டம் பகுத்தறிவற்ற சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் மாறிடக் காரணமான குற்றவாளிக் கூட்டமென்றால் மிகையல்ல.

Free Thinkers: A History of American Secularism என்ற நூல் சூசன் ஜேக்கோபி எழுதிய நூலாகும். சுதந்திரச் சிந்தனையாளர்களும் மதச்சார்பின்மைக் கோட்பாடும் அமெரிக்க சமூகத்தின் மீதும் பண்பாட்டின் மீதும் வரலாற்றின் மீதும் அரசியல் மீதும் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய அரிய நூலாகும் இந்நூல்.

மதம் என்பது பழமையின் இருப்பிடம். பலதலைமுறைகள் வாழ்ந்த முன்னோரின் மூடநம்பிக்கைகள், மதிப்பீடுகள், நெறி முறைகள், பழக்கவழக்கங்களின் பாதுகாப்புப் பெட்டகம் மதம். சமுதாயக் குழப்பங்கள் மிகும்போது மதம் நங்கூரம் போன்று செயல்பட்டு அலை அடிக்கும் கடலிடையே கலம் நிறுத்துவது போல் உறுதியற்ற தன்மை ஒட்டி நிலை நாட்டக் கூட முடியும். அதே வேளையில் அந்தப் பழைய மதிப்பீடுகளும் சுமைகளும் எதிர்கால முன்னேற்றத்துக்கு எவ்வாறு தடையாக விளங்கியன? அதனைச் சுதந்திரச் சிந்தனையாளர்கள் எவ்வாறு எதிர்கொண்டனர் என அமெரிக்க வரலாற்றின் சுவைமிகு பகுதிக்கு நம்மை இந்நூல் இட்டுச்செல்கிறது.

அமெரிக்க வரலாற்றில் எல்லா மனிதர்க்கும் சம உரிமையும் விடுதலையும் வேண்டி நடந்த போரில் அதன் விளைவாக முகிழ்த்த சீர்திருத்தத்தில் முனைந்துழைத்த முன்னோடிகள் பலர் மதமே முன்னேற்றத்துக்குத் தடைக்கல்லாய் விளங்குவதாகச் சொன்னார்கள். சொன்னதன் விளைவாக அவர்கள் வரலாறு இருட்டடிப்புக்கு ஆளானது பற்றிச் சூசன் அம்மையார் இந்நூலில் பதிவு செய்துள்ளார். இன்றளவும் இருட்டிப்பு பலநாடுகளில் நீடிப்பதால் பெரியார் வரலாறும் வாழ்வும் உலகெங்கும் கொண்டு செல்லப் படவில்லை.

Meditations for the humanist: Ethics for a Secular Age என்ற நூல் ஏ.சி. கிரேலிங் அவர்களால் எழுதப்பெற்றது. கேள்விகள் எழுப்பி வாழ்வின் பொருளைத் தேடாத வாழ்வு வாழ்வன்று என்பது அறிஞர் சாக்ரட்டீசின் கருத்தாகும். இதனையே வழிகாட்டும் நெறியெனக் கொண்டு ஏ.சி. கிரேலிங் மனித வாழ்வின் பல்வேறு கூறுகளைக் கேள்விகளுக்கு உட்படுத்திப் படிப்பவர். சிந்தனையைக் கிளறி விட்டவர். மதக் கோட்பாட்டுக்கு மாற்றாக மனித நேயத்தை முன் நிறுத்தியவர் இந்நூலாசிரியர்.

> மனிதன் என்பதற்கே பொருள் விசயங்களை ஆராய்ந்து பார்த்து நன்மை தீமை என்பதை உணர்ந்து சகல துறைகளிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைகிற தன்மை உடையவன் என்பார் பெரியார். சிந்திக்க வைத்தார். சீர்திருத்தங்கள் செய்தார். அவர் மறைந்ததும் அவர் பணி நின்றுவிடாமல் தொடர உழைத்திடுதல் நம் கடமை அன்றோ!

Can we be good without god? Biology, Behaviour and need to believe என்ற நூல் கிராபர்ட்ட புக்மேன் அவர்களால் எழுதப்பட்டது.

மனித வரலாற்றில் பொது ஒழுக்கம் மதங்களால் தான் நிலைநாட்டப்படுவதாக கருத்து நிலவுகிறது. ஏதாவதொரு கடவுளை ஏற்றுக் கொள்ளாதவன், எந்தவொரு மத நம்பிக்கைக்கும் இடமளிக்காதவன் நல்ல மனிதனாக இருக்க முடியாது என மக்கள் வாதமிட்டனர். நாத்திகரான புக்மேன் கடவுள் பற்றிக் கவலைப்படவில்லை. நம் உடலில் மூளையில் உதிக்கும் நம்பிக்கைகள், அவற்றை நாம் நம்புவதன் காரணங்கள், நம்பியதால் நன்னடத்தையாக அவற்றை மாற்றிக் கொள்ளத் தூண்டும் நம் சிந்தனை ஓட்டம் இவை பற்றிய விரிவான ஆய்வு நூலாக இந்நூல் விரிவடையும்.

பகுத்தறிவுப் படைப்புகள் பலவுள. அவற்றை நாம் பார்த்தது மில்லை. படித்ததுமில்லை. இங்கு மட்டுமல்ல மேலைநாடுகளில் கூட இந்நூல்கள் மக்களிடையே சென்றடையப் பரப்புரைகள் நடக்கின்றன. அமெரிக்கப் பொது நூலகங்களில் நாத்திக எழுத்தாளர் படைப்புகள் இடம் பெற இயக்கமே நடந்தது.

அறிஞர் பெட்ரண்ட் ரசல் எழுதிய Why I am not a Christian? நூலும் டாவ்கின்சு எழுதிய The God Delusion நூலும் மிகப் பேரளவில் புகழ் பெற்றவை. உலகெங்கும் பரவியவை. அந்நூல் போல் Collected works of Periyar என ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டு உலகெங்கும் பரப்புரை செய்தாலொழிய பெரியாரின் பெருந்தொண்டைப் புவியறியாது! பிற நாட்டார் செவி அறியாது! உலகப் பகுத்தறிவாளர் நூல்களை நாம் உள்வாங்கினால் தான் பெரியார் கருத்தின் வலிமை நமக்குப் புரியும். ஒப்பீடுகள் உதித்தால்தான் இங்குள்ள மனமயக்கம் அகலும். மாபெரும் மனித நேயப் போராளிகளை ஈன்றெடுத்த தமிழ்மண் அந்தப் போராளிகளின் புகழை உலக அரங்கில் நிலைநாட்ட ஒன்றுமே செய்யாமல் உறங்குவதா?

பெரியாருக்கு முன்னும் பின்னும்



பகுத்தறிவு நீரோட்டம் எல்லாக் காலங்களிலும் இருந்துள்ளது. மக்கள் சிந்தனைகளில் பாய்ந்துள்ளது. அதனால் புதிய சிந்தனைப் புரட்சிகள் நடந்துள்ளன. பெரியாருக்குப் பின்பும் ஓடும் இந்நீரோட்டம். பெரியாருக்கு முன்பிருந்தே பாய்ந்து அறிவுக்கு வளமூட்டும்! வழிகாட்டும்.

இந்தியத் தத்துவங்களின் உள்ளடக்கம் பற்றிக் கவிஞர் அரவிந்தர் ஒரு வரியில் சொன்னார்.

> இறப்புக்கு முன் எவ்வாறு இருந்தோம். இறப்புக்குப் பின் என்ன நிகழ்கிறது? இந்த இரண்டு வினாக்களுக்கு விடை தேடுவதே நவீன தத்துவம்

என்பது அவர் கருத்து.

இந்திய முதல் பிரதமர் சவகர்லால் நேரு தானெழுதிய Discovery of India நூலில் (பக். 86)

> வாழ்க்கை நோக்கம் பற்றிய தேடலும் எல்லாப் படைப்புகளின் விதிகள் பற்றிய ஆழ்ந்தகன்ற ஆய்வும், முரண்பாடுகளின் இருப்பிடமான வாழ்க்கையின் ஒற்றுமைக்கூறுகள் பற்றிய புரிதலைக் கண்டெடுப்பதும் தத்துவத்தின் நோக்கமாகும் பயனுமாகும்

என விளக்கவுரை நல்குவார்.

பெரியார் பிறந்த மண்ணில் கிறித்துவுக்கு முன் 5 ஆம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி. 4 ஆம் நூற்றாண்டு வரை உபநிடதங்கள் என்ற இலக்கிய வடிவம் மெள்ள மெள்ள மாற்றமடைந்து சூத்திரங்களாகச் சுருங்கிய காலக்கட்டம் ஆயிரமாண்டுகளாகும். இந்த ஆயிரமாண்டுகளாகப் பகுத்தறிவின் பிழிவை ஒரு சொல், ஒரு சொற்றொடர், ஒரு குறுஞ்செய்தி என்று எழுதிடும் மரபு மலர்ந்தது. தொல்காப்பிய நூற்பா தோன்றிய காலம் நம் கண்முன் விரிகிறது. குறள் சொல்லும் வாழ்வியல் தத்துவங்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன. "சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் நவின்றோர்க் கினிமை, நன்மொழி உணர்த்தல்" என்று நன்னூல் பாயிரத்தில் பவணந்தியார் கூறுவதுபோல் இந்தியாவெங்கும் சூத்திரங்கள் மூலம் மனித வாழ்வின் சூட்சுமங்களைச் சொன்ன காலமென Indian Philosophy in Modern Times நூலாசிரியரும் உருசிய அறிஞருமான வீ. பிராடோவ் (V. Brodov) கூறுவார்.

4 ஆம் நூற்றாண்டுக்கும் 11 ஆம் நூற்றாண்டுக்கும் இடையே இந்தியாவின் எந்தத் தத்துவ வித்தகரும் தாம் புதியதோர் தத்துவப் பிரிவை உருவாக்கி விட்டதாக மார்தட்டிக் கொள்ளவில்லை. முந்துநூலார் தந்துதவிய நூற்பாக்களுக்கு விரிவுரையும் விளக்கவுரையும் பகன்றதே அவர்தம் பணியெனத் தன்னடக்கமுடன் கூறிக் கொள்வர்.

காலஞ்செல்லச் செல்ல இந்த நூற்பாக்களைத் தொகுப்பதும் எளிய்முறையில் மக்களிடம் கொண்டு செல்வதுமான பணி துவங்கிற்று. தத்துவ விளக்கம் பல அளிக்கப்பட, இவற்றுள் ஒன்பான் பிரிவுகள் ஓங்கி வளர்ந்தன. அவற்றுள் முதலிடம் பெறுவது சாருவாக உலோகாயதமாகும். சமணம், பௌத்தம், வேதாந்தம், மீமாம்சம், சாம்கியம், நயாயா, வைசேசிகம், யோகம் என்ற பிரிவுகளும் வளர்ந்தன.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்". மூவாயிரம் ஆண்டு முன்பு நம் திருமூலர் எழுதிய திருமந்திர நூற்பா பகுத்தறிவுக்கு விளக்கமாக திகழ்கிறது. இதைவிட அழகாக இறப்புக்குப் பின் ஆத்மா சொர்க்கம்/ நகரம் போகக் கடவுச் சீட்டுப் பெற்று வானூர்திக்குக் காத்திருக்கும் என்ற பொய்யை அடித்து நொறுக்கும் சொற்றொடரை எழுதிடல் எளிதல்ல. மறுபிறப்புக்கு மரண அடி கொடுத்து மரணத்துடன் முற்றுப்பெறும் மனித வாழ்வைத் திருமூலர் விளக்குவார். பெரியார் கொள்கைகள் பிறந்த இடம் இதுபோன்ற அழகுதமிழ் நூற்பாக்களில்தான்!

சாருவாகச் சிந்தனையாளர்கள் கடவுளை மறுத்தவர்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று இவற்றின் கூட்டுறவால் விளைந்தவையே

உயிரினங்கள் யாவும் என உறுதிப்பட நம்பியவர்கள். 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அஜித கேசம்பாலின் என்ற சாருவாகச் சிந்தனையாளர்

> அறிவாளியும் முட்டாளும் உடம்போடு அழிகிறார்கள். இருவருமே இறந்த பிறகு இறப்புக்குப் பின் எதுவுமில்லை என்று முழங்குவார்.

சவகர்லால் நேரு இக்காலக் கட்டம் பற்றிக் கூறுகையில்

> பொருள் முதல்வாதிகள் சிந்தனையில், மதத்தில், தத்துவத்தில் ஆதிக்கச் சக்திகளின் மேலாண்மைக்கே சவாலாக விளங்கினார்கள். வேதங்களை மறுத்தார்கள், நாசாரித்தனத்தை எதிர்த்துப் போராடினார்கள். பழம் நம்பிக்கைகள் என்பதாலேயே எந்நாளும் ஏற்க முடியாது என்று எதிர்ப்புக்குரல் எழுப்பினார்கள். மந்திர தந்திரங்களையும் மூட நம்பிக்கைகளையும் சாடினார்கள். தற்காலப் பொருள் முதல்வாதிகளோடு ஒப்ப வைத்து மதிப்பீடு செய்யுமளவு அவர்தம் போக்கு இருந்தது. பழமை என்னும் சங்கிலிகளை அறுத்துச் சுதந்திரச் சிந்தனைகளைச் சுவாசிக்க விரும்பினார்கள். புரியாத புதிர்களுக்குப் பொய்யான விளக்கங்கள் புகல்வதை எதிர்த்தார்கள். கற்பனைக் கடவுளரைக் கைதொழ மறுத்தார்கள்

என நேரு அந்நாளைய சாருவாகச் சிந்தனையாளர்களைக் கூறுவது நம் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறை பற்றிக் கூறுவது போலத் தோன்ற வில்லையா?

சாருவாகம் என்பது நான்கு சொற்கள் என்று பொருள்படும். "நெருப்பு, நிலம், நீர், காற்று என்ற 4 சொற்களைச் சுட்டுவது இத்தத்துவப் பிரிவின் பெயர்ப் பிறப்பு. சொற்பிறப்பியலாகும்.

தத்துவமேதை டாக்டர் எசு. இராதாகிருட்டினன் அழகுற விளக்குவார்.

> வாழ்க்கை உங்களுடையதே! மகிழ்வுடன் வாழுங்கள்
> சாவின் கண்களில் இருந்து எவரும் தப்பியலாது
> நம்முடைய உடற்கூட்டை எரியூட்டி அழித்தபின்
> எவ்வாறு நாம் திரும்ப அதற்குள் வர முடியும்?

என்று கவிதை நடையில் சாருவாகச் சிந்தனைகளைப் படம் பிடிப்பார்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகச் சக்தி எதுவுமில்லை. ஏழைகளை ஏய்த்துப் பிழைக்கச் செல்வர் செய்து கொண்ட கற்பனையே கடவுளாகும். கற்பனையாகப் புனையப்பட்ட கடவுளரை வழிபட வைத்து ஏழைகளின் நேரத்தையும் நினைப்பையும் திசை திருப்பிக் கண்ணுக்குத் தெரியாத சக்திகளுக்குக் காணிக்கைகள் செலுத்த வைத்து மதபோதகர் போதனைகளை உள்வாங்கி மயங்கிக் கிடக்கச் செய்வதே எல்லா மதங்களின் நோக்கமென நுவல்வது சாருவாகமாகும்.

பெரியார் குரல் பெரியார் பிறக்கும் முன்பு பல்லாயிரமாண்டுகள் முன்பே ஓங்கி ஒலித்துள்ளதை நீங்கள் செவி மடுத்ததில்லையா! பெரியாரை வசைபாடிய வன்கணாளர்கள் மறந்தனரோ வரலாற்றை! மறைத்தனரோ சாருவாகச் சிந்தனையார் கூற்றை!

எந்நாளும் அறிவில்லா ஆத்மாவுக்கே விழிப்புணர்வு தனியுரிமை என்ற மதவியலார் கருத்தாக்கத்தைச் சாருவாகிகள் ஏற்கவில்லை. விழிப்புணர்வு மனிதன் இறந்ததும் முடிந்து விடுகிறது. மனிதன் தன் மூலக் கூறுகளாகிய நிலம், நீர், நெருப்பு, காற்றெனச் சிதறிவிடுகின்றான். இந்நான்கு கூறுகளால் ஆக்கப்பட்டவனே மனிதன். இறந்ததும் இக்கூறுகள் பிரிந்து விடுகின்றன.

பெரியாருக்கு முன்பிருந்த பகுத்தறிவு நீரோட்டத்தில் இத்தகு கேள்விகள் இந்தியாவிலேயே எழுப்பட்டுள்ளன.

> மனிதனை மடையனாக்கியது மதம். எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் அந்த மதமானது கடவுளால், கடவுள் தூதரால், கடவுள் குழந்தையால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதாகத்தான் இருக்கிறது. எல்லாம் வல்லவராகக் கடவுள் இருக்கும் போது அவரே ஒரு மதத்தை உண்டாக்கி இருக்கலாமே? எதற்காகத் தூதரை அனுப்ப வேண்டும்?

என்பது பெரியார் எழுப்பிய பொருள் பொதிந்த வினாக்களில் ஒரு வினாவாகும்.

> மதம் மக்களை ஒன்றுபடுத்த மக்களின் நன்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் எல்லா மக்களுக்கும் ஒரே மதந்தானே இருக்க வேண்டும். பல மதங்கள் இருக்கக் காரணம் என்ன? ஒரு மதத்தைச் சார்ந்தவர் இன்னொரு மதத்தாரை வெறுக்கவும் இழிவு படுத்தவும் காரணம் என்ன?

என்ற மற்றொரு கேள்வியும் உங்கள் சிந்தனையைக் குடையட்டும். பெரியாரின் கூரிய அறிவால் தோலுரித்துக் காட்டப்பட்ட மதங்களை உணருங்கள்!

> மதம் இன்றுவரை வெறியை ஊட்ட, வெறுப்பை ஊட்டப் பயன்பட்டு வந்திருக்கிறதே ஒழிய யாரையும் சீர்திருத்தப் பயன்படவில்லையே! காந்தியார் போதித்த அன்பும் அகிம்சையும் தவைக்குதவானவாகப் போய் விட்டனவே

என்று பெரியார் மதங்களைப் பற்றிச் சொல்வது உண்மையெனத் தற்கால நிகழ்வுகளும் மெய்ப்பித்து நிற்கின்றன.

The End of Faith: Religion, Terror and the Future of Reason என்ற நூலை San Harris எழுதினார். இந்நூல் பற்றி எனக்குச் சொன்னவர் என் இணைய வழி எழுத்துக்களைப் படித்த நியூசிலாந்து பெண்மணி திருமதி ஹீதர் தெனிதேனி ஆவார். சாம் ஆரிசு அமெரிக்க அரசியலை விமரிசித்தார். அந்நூலின் முடிபாகப் பிரச்சினைகளுக்கு மதம் தீர்வல்ல, மதமேதான் பிரச்சினைகளுக்குக் காரணமென அவர் நிறுவுகிறார். பழங்கால மத நூற்கள் அடிப்படையில் 21 ஆம் நூற்றாண்டில் நம் அரசுகள் கொள்கைகளை வகுக்கக்கூடாது என அவர் வாதமிடுகிறார். உலகம் தட்டை என்று சொல்லப்பட்ட காலத்திய நூல்கள் இந்த அறிவியல் காலத்துக்குப் பொருத்தம் உடையன அல்ல. மத நூல்கள் ஊட்டும் வெறிக்கு ஆயிரம் சான்றுகள் பகர முடியும். எல்லாச் சான்றையும் விட நான் தரப் போகும் சான்று அறிவுலகை அதிரச் செய்யும்.

சௌதி அரேபியாவில் உள்ள இமாம் முகம்மது இபின் சௌத் இசுலாமியப் பல்கலைக்கழகத்தின் சையத் இபின் நாசர் அல்காமிதி 2000 ஆம் ஆண்டில் முனைவர் பட்ட ஆய்வேடு அளித்தார். அது நூல் வடிவில் 2003இல் Deviation from faith as reflected in (Arab) Thought and literature on Modernity என்ற தலைப்பில் இடம் பெற்றது. அதில் மதச்சார்பற்ற 200 இசுலாமிய அறிஞர்களை மதவிரோதிகளாக அவர் படம் பிடிப்பார். இதனால் அவர்கள் கொல்லப்படத் தக்கவர்கள் பட்டியலில் தீவிரவாதிகளுக்குத் தென்படுவார்கள். இதைக் கண்டித்து ஜோர்டான் - அமெரிக்கச் சீர்திருத்தச் சிந்தனையாளர் டாக்டர் சாக்கர் அல் நபுல்சி சௌதி அரேபிய மன்னர் அப்துல்லா இபின் அபித் அல் அசீஸ் அவர்களுக்குத் திறந்த மடல் எழுதினார்.

> இது தீவிரமான பிரச்சினை. பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கே இதனால் களங்கம் உண்டாகிவிட்டது. தீவிரவாதிகள் முனைவர் பட்டம் ஆய்வேடு மூலம் புரட்சிகரச் சிந்தனை உடைய அறிஞர்களை அவர்கள் இசுலாமியராக இருந்த போதும் வெறுப்பை உமிழ்ந்து உள்ளனர்

என்று பதிவு செய்தார்.

எகிப்திய அறிஞர் நகுயிப் மாபௌஸ், சிரிய எழுத்தாளர் அதோனிஸ், எகிப்திய எழுத்தாளர் அசான் அனாஃபி, எகிப்திய நூலாசிரியர் ஜாஃபர் அசௌர், சிரியமொழிக் கவிஞர் நிசார் கஃப்பானி, பாலத்தீனக் கவிஞர் முகம்மது தார்விஷ், இராக்கியக் கவிஞர் பதர் சகீர் அல் சய்யாப், எகிப்தியக் கவிஞர் அமல் தன்கல், லிபியக் கவிஞர் முகம்மது அல்ஃபைதூரி, ஏமன் நாட்டுக் கவிஞர் அபித் அல் அசீஸ் அல் மக்காலி, சௌதி அரேபிய அறிஞர் அப்துல் அல் கதாமி, மொரோக்கோ நாட்டு நூலாசிரியர் முகம்மது சௌக்ரி என்று சுமார் 200 இசுலாமிய அறிஞர்கள் மதச்சார்பின்மைக்கு ஆதரவாக மதவெறிக்கு எதிராக நின்றதால் முனைவர் பட்ட ஆய்வேட்டில் ஒழித்துக் கட்டப்பட வேண்டியவர்கள் பட்டியலில் இடம் பெற்று ஆய்வேடு அளித்தவர் டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார். மதவெறி மடியவில்லை என்பது இதனால் உறுதி பெறுகிறது. மதங்களுக்கு எதிரான பகுத்தறிவியக்கமே இக்காலத்தும் தேவைப்படுவதை இதுபோன்ற முயற்சிகள் உறுதி செய்கின்றன.

> எவனொருவன் பண்டைக் காலத்தில் உள்ள வாழ்க்கையையே மேற்கொண்டு காலமாறுதலுக்கு ஏற்றாற்போல் தன் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவில்லையோ அவனுக்கும் மற்ற மிருகங்களுக்கும் ஒன்றும் வித்தியாசமில்லை. தொன்று தொட்டுக் கையாண்டு வருவதையும் இதுதான் என் மதத்தின் வழக்கம், சாத்திரத்தின் விதி என்ற அநாகரிக ஆபாசங்களைக் கடைப்பிடிப்பவனையுமே பகுத்தறிவு இல்லாச் சீவனுக்கு ஒப்பிடலாம்

என்று பெரியார் சாடுவார். நம் மக்களுக்குப் பெரியார் விடுக்கும் செய்தி நெஞ்சில் பதிக்கத் தக்கது.

> காலம் வளர வளர உலக மக்களின் அறிவு வளர்ச்சியடைந்து கொண்டு போகையில் நம் மக்களின் அறிவு பின்நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதே ஒழிய முன்னோக்கிச் செல்வதாக இல்லை. புதுமைக்கு நம் மக்களைத் திருப்ப வேண்டும். புதுமைகளை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் பழமையை கைவிட்டு காலத்திற்கேற்ப முன்னோக்கிச் செல்ல வேண்டும். கி.மு. 2000 ஆண்டுகளுக்குக் முன்னர் இருந்தவர்களைப் போல இருக்கக்கூடாது

பெரியார் முன்யோசனையுடன் முன்மொழிந்த முன்னேற்றம் காண முன் வைத்த காலைப் பின் வையாதீர்!

அறிவு ஆசான் பெரியாரை அகிலமறியச் செய்க!



கடவுளரை ஏற்காத நாத்திகர்கள் மிகுந்துள்ள நாடுகள் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. அமைதிப் பூங்காவாகத் திகழும் நாடுகள் பட்டியலில் நியூசிலாந்து நாடு முதலிடம் வகிக்கிறது. அமெரிக்கா பெற்றிருப்பது 83 வது இடம் என்பதும் நமக்கு வியப்பூட்டும் செய்தியாகும். 23 அளவுகோல்களை வைத்துக் கொண்டு உலகின் அமைதியான நாடுகளைத் தரவரிசைப்படுத்தினார்கள். அயல்நாட்டுடன் போர், உள்நாட்டுக் குழப்பங்கள், மனித உரிமைகள், கொலைகள், சிறைப்பட்டோர் எண்ணிக்கை, மக்களாட்சி என்று 23 அளவுகோல்களில் உலக நாடுகளை ஒப்பிட்டு ஆய்வு நடத்தினார்கள். பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் (Institute for Economics and Peace) இந்த ஆய்வை நடத்தியது.

ஆய்வில் வெளிப்பட்ட ஆச்சரியமான தகவல் ஒன்று உண்டு. மக்கள் தொகையில் பெரும்பாலோர் நாத்திகர்களாகவும் தேவாலயங்களுக்குச் செல்வோர் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும் நாடுகள் அமைதி நாடுகள் பட்டியலில் முதலிடம் பெற்றன. (Media with conscience) மனச்சாட்சியுள்ள ஊடகம் என்ற இணைய ஏடு இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

நம்நாடு பழமையின் பாதுகாப்பகம். நாத்திகம் என்றாலே அலறுவோர் நம்மிடையே உண்டு. மனிதனாகப் பிறந்தவர்களின் இலட்சியத்தைப் பெரியார் இப்படி விளக்குவார்.

> ஒவ்வொரு மனிதனின் இலட்சியமும் தான் மனிதனாகப் பிறந்த மனிதச் சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்காக என்றிருக்க வேண்டும். புதுமைக்கு மக்களைத் திருப்ப வேண்டும். புதுமைகளை மக்கள் உணரும்படிச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் பழமையை விட்டுக் காலத்திற்கேற்ப முன்னோக்கிச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் நாமும் மற்ற உலக மக்களைப் போல் சிறப்பாக வாழ முடியும்.

புதுமைகள் உருவாகியபடி உள்ளன. இயேசு பிறந்ததை அடிப்படையாக வைத்துக் கிறித்துவுக்கு முன், பி.சி. கிறித்துவுக்குப்பின் ஏ.டி. என்ற ஆண்டுக் கணக்கை நாம் பின்பற்றி வருகிறோம் அல்லவா! அதற்கும் எதிர்ப்பு எழுந்து விட்டது. அனைத்து மதமும் மதமற்றோரும் ஏற்றுக் கொள்ளும் மதச்சார்பற்ற ஆண்டு வேண்டும் என்ற வேணவா மேலை நாட்டில் முகிழ்த்துள்ளது. பி.சி. என்பதைப் பி.சி.இ. என்று அழைக்கத் தலைப்பட்டுள்ளனர். Before common Era. அனைவர்க்கும் பொதுவான யுகத்துக்கு முன்பாக என்று பொருள்படும் சொற்றொடரை வழங்கி வருகின்றனர். நாம் வாழும் காலத்தை CE: Common Era அனைவர்க்கும் பொதுவான காலம் என்று பொருத்தமுடன் அழைக்கிறார்கள்.

> இந்த நாட்டில் மனிதன் மற்றொரு மனிதனால் எவ்வளவு இழிவாகக் கருதப்படுகிறான் என்பதை ஒரு மனிதன் உணருவானாகில் அவனுக்குக் கடுகளவு சுயமரியாதை யாவது இருக்குமானால் அவன் மனித இழிவைப் போக்கத்தான் முதலில் பாடுபடுவான்

என்று தந்தை பெரியார் எழுதுவார்.

டாக்டர் அம்பேத்கார் எழுதிய சூத்திரர் வரலாற்றையும் தாழ்த்தப்பட்டோர் வரலாற்றையும் படிக்காமலும் நம் நிலையை நாமுணராமலும் பெரியார் வாணாள் எல்லாம் செய்த பரப்புரைகள் பற்றிச் சிந்திக்காமலும் நாமுள்ளோம்! உலகில் வேறெங்கும் இல்லாத சாதியச் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கிறோம்.

உலகைப் பெரியார் அறிவார். உலகைப் பகுத்தறிவுக் கண் கொண்டு உற்று நோக்கிய பெரியாரை உலகினர் அறிவாரோ? அறியச் செய்ய என்ன செய்தோம்! உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தின் போக்கையும் நோக்கிப் பெரியார் முன்னோடி என நிறுவவும் உள்ளோம்!

Amazon.com இணையத் தளம் உலகப் புகழ் பெற்ற நூல் அங்காடி ஆகும். The Dravidian Movement in Tamilnadu and its legacy என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெரியார் ஈ.வெ.இராமசாமி அறக்கட்டளைப் பொழிவு திரு. ஏ.என். சட்டநாதன் ஆற்றிய உரைகள் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ளன. 1982இல் வெளியான அந்நூல் இருப்பில் இல்லை என்ற தகவலும் உள்ளது. மறுபதிப்பு கொண்டு வருமாறு நினைவூட்டல் நம் கடனாகும்.

Academic dictionaries and encylopeadias என அகராதிகள் மற்றும் கலைக்களஞ்சியங்கள் பிரிவில் http://dic.academic.ru என்ற இணையப் பதிவில் புகழ்பெற்ற பகுத்தறிவாளர் பட்டியல் தரப்பட்டுள்ளது. அகர வரிசைப்படி ஆபிரகாம் கோவூர், ஆல்பர்ட் எய்ன்சுடீன், அலி தசுதி, அனெக்சகோரசு, அரிசுடாடில், பார்பரா இசுமோக்கர், பெஞ்சமின் பிராங்க்ளின், பெட்ரண்டு ரசல், பில் மகர், சார்லசு டார்வின், கோலின் பிளேக்மோர், டேவிட் டிரைப், டெமோகிரிடசு, எபிகுரசு, கலிலியோ கலிலி, கேரி சுவார்ட்சு, ழீனி ரோடன்பரி, கிரகோர் மென்டல், எலனாகுரோனின், என்ரி மோர்சென் டேலர், எர்மன் போண்டி, அய்சாக் அசிமோவ், அய்சக் நியூட்டன், ஜேம்சு ரண்டி, ஜிம் எரிக், ஜோசப் இடமருகு, ஜீலியன் எக்சுலி, கி. வீரமணி, கார்ல் பாப்பர், லூயிஸ் வோல்பெர்ட், நிகோலசு மேல்பிரான்ச், நிகோலசு பிளாட்டோ, பிரபீர் கோஷ், ரிச்சர்டு டாக்கின்சு, ரிச்சர்டு லீகெய், ரிச்சர்டு இசுடாலாமன், ரிச்சர்டு ஒய்சுமென், இராபர்ட் - ஏ. ஹீன்லீன், இராபர்ட் இங்கர்சால், சானல் இடமருகு, சாக்ரட்டீசு, இசுடீபன் மோலிநிக்சு தாமஸ் பெய்ன், ஸ்டீவன் வெயின்பர்க், வெம்புல்லோ, வால்டேர் என இத்துணை நீண்ட பகுத்தறிவாளர் பட்டியலில் நம் அகப்புறச் சோம்பல் காரணமாகப் பெரியார் பெயர் விடுபட்டுள்ளது. ஆங்கில நூல்கள் எழுதும் தமிழர் அருகி வருவதால், உலகின் கவனத்துக்கு நாம் எத்தனையோ தகவல்களைக் கொண்டு செல்லத் தவறிவிட்டோம்.

இணையத்தில் உலகளாவிய அளவில் மக்கள் பயன்பாட்டில் முதலிடம் வகிக்கும் கலைக்களஞ்சியம் விக்கிபீடியா ஆகும். 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 13,000,000 கட்டுரைகளுடன் 260 மொழிகளில் மக்கள் பங்களிப்புடன் இந்தக் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டு வருகிறது. 75,000 பேர்கள் முனைப்புடன் இதில் பங்கேற்றுப் பதிவுகள் செய்கின்றனர். பதிவுகளைச் செம்மைப்படுத்த ஈடுபடுகின்றனர். நந்தமிழ் நாட்டறிஞர்களும் இதில் நாட்டங்கொள்ள வேண்டும். எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் ஈடுபாடு காட்டல் வேண்டும்.

ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் 2,986,241 கட்டுரைகளும் இடம் பெற்று நாளும் வளர்ந்த வண்ணமுள்ளது. ஆகத்து 10, 2009 காலை 5.00 மணி வரை 17,138,387 பக்கங்கள் வளர்ந்துள்ளன. 314,427,852 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. 846,016 கோப்புகள்

உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. 9,916,464 பதிவு செய்த பயனாளிகள் உள்ளனர். இதில் 1660 நிர்வாகிகளும் அடங்குவர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறிஞர்களும் ஆய்வாளர்களும் இதில் பயனாளிகளாகவும் நிர்வாகிகளாகவும் பங்கேற்று நம் ஆய்வுப் பதிவுகளை இடம் பெறச் செய்தல் வேண்டும். பிழைமலி கருத்துக்களைத் திருத்தம் செய்திடல் வேண்டும்.

விக்கிபீடியா பவுண்டேசன் 260 மொழிகளில் வெளியிடும் விக்கிபீடியோ தமிழ்ப் பதிப்பில் 18,950 கட்டுரைகளே இடம் பெற்றுள்ளன. செப்டம்பர் 2003இல் துவங்கி ஆகஃச்சு 10, 2009 வரை மேற்சொன்ன எண்ணிக்கையிலான பதிவுகள் உள்ளன. கட்டுரை எண்ணிக்கை அளவு கோல்படி தமிழ்விக்கிபீடியா 67 வது இடத்தில் உள்ளது. திராவிட மொழிகளில் கட்டுரைகள் எண்ணிக்கையில் தமிழ் இரண்டாவது இடத்தில் உள்ளது.

பண்பாடு என்ற பொதுத்தலைப்பில் கீழ் அன்றாட வாழ்வியல் (24) அழகியல் (1) இனங்கள் வாரியாகப் பண்பாடு (3) இலக்கியம் (1) ஈடுபாடுகள் (10) உடைகள் (3) உணவு (3) உறவு முறை (2) உறையுள் (2) உல்லாசம் (1) எதிர்ப்பண்பாடுகள் (0) கட்டற்றவை (3) கலைகள் (21) கல்வி (4) சமயங்கள் (20) பண்பாட்டுச் சின்னங்கள் (0) சுற்றுலா (3) சோதிடம் (0) தளவாடங்கள் (0) நகைகள் (0) நம்பிக்கைகள் (0) நாகரிகங்கள் (3) நாடுகள் வழியாகப் பண்பாடு (7) நாட்டுப்புறவியல் (2) பண்டிகைகள் (3) பரிசுகளும் விருதுகளும் (8) பெயர்கள் (1) பண்பாட்டுப் பொருளாதாரம் (1) மகிழ்கலை (1) மனித வளர்ச்சியியல் (2) பண்பாட்டு மானுடவியல் (0) மூடநம்பிக்கைகள் (1) மொழிகள் (25) வாழ்முறைகள் (0) விளையாட்டுகள் (20) விழாக்கள் (0).

வரலாறு என்ற பொதுத்தலைப்பில் அரசர்கள் (23) அறிவியல் வரலாறு (1) இனங்கள் வாரியாக வரலாறு (1) உலக நாடுகளின் வரலாறு (15) எதிர்ப்புப் போராட்டம் (7) கடற்படை வரலாறு (0) கண்டங்கள் வாரியாக வரலாறு (2) கலை வரலாறு (0) கால வரிசைப்படி வரலாறு (5) காலக்கோடுகள் (0) வரலாற்றுச் சான்றுகள் (2) தொல்லியல் (4) தொழில் நுட்ப வரலாறு (0) நாகரிகங்கள் (3) நிலவியல் காலங்கள் (0) நேரம் (1) பாரம்பரியக் களங்கள் (0) புரட்சிகள் (1) பேரரசுகள் (6) போர்கள் (6) மனித வரலாறு (1) மருத்துவ வரலாறு (0) மொழிகளின் வரலாறு (0) வரலாற்றாளர்கள் (1) விடுதலைப் புலிகளின் வரலாறு (0)

இப்படி பொதுத் தலைப்பும் துணைத் தலைப்பும் உட்பொருளும் உள்ளன. மக்கள் பங்கேற்புடன் உருவாகும் இந்தக் கலைக்களஞ்சியத்தில் தமிழ் அறிஞர்கள், அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் பங்கெடுக்கவே இல்லை என்று தெளிவாகிறது. வரலாற்றாளர் என்றுள்ள 1 கட்டுரை ஏதாவது தமிழ்

வரலாற்று அறிஞர் பற்றிப் பேசுமா என்று பார்த்தால் கிரேக்க ஆசிரியர் ஹேரோடோட்டஸ் பற்றிப் பேசுகிறது. ஆக வளராத கலைக்களஞ்சியம் அதில் நம் வரலாற்றைப் பதிவு செய்யாத கலைக்களஞ்சியம், தமிழ் விக்கிபிடியா! இது வளர்வதெப்போது? ஆங்கிலக் கலைக்களஞ்சியம் போல் பெருகுவது எப்போது? பிறமொழிகளில் பெயர்க்கப்படுவது எப்போது? கேள்விகள் தமிழறிஞர் சிந்தனையைக் கிளறட்டும்!

> ஆங்கில விக்கிபீடியாவில் பெரியார் ஈ.வெ. இராமசாமி பற்றிய பதிவில் பெரியார் ஈரோடு வெங்கட இராமசாமி செப்டம்பர் 17-1879இல் பிறந்து திசம்பர் 24, 1973இல் மறைந்தார் என்ற பதிவுக்குள்ளே பெரியார் என்ற பட்டம் தமிழிலும் கன்னடத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இராமசாமி, ஈ.வெ.ரா. தந்தை பெரியார், பெரியார் என்று அழைக்கப்படும் இவர் திராவிட சமூகச் செயலாளி ஆவார். தன்மதிப்பு இயக்கத்தையும் திராவிடர் கழகத்தையும் தோற்றுவித்தவர் ஆவார்

என்று அறிமுகப்படலம் நடக்கிறது.

> பகுத்தறிவுத் தன்மதிப்பு, பெண்ணுரிமைச் சாதிஒழிப்பு கொள்கைகளைப் பரப்புரை செய்தவர். தென்னிந்தியாவின் பூர்வீகக் குடிகளான பார்ப்பனரல்லாத திராவிட மக்களின் மீதான சுரண்டலையும் ஓரங்கட்டப்படுவதையும் இந்தோ - ஆரிய இந்தியாவின் மேலாண்மை யையும் எதிர்த்தார்'' என்ற பதிவு உள்ளது. அவர் பணி தமிழ்ச்சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்தது. சாதி அடிப்படையிலான புறக்கணிப்பை ஒழித்தது. தமிழ் வரி வடிவத்தில் மாற்றங்கள் கொண்டு வரக் காரணமானவர்

என்றும் தொடரும் பதிவில் அவர் மீது சில குறைகளும் கூறப்பட்டள்ளன. யுனெசுகோ நிறுவனம் பெரியாருக்களித்த விருதில்

> புதிய யுகத்தின் முன்னோடி, தென்கிழக்காசியாவின் சாக்ரட்டீசு, சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமைக்கும் மூட நம்பிக்கைக்கும், பொருளற்றச் சடங்குகளுக்கும் அடிப்படையில் அவர் கடும் பகைவராவார்

என்று கூறப்பட்டுள்ளது.

பெரியாரைப் போற்றுவோம்!

பெரியார் புகழை உலகெங்கும் பரப்புவோம்!!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00

632 உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் 35.00